

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'

அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு

அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

# சீனத்துச் சிங்காரி

358

# சீனத்துச் சிங்காரி

சின்ன அண்ணாமலை

எழுதிய சிறுகதைகள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

தமிழ்ப் பண்ணை லிமிடெட்
தியாகராய நகரம்......... சென்னை

முதற் பதிப்பு
1950 ஜனவரியில்
ஸ்ரீ. சின்ன அண்ணாமலையால்
பிரசுரிக்கப்பெற்றது.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 681
நன்கொடை எண்: 681

பரிசுப் பதிப்பு ரூ. 3—0—0

சாதாப் பதிப்பு ரூ. 2—0—0

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

தமிழ்ப் பண்ணை அச்சகம்,
தியாகராயநகரம்—சென்னை.

# அறிமுகம்

பேராசிரியர், அ. சீநிவாசராகவன்

நான் மந்திரவாதி இல்லை. இருந்தாலும் நீங்கள் நினைப்பது எனக்குத் தெரிகிறது. 'ஸ்ரீ. சின்ன அண்ணாமலையை எங்களுக்குத் தெரியாதா? அவரை அறிமுகம் செய்து வைக்க வரிந்து கட்டிக்கொண்டு வரவேண்டுமா ?' என்றுதானே நினைக்கிறீர்கள் ?

ஸ்ரீ. சின்ன அண்ணாமலையை உங்களுக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அருமையான புத்தகங்களுக்கு ரம்மியமான தோற்றமும், கட்டிடமும் தந்து தமிழ் நாட்டில் உலாவவிடும் 'தமிழ்ப்பண்ணை' அவருடைய சிருஷ்டி. பண்ணையில் உடலைப் பேணும் தானியங்கள் உதிக்கின்றன என்றால், 'தமிழ்ப் பண்ணை'யில் உயிரை வளர்க்கும் தமிழ் நூல்கள் விளைகின்றன. இந்தப் 'பண்ணை'யில் புத்தகங்களைப் பயிர்செய்யும் பதிப்பாளர் அவர். 'தமிழ்ப் பண்ணை'யின் பெயர் தமிழ்ப் புத்தகம் படிக்கும் எல்லோருக்கும் தெரியும். அதன் உரிமையாளரான ஸ்ரீ. சின்ன அண்ணாமலையின் பெயரும் நன்றாகத் தெரிந்த பெயரே.

ஸ்ரீ. நா. அண்ணாமலை, 'சின்ன' அண்ணாமலையான ரஸமான கதையும் உங்கள் காதில் விழுந்திருக்கும்.

அவருக்குச் 'சின்னப்' பட்டம் வழங்கிய பெருமை பெரியவரான ராஜாஜியைச் சேர்ந்தது என்பதை யும் தெரிந்திருப்பீர்கள். இவ்வளவு நன்ருக உங்க ளுக்குத் தெரிந்த ஒருவரைத்தான் அறிமுகப் படுத்த முன் வந்திருக்கிறேன். முகத்தைச் சுளிக்க வேண் டாம். என்பேரில் என்ன தவறு? தெரிந்தவரை அறிமுகப்படுத்துவதுதானே சம்பிரதாயம்!

ஆனல் இந்த அறிமுகம் வெறும் சம்பிரதாயப் பேச் சன்று. கோயில்களை எல்லோருக்கும் திறந்துவிட்டு 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற பெருமை யைத் தமிழ்நாடு நிலைநாட்டியதல்லவா? அந்தக் காலத்தில், சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை தம்மு டைய கோஷ்டியாரோடு தென்னுட்டுக் கோயில் களுக்கு யாத்திரையாகச் சென்றது உங்களுக்கு ஞாபகமிருக்கும். இந்த யாத்திரையைப் பற்றி ஹாஸ்யம் கலந்த நளினமான தமிழில் 'கல்கி'யில் சில கட்டுரைகள் வெளி வந்தன. இதற்கு முன் பதிப்பாளர் ஸ்ரீ. சின்ன அண்ணமலையை மட்டுமே எனக்குத் தெரியும். இக் கட்டுரையின் மூலமாகத் தான் எழுத்தாளர் ஸ்ரீ. சின்ன அண்ணமலை எனக்கு அறிமுகமானுர். இதன் பிறகு ராஜாஜி வங்காள கவர்னர் பதவியை ஏற்றுக்கொண்ட வைபவத்தைப் பற்றி ஸ்ரீ. சின்னஅண்ணமலை எழுதிய கட்டுரைகள் 'நன்ருக எழுதுகிருர்' என்ற என் கருத்தை உறு திப் படுத்தின. இப்போது இந்தப் புத்தகத்தில் உள்ள சிறு கதைகளை நான் படித்தபோது 'பேஷ், கற்பனையும் இவருக்குக் கை வருகிறது' என்று எண்ணி மகிழ்ந்தேன்.

ஆமாம், கதைகளில் கற்பனையின் மெருகு—அது தானே கதையின் ஜீவநாடி—நெடுகிலும் காணப்படு கிறது. சம்பவங்களை வகுப்பதில்தான் ஸ்ரீ. சின்ன அண்ணாமலையின் கற்பனை அதிகமாக முனைகிறது. ஆகவே, கதைகளுக்கு ஓட்டமும், விறுவிறுப்பும் ஏற் பட்டுவிடுகின்றன. இருந்தாலும், பாத்திர சிருஷ்டி யிலும் ஆசிரியருக்கு வெற்றி இல்லாமல் இல்லை. 'சீனத்துச் சிங்காரி' என்ற முதல் கதையில், மான் குட்டி போல் துள்ளிக் கொண்டு வந்து நம்மைச் சந் திக்கிருள் தன்பூச்சோ என்ற சீனச் சிறுமி; 'குண் டலகேசி' என்ற கதையில், அதிர்ச்சி தாங்காமல் மெல்லிய பூவைப்போல் வாடி விடுகிருள் பூவாயி என்ற தமிழ்ப் பெண். இவர்கள் இருவரும் கதை களில் வருணிக்கப் பெறும் நிகழ்ச்சிகளின் மூலமாக நிகழ்ச்சிகளைவிட முக்கியம் பெற்று விடுகிருர்கள்.

திருகல், கோணங்கி, ஆவேசக் கோளாறு இவை யொன்றுமில்லாத தெளிந்த நடை; சுவை நிரம்பிய சம்பவங்கள்; அவற்றையொட்டி மனித இயல்பின் பொது அம்சங்களின் பிரதிபலிப்பு—இவற்றை இந் தக் கதைகளில் நான் காண்கிறேன். நீங்களும் காண்பீர்கள் என்பது என் நம்பிக்கை.

விவேகானந்தர் கல்லூரி,
மயிலாப்பூர், சென்னை
22—1—'50.

அ. சீ. ரா.

# சமர்ப்பணம்

மீனுக்குத் தண்ணீரிடத்திலும், பக்தனுக்கு ஆண்டவனிடத்திலும் இருக்கும் அன்புபோல நான் அன்புகொண்டிருக்கும் எனது வணக்கத்துக்குரிய 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

குற்றால மலையில் ஒரு நாள் 'குளு குளு'வென்று மலைக் காற்று மிதந்து வரும் ரம்யமான நேரம். ஓர் அழகிய பங்களாவில் கல்கி ஆசிரியர் தலை முதல் கால் வரையில் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். அவருக்கு அன்று கொஞ்சம் ஜுரம்.

அந்த அதிகாலையில் அவருக்குப் பக்கத்தில் நான் போய் உட்கார்ந்தேன். அதை அறிந்தவுடன் அவர் எழுந்து உட்கார்ந்தார். "கட்டுரை எழுதியாகி விட்டதா?" என்று கனிவுடன் கேட்டார். நான் தயாராக வைத்திருந்த கட்டுரையை அவரிடம் கொடுத்தேன்.

முதல் நான்கு வரிகளைப் படித்தவுடன் கட்டுரையைப் பக்கத்திலிருந்த மேஜைமீது வைத்து விட்டு

ஒன்றும் பேசாமல் மறுபடியும்போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்து விட்டார்.

எனக்கோ சொல்ல முடியாத ஏமாற்றம் உண்டாயிற்று. ஆயினும் அதை வெளியில் காட்டிக்கொள்ளக்கூடாதென்று அடக்கிக் கொண்டு, "ஏன் ஸார் உடம்பு இப்பொழுது எப்படியிருக்கிறது?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், தாங்கள் வருமுன்புதான் ஜுரம் நின்றிருந்தது. இப்பொழுது தங்கள் கட்டுரையைப் படித்ததும் போன ஜுரம் திரும்பி வந்துவிட்டது" என்றார்.

என்ன ஸார், வேடிக்கை செய்கிறீர்கள். என் கட்டுரையைப் படித்தால் எப்படி ஜுரம் வரும்?" என்றேன், நான் ஒன்றும் புரியாமல்.

"ஆம் ஐயா, நீரெல்லாம் இப்படி எழுத ஆரம்பித்தால் ஜுரமும் வரும், அதற்கு மேலும் வேறு எது இருந்தாலும் வரும். உங்கள் கட்டுரையை எடுத்து வாசியுங்கள்; அப்போது நான் சொன்னது சரியா, இல்லையா என்பது தெரிய வரும்" என்றார்.

"சரி" என்று நானும் எனது கட்டுரையை எடுத்தேன். கட்டுரை பிரயாணம் சம்பந்தமானது. அதை நான் கீழ்க்கண்டவாறு ஆரம்பித்திருந்தேன்:-
"கட்டுரையாகட்டும், கதையாகட்டும் விருவிருப்பாகவும், ஓட்டமாகவும் இருக்க வேண்டுமென்று

இலக்கிய சிகாமணிகள் கூறிவந்திருக்கிருர்கள். ஆகையால், என்னுடைய கட்டுரையைத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஆரம்பிக்கிறேன்.''

மேற்கண்ட வரிகளை நான் வாசித்து முடித்ததும் "போதும் நிறுத்துங்கள்'' என்று 'கல்கி' ஆசிரியர் சொன்னுர்· நானும் வாசிப்பதை நிறுத்தி விட்டு அவரை நோக்கினேன்.

"இப்பொழுது சொல்லுங்கள், இம்மாதிரி நீங்களெல்லாம் எழுத ஆரம்பித்து விட்டால் என்னைப் போன்றுள்ளவர்களுக்கு ஜுரம் வருமா, வராதா? சொல்லுங்கள் ஐயா, சொல்லுங்கள்'' என்று சிரித்தார்.

அப்பொழுதுதான் எனக்கு விஷயம் புரிந்தது! அவர் எவ்வளவு பெரிய எழுத்தாளர்! அந்த இமய மலையின் முன்பு நான் ஒரு பரங்கிமலைதான்! ஆயினும் அவர் அன்று கொடுத்த உற்சாகமும், இன்று வரை அவர் என்மீது அன்பு பாராட்டி செய்து வரும் காரியங்களுமே என்து உற்சாகத்திற்குக் காரணம். என்னுல் கதைகளும், கட்டுரைகளும் எழுத முடியும் என்ற நம்பிக்கையை எனக்கு ஊட்டியவரும், தான் போகும் இடங்களுக்கெல்லாம் என்னையும் கூட்டிக் கொண்டு சென்று ஆயிரம், பதினுயிரம் பேர்களுக்கு முன்னுல் என்னை உற்சாகப் படுத்தி, பலர் தெரிந்து கொள்ளக்கூடிய பேச்சாளனுகவும் ஆக்கியவர் 'கல்கி' ஆசிரியர் அவர்கள்தான் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

என்போன்ற எத்தனையோ இளைஞர்களைக் 'கல்கி' ஆசிரியர் தன்னுடைய 30 ஆண்டு சேவையின் மூலம் தேச பக்தர்களாகவும், சிறந்த நாவன்மை படைத்தவர்களாகவும், ஹாஸ்ய உள்ள முடையவர்களாகவும் சங்கீத வித்வான்களாகவும், சிறந்த நடிகர்களாகவும் இலக்கிய ருசி யுள்ளவர்களாகவும் ஆக்கித் தமிழ் நாட்டை வளப்படுத்தி யிருக்கிறார்.

அப்படி அவர் உருப்படியாக்கிய இளைஞர்களில் நான் கொஞ்சம் அதிர்ஷ்டக்காரன்! ஏனெனில் நான் அவரிடம் ரொம்பவும் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். அவர் என்னிடம் தாயைப் போன்ற அன்பும், தந்தையைப் போன்ற பரிவும், ஆசானைப் போன்ற அறிவும் காட்டி என்னை முன்னணிக்குக் கொண்டு வந்தவர். ஆகவேதான் என் நன்றியின் அறிகுறியாக எனது முதல் புத்தகத்தை 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

—சின்ன அண்ணாமலை

# பொருள் அடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சீனத்துச் சிங்காரி | ... | 1 |
| 2. | சங்கரப்பதிக் கோட்டை | ... | 18 |
| 3. | குண்டலகேசி | ... | 72 |
| 4. | பாம்புக் கோயில் | ... | 92 |
| 5. | காதலும் கருப்பையாவும் | ... | 111 |
| 6. | ரசூலா | ... | 131 |

மதுரை
அவ்வை
தி.க. சண்முகம்
தமிழியல்

# சீனத்துச் சிங்காரி

சீசீசீசீனனனனத்த்த்த்துதுதுதுசிசிசிசிங்ங்ங்காகாகாகாரிரிரிரி

ஜப்பானியர்கள் மஞ்சூரியாவைக் கைப்பற்றிய தினத்தை நான் என்றென்றும் மறக்க முடியாது. ஏனெனில் அன்றுதான் என் அருமைத் தன்பூச்சோவையும் காலதேவன் கைப்பற்றிக் கொண்டான்!

தன்பூச்சோ என்ற அந்தச் சீனத்துச் சிங்காரி என்பூச்சோவாக என் இதயத்தில் இடம் கொண்ட தினமும் அதுதான். மஞ்சூரியாவை ஜப்பான் கைப்பற்றியதும், அன்றையத் தினம் சீனமக்களின் இதயத்தில் ஒரு பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. மலாய் நாட்டிலும் அந்தக் கொந்தளிப்பு பெரிய ஆவேசமாக மாறி ஒரு பெரும் இயக்கமாகவே உருவெடுத்தது. மேற்படி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஜப்பான் சாமான்களைப் பகிஷ்கரிப்பதென்று ஊர்வலமாகக் கிளம்பினார்கள். பள்ளி மாணவர்களும், மாணவிகளும் பள்ளிக்கூடங்களைப் பகிஷ்கரித்தார்கள். அப்பொழுது என்னுடன்

பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அந்தச் சீனத்துச் சிங்காரி தன் பூச்சேசாவும், அந்த இயக்கத்தில் கலந்து கொண்டாள். அவளே அநேகம் சீனப் பெண்களைக் கூட்டிக் கொண்டு கடை கடையாக நுழைந்து, ஜப்பான் சாமான்களை வெளியில் எடுத்துப் போட்டுக் கொளுத்தினுள். போலீஸ் படை அதைத் தடுத்தனர். அவள் கேட்கவில்லை. மேலும் மேலும் தன் தோழிகளை ஏவி விட்டாள். அதனுல் போலீஸார் கண்ணீர்ப் புகையை உபயோகித்தனர். உடனே தன்பூச்சேசாவும் அவளுடைய தோழிகளும் கோபம் கொண்டு கண்ணுடிச் சாமான்களைப் போலீஸார் மீது விட்டு எறிந்தனர். அதன் காரணமாக சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் காயமடைந்தார். பிறகு போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் வலுத்தது. மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் தன்பூச்சேசா படுகாயப் பட்டாள். அவளை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து போட்டார்கள். மூன்று நாள் கழித்துத் தான் கண் விழித்தாள். நான் அவள் அருகிலே இருந்தேன். என்னைப் பார்த்தவுடன் அவளுடைய முகம் மலர்ந்தது. எதோ பேச வாயெடுத்தாள். பாவம், இதற்குள் தன்

பூச்சோவின் நாடிகள் அடங்கி விட்டன; அவள் அந்திய காலம் நெருங்கி விட்டது; பேச முடியாமல் திணறினுள்; என்னை உற்றுப் பார்த்து விட்டுக் கண்களை மூடிக் கொண்டாள்; மூடிய கண்களைப் பிறகு திறக்கவே இல்லை. ஜப்பானிய யமன் மஞ்சூரியாவை விழுங்கப் போக, கால தேவன் தன் பூச்சோவை விழுங்கி விட்டான். அந்தத் துயரச் சம்பவத்திலிருந்து விடுபட்டு ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டேன்.

---

**வீடு வரும் வரையிலும், நானும் பூச்சோவும் வாழ்ந்த பள்ளிக்கூட வாழ்க்கை என் கண்முன்னே தென்பட்டது.**

---

டெலுக்கான்சன் என்னும் அழகிய நகரம், அற்புத சௌந்தர்யம் நிறைந்த மலாய் நாட்டின் மத்தியில் இருக்கிறது. அந்த ஊரில் எல்லா தேசத்து மக்களும் வந்து குடியேறி யிருக்கிருர்கள். பொதுவாக மலாய் நாட்டில் சீனர்கள் தான் அதிகம். டெலுக்கான்சனிலும் சீனர்களே அதிகமாய் வசிக்கின்றனர்.

என்னுடைய மாமாவுக்கும் அங்கே ஒரு வட்டிக் கடை இருக்கிறது. மேற்படி கடைக்கு என் மாமா

சுமார் பதினான்கு வருஷத்திற்கு முன்பு மலாய் நாட்டுக்குப் போகும் போது என்னையும் கூட்டிக் கொண்டு போனார். "ஆங்கிலோ சைனீஸ் ஸ்கூலில்" அங்கு சேர்க்கப்பட்டு படித்துக் கொண்டிருந்தேன்.

ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கும் பள்ளிக்கூடம் அது. பல தேசத்துக் குழந்தை களும் படித்ததால், அந்தந்த தேசத்துக் குழந்தைகள் அவரவர்கள் தேசத்துக்குரிய உடையுடன் பள்ளிக்கூடம் வருவார்கள். அந்தக் காட்சி பார்ப்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கும்.

என் வகுப்பில் 'தன்காக்கி' என்ற சீன இளைஞன் ஒருவன் படித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, தன்காக்கி மெதுவாக என்னுடன் பேச்சுக் கொடுத்தான். தன்காக்கியைப் 'பேசாதே' என்று எச்சரித்தேன்; அவன் கேட்க வில்லை. ஆசிரியர் கவனித்துவிடப் போகிறாரே என்ற பயத்தில், மற்றொரு முறையும் எச்சரித் தேன்; ஆசிரியர் நான் பேசியதைக் கவனித்து விட்டார்.

அவர் ஒரு பொல்லாத பாதிரியார். கருணை மிக்க ஏசுநாதரின் சிஷ்யரென்றாலும், அவரைப் போன்ற கடுமையான சுபாவமுடையவர்களைக் காணமுடியாது.

"இங்கே வா" என்று உறுமினார். நான் 'கிடுகிடு' என்று நடுங்கிப் போனேன். கை கால்கள் நடுங்க, அவர் முன் சென்று நின்றேன். வேறு எந்த விசாரணையும் செய்யாமல், பிரம்பினால் என்னைப் 'பளீர் பளீர்' என்று நன்றாக விசாரித்து விட்டு, வகுப்புக்கு வெளியில் நிற்கச் சொன்னார். நான் வலி தாங்க முடியாமல் அழுது கண்ணீர் விட்டவாறு வெளியில் சென்று விட்டேன். நான் செய்யாத குற்றத்திற்கு, விசாரணை இல்லாமல் இவ்வளவு கடுமையான தண்டனை கிடைத்து விட்டது! அந்த வகுப்பிலிருந்த அத்தனை மாணவர்களும் மாணவிகளும் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்கள். ஏனெனில் நான் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்பவன்.

பாவம், அவர்களால் என்ன செய்ய முடியும்? தன்காக்கி குனிந்ததலை நிமிரவில்லை. எனக்கோ அவன் பேரில் அபாரக் கோபமாக இருந்தது.

பள்ளிக்கூடம் விட்ட பிறகு, அந்தப் பயலை நொறுக்கி விடுவது என்று முடிவு செய்து கொண்டேன்.

ஒரு வழியாக நான் அழுது ஓய்வதற்கும், பள்ளிக்கூடம் விடுவதற்கும் சரியாக இருந்தது. அந்தக் கடுவம் பூனைப் பாதிரியார் அப்பால் சென்றதும், நான் 'விடு விடு' வென்று வகுப்புக்குள் நுழைந்தேன். உடனே என்னை மாணவர்களும், மாணவிகளும் சூழ்ந்து கொண்டார்கள். நான் அவர்களைத் தள்ளிக் கொண்டு சென்று தன்காக்கியின் சட்டையைப் பிடித்து இழுத்து, "உன்னால் தானே எனக்கு அடி விழுந்தது?" என்று சண்டைபிடித்தேன். அவனால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இதற்குள் ஒரு சீனப் பெண் அங்கு ஓடி வந்தாள். வந்தவள் என் கையைத் தள்ளி விட்டு, "ஏன் என் அண்ணனோடு சண்டை போடுகிறாய்?" என்று கேட்டாள். உடனே பக்கத்திலிருந்தவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள்; அதைக் கேட்டு அவளும் ரொம்பவும் பரிதாபப்பட்டாள்; நான் அடிபட்ட இடங்களில் தடவிக்கொடுத்தாள்; அப்போதே என் கோபம் எல்லாம் பறந்து போய்விட்டது.

தன்காக்கியையும் மிகவும் சினந்து கொண்டாள். பின்னர் என் கையையும், தன்காக்கிக் கையையும் ஒன்றுகச் சேர்த்து வைத்தாள். உடனே அங்கு கூடி இருந்த மாணவ மாணவிகள் கரகோஷம் செய்ய, எங்களுடைய நட்பு மீண்டும் தொடங்கியது.

எல்லோரும் வகுப்பை விட்டு வெளியே வந்தோம். தன்காக்கியின் கார் வந்திருந்தது. அதில் ஏறிக்கொள்ளும்படி தன்காக்கியும், அவன் தங்கையும் கெஞ்சினுர்கள். நானும் காரில் எறிக் கொண்டேன். காரில் செல்லும்போது தன் காக்கியின் தங்கையைப் பார்த்து, "உன் பேர் என்ன?" என்று கேட்டேன். "ஏன் என்னே உனக்குப் பிடிக்கிறதா?" என்று பதில் கேள்வி போட்டாள் அவள்.

"ஓ எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது; அதனுல்தான் கேட்கிறேன்" என்றேன். "என் பெயர் தன்பூச்சோ" என்று கூறிவிட்டுச் சிரித்தாள். நானும் இரண்டு மூன்று தடவை "தன்பூச்சோ" "தன்பூச்சோ" என்று சொல்லிப் பார்த்துக்கொண்டேன்.

"நீ ரொம்பக் கெட்டிக்காரன்; என்னை மயக்கி விட்டாயே!" என்று அவள் என் கன்னத்தில் ஒரு தட்டுத் தட்டினாள்.

உடனே தன்காக்கி அவளைப் பார்த்து, "பாவம் இப்போது தான் என்னால் நன்றாக அடிபட்டு வந்திருக்கிறான், நீவேறு கன்னத்தில் அடிக்கிறாயே, வலிக்காதா?" என்றான் சிரித்துக் கொண்டே.

உடனே தன்பூச்சோ 'கல கல' வென்று சிரித்துவிட்டு, "அதெல்லாம் அந்தக் கடுவம் பூனைப் பாதிரியார் அடித்தால்தான் வலிக்கும்; நான் அடித்தால் வலிக்கவே வலிக்காது" என்று கூறிவிட்டு, என்னைப் பார்த்து "வலிக்கவில்லையே?" என்று கேட்டாள். நான் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தேன். அதற்குள் கார் அவர்களுடைய வீட்டை அடைந்தது.

அவர்களுடைய தகப்பனார் ரொம்ப சரள சுபாவம் படைத்தவராக இருந்தார். தன்பூச்சோ ஓடிப்போய் தன் அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அப்பா! என்னுடன் ஒரு 'கிள்ளங்கிப் பையன்' வந்திருக்கிறான், பார்த்தாயா?" என்றாள்.

தமிழர்களைப் பொதுவாக மலாய் நாட்டிலுள்ளவர்கள் ‘கிள்ளங்கி’ என்றுதான் அழைப்பார்கள். ஒருகாலத்தில் கலிங்கன் என்ற தமிழ் அரசன் மலாய் நாட்டின் மீது படை எடுத்ததன் காரணமாகத் தமிழர்கள் எல்லோரையும் மலாய் நாட்டில்வசிப்பவர்கள் “கலிங்கி, கலிங்கி” என்று அழைத்து, அது கடைசியாகக் ‘கிள்ளங்கி’ என்று மருவி விட்டது! என்று சொல்லுகிருர்கள்.

“இந்தக் கிள்ளங்கிப் பையன் யார்?” என்று தன்பூச்சோவின் தகப்பனுர் கேட்டார்.

தன்பூச்சோ கொஞ்சிக் கொண்டே நடந்த விவரத்தைச் சொல்லி என்னைப்போலவே அழுதும் காட்டினுள். பிறகு என்னைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினுள். அப்பப்பா, ரொம்பப் பொல்லாத பெண் அவள்!

பிறகு தன்பூச்சோவும், தன்காக்கியும் என்னை என் வீட்டில் கொண்டு வந்து விட்டுச் சென்ருர்கள். அது முதல் அவர்களிருவரும் தினமும் பள்ளிக்கூடம் போகும்போது என் வீட்டுக்கு வந்து என்னையும் காரில் அழைத்துச் செல்வது வழக்கமாயிற்று. நானும் அவர்களுடன்

சந்தோஷமாகப் போவேன். பள்ளிக்கூடத்திலும் நாங்கள் மூவரும் ஒன்ருகவே திரிவோம். பள்ளிக்கூடம் விட்ட பிறகும் ஒன்ருகவே விளையாடுவோம்.

பள்ளிக்கூடத்தில் ஒரு நாடக சபை உண்டு. மேற்படி சபையில் மாதத்திற்கு ஒரு முறை நாடகம் போடுவார்கள். ஆசிரியர்களும், மாணவ மாணவிகளும் அதில் நடிப்பார்கள். மேற்படி நாடகங்களை நாங்கள் மூவரும் தவருமல் பார்த்து விட்டு வருவோம். ஒரு நாள் நடந்த நாடகத்தில் கிழவர் வேஷம் போட்ட ஒருவர் சரியாக நடிக்கவில்லை. இதை நான் தன்பூச்சோவிடம் சொன்னேன். அவள் உடனே, "இதைவிட நீ நன்ருக நடித்து விடுவாயோ?" என்று என்னைக் கேலி செய்தாள். "சரி வீட்டுக்கு வா, நன்ருக நடித்துக் காண்பிக்கிறேன்" என்று சொன்னேன். வீட்டுக்குப் போனவுடன், தன்பூச்சோ "எங்கே, நடி பார்க்கலாம்" என்று என்னைத் தூண்டினுள். எனக்கோ ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. உடனே அவளுக்கும், தன்காக்கிக்கும் கிழவனுக நடித்துக் காண்பித்தேன். என்னை அறியாமல் என்னுடைய நடிப்பு நன்ருக அமைந்து விட்டது.

தன்பூச்சோவும், தன்காக்கியும் ஒரே அதிசயத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்.

மறுநாள் வழக்கம் போல மூவரும் பள்ளிக்கூடம் சென்றோம். தன்பூச்சோ பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தவுடன், மான் குட்டி போலத் துள்ளிக் கொண்டு தன் தோழிகளிடம் ஓடினாள். அவர்கள் எல்லோரும் அவளை நோக்கி, "என்ன, அவரை விட்டு விட்டு ஓடி வந்து விட்டாயே, ஐயோ பாவம்! அதோ பார், நீ அருகில் இல்லாமல் தவிக்கிறார்'' என்றெல்லாம் கேலி செய்தார்கள். பூச்சோ அதையெல்லாம் லட்சியம் செய்யாமல், அவர்களிடம் என் நடிப்பைப்பற்றிப் பிரமாதமாகக் கூற ஆரம்பித்துவிட்டாள். அவ்வளவுதான்! மற்றப் பெண்கள் அனைவரும் என்னிடம் படை எடுத்து வந்துவிட்டார்கள். அவர்களில் ஸ்வீடிஷ் தேசத்துப் பெண்ணும் ஒருத்தி. ரொம்பவும் வாயாடி. அவளுக்கு யாரை யாவது பரிகாசம் பண்ணாமலிருந்தால் தலை வெடித்துப்போகும். எல்லோரையும் தள்ளிக் கொண்டு அவள்தான் முன்னே வந்தாள்.

"ஐயா நடிக சிகாமணியே! தங்களுடைய புகழைத் தன்பூச்சோ சொல்லக் கேட்டோம்;

எங்கள் மீதும் கொஞ்சம் கருணைவைத்துநடித்துக் காட்டக் கூடாதா?'' என்று கொஞ்சுவது போல் பாவனை செய்து, என் முகவாய்க்கட்டையைப் பிடித்துக் கொண்டாள். உடனே எல்லா மாணவிகளும் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். எனக்கோ வெட்கமாகப் போய்விட்டது. தன்காக்கியைப் பரிதாபமாகப் பார்த்தேன். அவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு விட்டான். எல்லோருமாகச் சேர்ந்து தூண்டியதுடன், தன்பூச்சோவும் வேறு ஒருவருக்கும் தெரியாமல் தன் கண்களைச் சிமிட்டி அவசியம் நடிக்க வேண்டுமென்று ஜாடை காட்டினாள்.

தப்புவதற்கு வேறு வழியின்றி கிழவனாக நடித்துக்காண்பித்தேன். சொந்தக் கற்பனைகளைக் கொஞ்சம் சேர்த்து, முன் தினத்திற்கு அதிகப் படியாகவே நடித்தேன். சுற்றியிருந்த பெண்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி ஆனந்த பரவசமடைந்தனர். ஒவ்வொருவரும் என்னைக் கையைப் பிடித்துக் குலுக்கி, அளவுக்கு மீறிப் புகழ்ந்தார்கள். அவர்கள் புகழும்போது என்னைவிடப் பூச்சோவிற்குத்தான் பிரமாத மகிழ்ச்சி ஏற்

பட்டது. இதை அவள் முகம் எடுத்துக் காட்டியது; அவள் பூரித்துப் புளகாங்கிதமடைந்து போனுள். நான் இப்படிக் கீழே நடித்துக் கொண்டிருந்ததை மேல் மாடியிலிருந்த பிரின்ஸிபால் கவனித்து விட்டார் போலும்!

அந்த பள்ளிக்கூடத்தில் பிரின்ஸிபாலாக இருந்தவருடைய முகத்தில் நாங்கள் ஒரு நாளும் சிரிப்பைக் கண்டதே யில்லே! நாங்கள் ஏதாவது குற்றம் செய்தால் எங்களே அடிப்பதற்காக மட்டுமே அந்தப் பிரின்ஸிபாலே நியமித்திருக்கிருர்கள் என்றுதான் மாணவர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். ஏனெனில், அடிபட வேண்டிய நேரம்தவிர, வேறு எந்த நேரத்திலும் அவரை நாங்கள் சந்திக்க முடியாது. ஆகையால் பிரின்ஸிபால் என்ருல் 'எங்களுக்கெல்லாம் அடிகொடுப்பவர்' என்றுதான் நாங்கள் எண்ணிக்கொண்டிருந்தோம்.

பள்ளிக்கூடத்துப் பணியாள் வந்து என்னேப் பிரின்ஸிபால் கூப்பிடுகிருர் என்று சொன்னதும், எனக்குச் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

"சரி, நாம் பள்ளிக்கூடத்தில் எல்லோருக்கும் மத்தியில் நடித்துக் கூத்தாடியதற்குத் தண்டனே

கொடுக்கவே பிரின்ஸிபால் கூப்பிடுகிறார்" என்று பயந்து போனேன். முன்பு ஒரு சமயம் தன்காக்கியினால் நன்றாக அடிபட்டது என் ஞாபகத்திற்கு வந்தது. இப்பொழுது அவன் தங்கையினால் நன்றாக அடிபடப் போகிறேன்.

தன்பூச்சோவுக்கும் துக்கம் தாங்க முடியாமல் அழ ஆரம்பித்து விட்டாள். அதற்குள் சேவகன் என்னைப் பரபரவென்று பிரின்ஸிபாலிடம் இழுத்துக்கொண்டு போனான். அப்பொழுது தன்பூச்சோ 'ஓ' வென்று ஒரே சத்தமாகக் கூப்பாடு போட்டாள். அதைக் கேட்டு அவளுடைய தோழிகளும் மற்ற மாணவ, மாணவிகளும் அவளைச் சுற்றிக் கூடிவிட்டார்கள்.

நான் பிரின்ஸிபால் அறையின் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

"இது என்ன கூச்சல்?" என்று அதிகாரத் தொனியில் கேட்டார் பிரின்ஸிபால்.

உடனே தன்பூச்சோ முன்னேவந்து, "நாங்கள் எல்லோரும்தான் அவரை நடிக்கச் சொன்னோம். ஆகையால் குற்றவாளி நாங்கள்தான். எங்களைத் தான் தண்டிக்க வேண்டும்" என்றாள்.

பிரின்ஸிபால் தன் மூக்குக் கண்ணாடியைக் கையால் தூக்கிவிட்டுக்கொண்டு, தன்பூச்சோவை வேடிக்கையாகப் பார்த்துவிட்டு, "எதற்காக உங்களைத் தண்டிக்க வேண்டும்?" என்றார்.

"நாங்கள் கேட்டுக் கொண்டதால் தான் அவர் நடித்தார்; ஆகையால் எங்களைத்தானே தண்டிக்கவேண்டும்?" என்றாள் தன்பூச்சோ.

"நான் யாரையும் தண்டிக்க விரும்ப வில்லையே!" என்றார் பிரின்ஸிபால்.

இதைக் கேட்டவுடன் அங்கு கூடியிருந்த மாணவ மாணவிகள் ஒருவரை யொருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டனர்.

"பின் ஏன் அவரை இங்கு இழுத்துவரச்சொன்னீர்கள்?" என்று தன்பூச்சோ கேட்டாள்.

"நான் இழுத்து வரச் சொல்லவில்லை, அழைத்துக் கொண்டுதான் வரச் சொன்னேன்; அவன் மிகவும் நன்றாக நடிக்கிறான்; சிறந்த நடிகன் ஒருவன் நமது பள்ளிக்கூடத்தில் இருப்பதை இன்றுதான் அறிந்தேன்; அவனை நமது நாடகம் ஒன்றில் நடிக்கச் செய்யவேண்டுமென்

பதற்காகவே கூட்டி வரச்சொன்னேன்" என்ருர். இதைக் கேட்டு நானும், தன்பூச்சோவும் மற்றவர்களும் திகைத்துப் போனேம். இது வரையில் பிரின்ஸிபாலின் அறைக்குச் சென்ற மாணவன் அடிபடாமல் திரும்பி வந்தது அந்தப் பள்ளிக்கூடத்துச் சரித்திரத்திலேயே அதுதான் முதல் தடவை. ஒரு நொடியில் அங்கு கூடியிருந் தவர்களின் முகங்களெல்லாம் மலர்ந்தன. "ஹிப் ஹிப் ஹுரே" என்று கோஷம் போட் டார்கள். தன்பூச்சோ ஓடி வந்து என் கழுத் தைக் கட்டிக்கொண்டாள்.

மறுநாள் பிரின்ஸிபால் ஏற்பாடு செய்த நாடகத் துக்கு ஒத்திகை ஆரம்பமாயிற்று. மேற்படி நாடகத்துக்கு பிரின்ஸிபால் எனக்குக் கதா நாயகன் வேஷம் கொடுத்து நடிக்கச் செய்தார். கதா நாயகியாகத் தன்பூச்சோ நடிக்கத் தானு கவே முன் வந்தாள். அந்த வருஷம் மாணவர் களால் நடிக்கப்பட்ட நாடகத்துக்கு ஊர்ப்பிரமு கர்களும், மாணவர்களுடைய பெற்ருேர்களும் விஜயம் செய்தார்கள். என்னுடைய நடிப்பை யும், தன்பூச்சோவின் கானத்தையும் கேட்டுச் சபையோர் சொக்கிப் போனுர்கள்.

கடைசியில் நானும் தன்பூச்சோவும் காரில் வீட்டுக்குச் சென்ருேம். அப்போது பூச்சோ சொன்ஞள் "இன்று நாம் நடித்தது நாடகத்திற்கு மட்டுமல்ல; வாழ்க்கையில் என்றும் உனக்கு 'நான்'தான் எனக்கு 'நீ'தான் என்று சொல்லிச் சிரித்து என்னுடன் நெருங்கி உட்கார்ந்தாள்.

---

**இந்தச் சம்பவங்கள் யெல்லாம் மாறி மாறி என் மனதில் தோன்ற பித்துப் பிடித்தவன்போல வீடு வந்து, சேர்ந்தேன்.**

---

என் மாமா "என்னடா ஒரு மாதிரியாக இருக்கிருய்?" என்று கேட்டார். "ஒன்றுமில்லை மாமா, ஊர் ஞாபகம் வந்து விட்டது; நான் அடுத்த கப்பலுக்குப் புறப்படவேண்டும்" என்று கூறினேன்.

"இது என்னடா, அதிசயமாக இருக்கிறது! உன்னுடைய சீனத்துச் சிங்காரியை விட்டு விட்டுப் போக எப்படி மனந் துணிந்து விட்டாய்?" என்று கேட்டார்.

"ஆம் மாமா, அவள் என்னைவிட்டுப் பிரிந்து போய் விட்டாள் இனி எனக்கு இங்கென்ன வேலை?" என்று நான், பதில் கூறியபோது என் குரல் தளதளத்தது. கண்களில் நீர் பொங்கி வந்தது.

# சங்கரப்பதி கோட்டை

சசசங்ங்ங்கககரரரப்ப்ப்பபபதிதிதி கோகோகோட்ட்டைடை

பொழுது புலர்ந்தது!

பொன்னழகி வருவாளோ? வருவாளோ? என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். பன்மையில் சொன்னதினால் மற்றொருவர் யார் என்பதையும் சொல்லிவிடவேண்டும். என்னுடன் சங்கரப் பதிக் கோட்டையில், தலைமறைவாக முனியய் யாவும் இருந்தான்.

நான்கு தினங்களாக நானும் அவனும் சங்கரப் பதிக் கோட்டையில், தலைமறைவாக இருந்து விட்டோம்; அன்று ஐந்தாவது தினம்.

பொன்னழகி வந்தால்தான் எங்களுக்குச் சாப் பாடு கிடைக்கும். அத்துடன் ஊர்சமாசாரங் களும் தெரியும். ஆகையினால் தினம் தினம் பொழுது புலர்ந்ததும், பொன்னழகியின் வரு கையை எதிர்பார்ப்பதுதான் எனக்கும், முனியய் யாவுக்கும் முக்கிய ஜோலி.

நான்கு தினங்களாகப் போலீஸாருக்குத் தெரியாமல், தலைமறைவாக இருந்தது எங்கள் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். இனிமேல் சங்கரப்பதிக் கோட்டையில் இருந்தால், நிச்சயம் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்வோம் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆகையால் பொன்னழகி வந்தவுடன் சாப்பிட்டு விட்டு அன்றையத் தினமே சங்கரப்பதிக் கோட்டையைவிட்டு வெளியே கிளம்பிச்செல்வதென்று திட்டமிட்டிருந்தோம். எனவே சூரியன் உச்சிக்கு ஏற ஏற, பொன்னழகியின் வருகையை எதிர்பார்க்கும் ஆர்வமும் ஏறிக்கொண்டே போயிற்று.

பத்துமணி ஆனவுடன் பரபரப்பு அதிகமாயிற்று. பசி வயிற்றைக் கிள்ளியது. பசியும், பயமும் சேர்ந்து ஒரே கலக்காகக் கலக்கியது. பதினொருமணியானதும், நாங்கள் துடிதுடித்துப்போனோம். போலீஸாருக்குச் சந்தேகம் தோன்றக்கூடாது என்பதற்காக, ஒரு வேளை பொன்னழகி போகவேண்டாத இடமெல்லாம்போய், சுற்றவேண்டாத வீதியெல்லாம் சுற்றி, வருகிறாளோ! அப்படி வந்தாலும்,

பதினேருமணிக்குமேல் சுணங்க நியாய மில்லையே. ஆனுல் அன்றுமணி பன்னிரெண்டாகி யும் கூடப் பொன்னழகி வராமல் போகவே, எங்களுக்கு ஒரே திகிலாக இருந்தது.

"சரி, ஏதோ பொன்னழகிக்கு ஆபத்துதான்; போலீஸார் கையில் அகப்பட்டால், அவளை என்ன பாடு படுத்துவார்களோ, சண்டாளப் பாவிகள் !" என்று இருவரும் நிலைதடுமாறிப் போனேம். ஏனெனில் அதற்கு முன்தினம் பொன்னழகி சொன்ன பல சம்பவங்கள் எங்கள் ஞாபகத்திலேயே இருந்து கொண் டிருந்தன.

"எங்களைப்போல் தலைமறைவாக இருந்துவந்த வேறொரு தேசபக்தர்வீட்டை போலீஸார் முற்றுகையிட்டார்களாம். வீட்டிலிருந்தவர்கள் தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றுபதில் சொன்னுர்களாம். உண்மையிலேயே அவர் களுக்கு ஒன்றும் தெரியாததனுலேயே அவ்வாறு பதில் கூறினுர்கள். ஆனுல் உண்மையைப் பற்றி போலீஸாருக்கு என்ன கவலை?

ஆகையால் அங்கு வீட்டிலிருந்த முக்யஸ்தர் ஒரு வரைப் போலீஸ்ஸ்டேஷனுக்குக் கூட்டிப்போய்,

நிர்வாணமாக்கி, காலேயும் கையையும் கட்டி, வெல்லக்கட்டியை மேலெல்லாம் தடவி, வெய்யிலில் போட்டுவிட்டார்களாம். அவரை ஈக்கள் மொய்த்தனவாம். எறும்புகள் கடித்தன; பூச்சிகள் பிடுங்கியதாம்; குருவிகள் கொத்தியதாம்; கண்களில் ரத்தம் கசிய, மேலெல்லாம் புண்ணுக, அவர் அனுதையாகக் கிடந்தாராம். போலீஸாரோ "உண்மையைச் சொல், உண்மையைச் சொல்" என்று துன்புறுத்திக் கொண்டேயிருந்தார்களாம்.

மற்ருெரு தேசபக்தரைப்பிடித்துக் கணுவுக்குக் கணுவு அடித்தார்களாம். ஓங்கி கன்னத்தில் அறைந்ததில் அவருடை காது செவிடாகப் போய்விட்டதாம். மேலும் அவரை தலேயைமொட்டையடித்தார்களாம். கரும்புள்ளி செம்புள்ளி குத்திஞர்களாம். கழுதையின்மீது ஏற்றிவைத்து ஊர்வலம் விட்டார்களாம்.!

வீதியில் ஊர்வலம் போகும்போது போலீஸார் சாணத்தைக் கரைத்து மேற்படி தேசபக்தர் தலேயில் ஊற்றி துடைப்பத்திஞல் 'காங்கிரஸில் சேராதே சேராதே' என்று சொல்லி அடித்தார்களாம்.



காமராசர் பல்கலை... அவ்வை... நூல

வீட்டுக்கு வீடு கொண்டுபோய் கழுதையின்மீது இருக்கும் தேசபக்தரை நிறுத்தி வீட்டிலுள்ள பெண்களை வெளியில் கூப்பிட்டு சாணத்தைக் கரைத்து தேசபக்தர் தலையில்ஊற்றி துடைப் பத்தால் அடிக்கும்படிச் சொன்னார்களாம். மாட்டேன் என்று சொன்னமாதர்கள் வீட்டின் கூரையில் ஏறி போலீஸார் தீயை வைத்துவிட் டார்களாம். அதனால் பல பெண்கள் பயந்து, நடுங்கி, தேச பக்தர் தலையில் சாணத்தைக் கரைத்து ஊற்றி துடைப்பத்தினாலும் அடித்தார் களாம்.

போலீஸார் மேலும் பல வீடுகளுக்குச்சென்று பெண்களை யெல்லாம் நிர்வாணமாக்கிச் சித்திர வதை செய்து கற்பழித்தார்களாம்.''

இந்தக் கதையெல்லாம் பொன்னழகி சொல்லிய பொழுது எங்கள் கண்களில் நீர் ஆறாகப் பெரு கியது. பொன்னழகிக்கும் மேற்படி கதி ஏற்பட் டால் 'ஐயோ அவள் எப்படித் துடிப்பாளோ' என்று நினைத்தபொழுது பகீர் என்றது.

"பாவம்! என்னால்தானே அவளுக்கு இவ்வளவு துன்பம். என்னுடைய தங்கையாகப் பிறந்த

தற்கு இந்தச் சுகத்தைத்தானு நான் அவளுக்குக் கொடுக்கவேண்டும்" என்று முனியய்யா மாலே மாலேயாகக் கண்ணீர் விட்டான். என்னுடைய உள்ளமும் கலங்கியிருந்தது.

"முனியய்யா! உன்னுல்தான் உன் தங்கைக்கும் மற்றவர்களுக்கும் துன்பமேற்பட்டதா? அதற்கு நானல்லவா காரணம். நான் இந்த ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபடவில்லேயென்ருல் இவ்வளவு தொல்லேகள் ஏன் ஏற்படப்போகின்றன? ஆயினும் நாம் கலங்கலாமா? நமது ராஷ்டிரபதி மௌலானு ஆஸாத் ஒரு சமயம் சொன்னது உனக்குஞாபகமில்லேயா? சொல்லுகிறேன்கேள்.

அவரைக் கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தினுர்கள். தண்டனே கூறவேண்டிய நீதிபதி அவரை 'ஸ்டேட்மெண்ட்' கொடுக்கும்படிச் சொன்னுர். அதற்கு மௌலானு ஆஸாத் என்ன சொன்னுர் தெரியுமா? "ஒரு காலத்தில் ஒரு கொடுங்கோலன் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தான். அந்தக் கொடுங்கோலனே எதிர்த்து ஒரு புரட்சி வீரன் தோன்றினுன். அவன் ஊர் ஊராகச் சென்று கொடுங்கோல னுடைய கொடுமையை விஸ்தரித்துக் கூறினுன்.

உடனே அந்தக் கொடுங்கோலன் மகாகோப மடைந்து, அந்தப் புரட்சி வீரனைப் பிடித்துக் கொண்டு வரச்செய்தான். அவ்வீரனை ஒரு முச்சந்தியில் கட்டி அவனுடைய அங்கங்களை வெட்டும்படிச் சொன்னான். ஆனால் அந்தப் புரட்சி வீரனோ தன்னுடைய நாக்கு அறுபடும் வரையில் அக்கொடுங்கோலனுடைய கொடுமை யைப் பற்றிச் சொல்லிக்கொண்டே யிருந்தான். அவனுடைய நாக்கு அறுபட்ட பிறகுதான் அவன் ஓய்ந்தான். அப்பேர்ப்பட்ட வீரச்சந்ததி யில் வந்தவன் நான். இந்த பிரிட்டிஷ் ஏகாதி பத்தியத்தின் நூற்றி இருபத்தாறுவது செக்ஷ னுக்குப் பயப்படவா போகிறேன்?" என்று வீராவேசம் பேசினாரே ஆஸாத், அதை ஞாபகத் தில் வைத்துக்கொள். இந்தத் துன்பமல்ல; இதைவிட எத்தனை கோடி துன்பம் வந்தாலும் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகத் தாங்கிக் கொள்ள மகாத்மாஜி நமக்குச் சக்தியைத் தர வில்லையா?" என்று முனியய்யாவுக்குத் தைரியம் கூறினேன்.

அவனுக்குத் தைரியம் கூறினேனே ஒழிய, என் னுடைய மனதில் பெரும் போராட்டம் நடந்து கொண்டுதானிருந்தது. கடிகாரத்தின் நிமிஷ

மூள் ஏற ஏற, எங்கள் உள்ளத்தில் பயமும், திகிலும் ஏறிக்கொண்டே போயிற்று. பசி மயக்கம் தலையைக் கீழே சாய்த்தது.

முனியய்யாவுக்கு, நான் பசியுடன் இருப்பதைக் கண்டு என்மீது பச்சாதாபம் உண்டாயிற்று. பஞ்சணையில் படுத்திருக்க வேண்டியவன் பாறையில் படுத்திருக்கிறேனே என்று பரிதாபப் பட்டான்.

அறுசுவை உண்டியுடன் ஆள், பேர் சூழ உபசாரத்துடன் சாப்பிட வேண்டியவன் 'பசி பசி' என்று துடிப்பதைக்கண்டு அவன்மனம் வெடித்துப்போயிற்று. எனக்கு பசி அதிகமாக இருந்ததால் ஒருவித மயக்கம் உண்டாயிற்று.

அதனால் கண்களை மூடிக்கொண்டேன். நான்கு நாட்களுக்குமுன் நடைபெற்ற மாபெரும் புரட்சி ஞாபகத்திற்கு வந்து, கொஞ்சம் பசியைமறக்கும் படிச் செய்தது.

* * *

1942 ஆகஸ்டில் மகாத்மாவைக் கைது செய்த வுடன் எங்களூரில் பொதுஜனங்களிடையே பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. வியாபாரிகளெல்

லாம் கடையடைப்புச் செய்து தங்களுடைய எதிர்ப்பைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக்காண் பித்தார்கள். சுயநல நோக்கங்கொண்ட சில முதலாளிகள் கடையைச் சாத்தாமலும் இருந் தார்கள். அவர்களில் பலரை தேசபக்தர்கள் அணுகி ஹர்த்தால்செய்யும்படிச் சொன்னார்கள், ஆனால் பிடிவாதமாக கடையை மூட மறுத்தவர் களில் ஹனுமான் ஹோட்டல் ஆத்மனாதய்யரும் ராயல் ஹோட்டல் இஸ்மத்பாக்ஷாவுமாகும்.

தேசபக்தர்கள் எவ்வளவோ சொல்லிப்பார்த் தார்கள். ஆனால் அவர்கள் காதில் ஒன்றும் ஏற வில்லை. கடைசியாக தேசபக்தர்கள் ஒரு யுக்தி செய்தார்கள்.

அதன்படி ஒருவர் தலைமையின் கீழ் ஐம்பதுபேர் ஹனுமான் ஹோட்டலுக்குச் சென்றார்கள். "பாதம் ஹல்வா கொண்டா, தோசை கொண்டா, வடை கொண்டா, லட்டு கொண்டா இன்னும் சூடாஎன்னென்ன இருக்கோ அதையெல்லாம் கொண்டு வரும்படிக்" கேட்டார்கள்.

ஹோட்டல் காரர்கள் எல்லாவற்றையும் ஸப்ளை செய்தார்கள். தேசபக்தர்களெல்லோரும் சந்

தோஷமாகச் சாப்பிட்டார்கள். கடைசியாக எல்லோரும் ஒன்ருக எழுந்து கையைக் கழுவி விட்டு "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷமிட்டார்கள். உடனே அடுத்தபடியாக "ஹோட்டல் மானேஜருக்கு ஜே!" என்று பெரும் கோஷம் போட்டார்கள்.

ஹோட்டல் சொந்தக்காரர் ஆத்மநாதய்யருக்கு ஒன்றும் புரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தார். தேசபக்தர்கள் ஹோட்டலை விட்டு வெளியே நடக்க ஆரம்பித்தார்கள். ஆத்மநாதய்யர் "பில்லுக்குப் பணம்" என்று கேட்டார்.

தேசபக்தர்களில் கவிதாரசனையுள்ள ஒருவர் பாட்டிலே பதில் சொன்னுர்,

"எத்தில்லாது என்போல
ஏழை மக்கட்கா யுழைக்கும்
காந்திமகான் கணக்கில்
பற்றெழுதிக் கொள்"

என்று பாடிவிட்டு வேகமாக நடந்துவிட்டார். பார்த்தார் ஆத்மநாதய்யர்! சரி, இனி ஹோட்டலைத் திறந்து வைத்திருந்தால் நம்பாடு ஆபத்துதான் என்று எண்ணி ஹோட்டலை மூடிவிட்டார்.

இந்த விஷயத்தை அறிந்த ராயல் ஹோட்டல் காரர் அவசர அவசரமாகக் கடையை அடைத்து ஒரு பெரும் கரும் பலகையில்,

"இந்த ஹோட்டல் மகாத்மா காந்தி விடுதலையடையும்வரை திறக்கப்படமாட்டவே மாட்டாது!" என்று எழுதி மாட்டிவிட்டார்.

மேற்படி சம்பவத்தை நினைத்த பொழுது பசி மயக்கத்தில் படுத்திருந்த எனக்குக்கூட, மற்ற எல்லாத் துக்கத்தையும் மறந்து சிரிப்புவந்தது, என் சிரிப்பைப் பார்த்துவிட்டு முனிய்யா 'என்ன சிரிக்கிறுய், என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை, இடுக்கண் வருங்கால் நகுக" என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறுர். அதனுல் சிரித்துப் பழகுகிறேன் என்று சொன்னேன்.

அவன் அதைக் கவனிக்காமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

எங்களூர் புரட்சி வீரர்கள் ஆகஸ்ட் புரட்சியில் முதல் பலி என்னையே கொடுப்பதென்று நிச்சயித்தார்கள். நானும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்



சின்ன

கொண்டேன். ஏழெட்டு நாள் வரையில் போலீஸார் என்னைக் கைது செய்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்தும் முடியாமல் போய் விட்டது. கடைசியில் நான் 144-வது சட்டத்தை மீறிவிட்டேன் என்பதற்காக போலீஸார் என்னை 1942 ஆகஸ்ட் மாதம் 16-ம்தேதி, மகாதேவ தேசாய் இறந்த தினத்தில் கைது செய்தார்கள். முதலில் கைதியாகும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. என்னை நேராகத் திருவாடானை ஸப்ஜெயிலில் கொண்டுபோய் அடைத்தார்கள்.

"எந்த தேசபக்தரைப் போலீஸார் கைது செய்த போதிலும், உடனே கைதியாகாத இதர தேசபக்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொது ஜனங்களின் உணர்ச்சியைத் தூண்டி, ஜனங்களைத் திரட்டிக் கொண்டுவந்து கைதியான தேசபக்தரை சிறையிலிருந்து விடுதலை செய்து விடவேண்டும்" என்பது எங்களுடைய ரகசியத் திட்டங்களில் மிகவும் முக்கியமான திட்டமாகும்.

எங்கள் ரகசியத் திட்டத்தின்படி என்னை விடுதலை செய்வதற்காக முன்வந்தவன் தான் முனியய்யா. அவனுடைய முழுப்பெயர் முனி

யாண்டித் தேவன். முனியய்யா என்பது அவனுக்குச் செல்லப் பெயராகும். ஆள் வாட்டசாட்டமாக இருப்பான். நல்ல உயரமான வாலிபன். சலியாத உழைப்பாளி. மாசுமருவற்ற தேசபக்தன். இனிய சுபாவமுடையவன். உணர்ச்சி ததும்ப ஆவேசமாகப் பிரசங்கம் செய்யக்கூடிய வல்லமை வாய்ந்தவன். பேச்சு வன்மையினுல் பொது ஜனங்களைத் திரட்டுவதில் சூராதி சூரன். இயக்கம் நடத்துவதற்கு இன்றியமையாதவன். அவனுடைய தலைமையில் பொதுஜனசக்தி திரண்டெழுந்ததில் ஆச்சர்யமில்லை.

"முனியய்யா பெரும் ஜனக்கூட்டத்துடன் ஊருக்கு வெளியேயுள்ள ஊருணிக் கரையில் வந்து தங்கியிருக்கிறுன். பகல் பன்னிரெண்டு மணிக்கு என்னை விடுதலை செய்யப் போகிறுன்" என்ற அதிசயச் செய்தி காட்டுத்தீபோல் ஊரெல்லாம் பரவியது. எனக்கும் எட்டியது. சிறையிலிருந்த எனக்கே மேற்படி விஷயம் தெரிந்தபொழுது, திருவாடானை ஸப் இன்ஸ்பெக்டருக்குத்தாணு தெரியாமலிருக்கும்? எனவே அவர் ஒரேயடியாகத் துள்ளிக் குதித்து, கர்ஜனை புரிந்தார். எதிரில் நின்றுகொண்டிருந்த கான்ஸ்

டேபிள்களை வெடவெடக்க ஆட்டி வைத்தார். அவர் தன்னுடைய ரிவால்வரைப் பார்த்த பார்வையிலிருந்து, ஸப் இன்ஸ்பெக்டர் தங்களையே சுட்டுவிடுவாரோ என்றுகூட கான்ஸ்டேபிள்கள் அஞ்சினார்கள்.

"வரட்டும் அந்தப் பயல்கள், தொலைத்துவிடுகிறேன்" என்று உறுமினார் ஸப் இன்ஸ்பெக்டர். அங்கு அழகாக அடுக்கி வைத்திருந்த ஆறு துப்பாக்கிகளையும் ஒருதடவை பார்த்துக் கொண்டார். அவைகளில் மூன்று ஓட்டை என்பதும், மேலும் இரண்டில் குண்டுபோட இயலவில்லை என்பதும், பாக்கி இருக்கும் ஒழுங்கான துப்பாக்கியை உபயோகிக்கத் தெரிந்த கான்ஸ்டேபிள் அங்கு ஒருவரும் இல்லை என்பதும் அவர் அறியாத விஷயமல்ல. ஆயினும் அவர் அதுவரை செய்துவந்த ஆர்ப்பாட்டத்திற்கும், அதிகாரத்திற்கும் பக்கபலமாக இருந்தது அந்த மேன்மைதங்கிய ஆறு துப்பாக்கிகள்தானே!

வதந்திகள் பலவாறாக வந்து கொண்டிருந்தன. பக்கத்துநகரத்தில் ஒரு ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஜனங்களால் அடித்துக் கொல்லப்பட்டார் என்றும், ஜில்லா சூப்பரிண்டெண்டண்ட் துரை

மண்டை உடைந்துவிட்டதென்றும், மாஜிஸ்டிரேட் போன இடம் தெரியவில்லையென்றும், இவ்வாறு வதந்திகளுக்குக் கால் கை முளைத்து, தாராளமாக நடமாட ஆரம்பித்தன. ஸப் இன்ஸ்பெக்டர் சூரப்புலி சொக்கலிங்கம் பிள்ளை அவைகளைக் கேட்டுக் கொஞ்சங் கொஞ்சமாகக் கலங்க ஆரம்பித்தார். பரபரப்படைந்தார். தன்னுடைய பாதுகாப்புக்காக, மலபார் ரிஸர்வ் போலீஸாரை அனுப்பும்படி தலைமை அதிகாரிக்குத் தந்தி கொடுக்க, தபாலாபீஸுக்குக் கான்ஸ்டேபிளை அனுப்பினர் போனவன் உடனே திரும்பிவந்து, "எஜமான் வழியெல்லாம் தந்திக் கம்பி அறுந்து கிடக்கிறதாம். ஆகையால் தந்தி போக்கு வரத்து தடைப்பட்டிருக்கிறது" என்று சொன்னன்.

இதைக்கேட்ட ஸப் இன்ஸ்பெக்டர் அசந்து போனர். அவ்வூரில் டெலிபோனும் இல்லை. பஸ்ஸில் யாரையாவது அனுப்பலாம் என்ருலோ, பஸ் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பாதுகாக்கும் பெரும்பொறுப்பு இப்படித்தன்னுடைய தலையில் விழுமென்று அவர் கனவிலும் கருதவில்லை. அவ்

வளவு பெரிய பாரம் தன் தலைமீது விழுந்தால், "தன்னுடைய சரிகைத் தலைப்பாகையின் கதி என்ன ஆவது?" என்பதைப்பற்றி நினைத்த போது அவருடைய தலை கிர்ரென்று சுற்ற ஆரம் பித்தது. கை பதட்டத்துடன் தலையிலிருந்த சரிகைத் தலைப்பாகையைத் தடவிக்கொடுத்தது! திருவாடானையில் போலீஸ் ஸ்டேஷன், மாஜிஸ் டிரேட் கோர்ட், சர்க்கார் கஜானு, ஸப்ஜெயில் எல்லாம் ஒரே காம்பவுண்டுக்குள் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. மேற்படி போலீஸ் ஸ்டேஷன் வராந்தாவில், ஸப் இன்ஸ்பெக்டர் சூரப்புலி சொக்கலிங்கம் பிள்ளை சாதாரண நாட்களில் சரிகைக் குல்லாவோடு 'ஜம்' என்று கையில் ஒரு அழகிய தடியைச் சுழற்றிய வண்ணம், 'ராஜபார்ட்' நடை நடப்பது வழக்கம். அப்பொழுது அவரைப் பார்த்தால், "ஏதோ ராஜகுமாரியைத் தேடிப்போகும் ராஜா வைப் போல" காட்சியளிப்பார். ஆனுல் அவரு டைய அதிர்ஷ்டம் அதுவரை அவர் எந்த ராஜ குமாரியையும் சந்தித்தது கிடையாது. அதற்குப் பதில் கைதிகளின் முகத்தையேதான் கண்டிருக் கிறுர். ஆகையால் அவருக்குக் கைதிகளைக் கண்டால் எரிச்சல் வருவது இயற்கைதானே!

அதனால் அவர் கைதிகளைப் பார்த்தவுடன் ஒரு ஏளனப் புன் சிரிப்பு சிரித்து, "என்னடா திருடினாய்? என்று அதிகாரத் தோரணையில் 'டா' போட்டுப் பேசும்பொழுது, இந்த ஈரேழு பதினாலு லோகத்திற்கும், அவர்தான் சக்ர வர்த்தியோ! என்று நினைக்கும்படி இருக்கும். யாராயிருந்தாலும், கைதியாக வந்துவிட்டால் அவருக்கு 'டா' போட்டுத்தான் பேசவரும். அப்படி அவருடைய நாக்கு அதிகாரத்தில் ஊறியிருந்தது.

ஆனால் அன்றையதினம் அவர் அடக்கமாக அங்குமிங்கும் அலைந்து திரிந்ததையும், விறைப்பு மிகுந்த அவருடையநாக்கு, சொரத்துக் குறைந்திருந்ததையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. 'டா' விலே வாழ்ந்தவர், அடாடா படாதபாடு பட்டார்! நான் இருந்த 'லாக்கப்' அறைக்கு எதிரில் அவர் பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு உலாவினார். அவருடைய கையில் 'ரிவால்வர்' இருந்தது. உடனடியாக என்ன செய்வது என்று அவருக்கு யோசனை எட்டவில்லை.

அவர் அகத்தில் ஓடிய சஞ்சலம் முகத்திலே பிரதிபலித்தது. "உள்ளத்திலே பயத்தின் ஒளி உண்டாயின், வாக்கினிலே பேச்சின் தொனி உண்டாகாது" என்ற உண்மை அவரைப்பார்த்த போது தெரிந்தது. அந்தச் சமயத்தில் அவரைக் காப்பாற்ற அங்கு ஒரு கான்ஸ்டேபிள் கூட இல்லை. எல்லோரும் தலை தப்பினால் போதும் என்று சர்க்கார்தந்த தங்கள் தலைப்பாகையை எறிந்துவிட்டு எட்டுத்திக்கும் பதினாறு கோணமுமாகப் பிரிந்து போய்விட்டார்கள்.

மாஜிஸ்டிரேட் அடுத்த ஊர் கலகத்தை அடக்கப் போனவர், கலகத்தை அடக்கினாரா, அல்லது அவர் அங்கேயே அடக்கமாகிவிட்டாரா, பிழைத்திருக்கிறாரா என்பதும் தெரியவில்லை.

சப் இன்ஸ்பெக்டர் இரண்டு மூன்று முறை என் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தார். ஒரு கைதியுடன் அவராக வலுவில் வந்து பேசுவது அதிகாரத்தில் ஊறிய அவருக்கு சட்டென்று முடியாத காரியமாக இருந்தது போலும். ஆகையால் பேச்சை நானே ஆரம்பித்தேன். "ஸார்! உங்களால் இந்த இடத்தைக் காப்பாற்ற இயலாது. முயற்சித்தால் உங்கள்

உயிருக்குத்தான் ஆபத்துண்டாகும்" என்று நான் சொல்லியவுடன் அவர் முகம் சட்டென்று கடூரமாகியது.

சூரப்புலி என்மீது பாய்ந்துவிடுமோ என்று நான் கிலேசப்படும்படிக்கூட இருந்தது. அவரோ "ரிவால்வர் இருக்கும்வரை ஒரு கை பார்த்து விடுகிறேன்" என்று மீண்டும் ஜம்பம் பேச ஆரம்பித்தார். உடனே நான் "உங்கள் கையிலிருக்கும் ரிவால்வரால், கூட்டத்தில் ஒருவரைச் சுட்டு வீழ்த்தினால், உடனே மற்றவர்கள் நாற்புறமும் உங்களைச் சூழ்ந்து அமுக்கி நிச்சயம் கண்டதுண்டமாக்கி விடுவார்கள். ஆகையால், நீங்கள் பேசாமல் இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவதுதான் நல்லது" என்று யோசனை கூறினேன். இந்தச் சமயத்தில் போலீஸ் லயனிலிருந்து பெண்பிள்ளைகள், குழந்தை குஞ்சுகள், எல்லோரும் நான் இருந்த லாக்-அப்பிற்கு முன்வந்து குய்யோ முறையோ என்று சப்தமிட்டார்கள்.

"ஐயா! சாமி! கலகக்காரர்கள் வருகிறார்களாமே. வந்தால் போலீஸ்காரர்களையும் கொன்று அவர்களுடைய பெண்சாதி, பிள்ளைகள்,

குழந்தை, குட்டிகள், எல்லோரையும் நெருப்பில் போட்டுப் பொசுக்கி விடுவார்களாமே! நீங்க தான் காப்பாத்த வேணும் ஐயா! என்று கூக்குரல் போட்டார்கள்.

உடனே என் மனம் துடித்தது. மகாத்மாவின் பெயரைச் சொல்லி நடைபெறும் இயக்கத்தில் யாரும் தன்னுயிர் மகாத்மாவின் தொண்டர்களால் போக்கப்படும் என்று கருதுவதற்கே இடமிருக்கக் கூடாதே! ஆனல் துரதிர்ஷ்ட வசமாக இப்படி நேர்ந்திருக்கிறதே! முரட்டுத் தனமாக இந்த இயக்கத்தை ஆரம்பித்திருக்கிருேமே! என்று அறிவு சொல்லிற்று. ஆனல் மறுநிமிஷத்தில் உணர்ச்சிக்கு அடிமையாகிப் போனேன். அறிவு யோசனை செய்யும்; உணர்ச்சி யோசனை செய்யாது.

அறிவு யோக்கியதையை விரும்பும்; உணர்ச்சி போக்கிரியாகவும் தோன்றப் பயப்படாது. அந்தக் குழந்தைகளையும் பெண்களையும் பார்த்த பொழுது ரொம்பவும் பச்சாதாபம் உண்டாயிற்று. “அம்மா கவலைப்படாதீர்கள்; நான் உங்கள் எல்லோரையும் காப்பாற்றுகிறேன்” என்று அவர்களுக்கு “அபயப் பிரதானம்”

கொடுத்து வீடுகளுக்குப் போகும்படி சொன்னேன். உடனே ஸப்இன்ஸ்பெக்டரும் தன் போலீஸ் உடைகளைக் களைந்துவிட்டு, சாதாரண உடையுடன் கிளம்பிப்போனார்!

ஸப்இன்ஸ்பெக்டர் தன்னுடைய பதவியைத் துறந்து சென்றபோது, அங்குள்ள துப்பாக்கிகள் ஆறும், ஒன்று கூடி ஒப்பாரி வைத்தன!

அவர் போன கொஞ்ச நேரத்தில் "திமு திமு" வென்று ஆவேசத்துடன் ஓடிவந்தது ஜனக் கூட்டம். எதிர்ப்பை நினைத்துக்கொண்டு ஆவேசமாக ஓடி வந்த ஜனங்களுக்கு ஒருவித எதிர்ப்பும் இல்லாமல் போகவே அவர்களுடைய ஆனந்தம் கரைபுரண்டோடியது. அந்தக் கூட்டத்திற்கு முனியய்யா தலைமைவகித்து வந்தபோது ஒரு பெரிய யுத்த தளபதி போல் காட்சியளித்தான். அவன் தோளில் சாத்தியிருந்தது ஒட்டைத் துப்பாக்கியாக இருந்த போதிலும் அவன் அதை வைத்திருந்த கம்பீரத்தைப் பார்த்தபோது அச்சப்படாமல் இருக்க முடியாது.

ஜனக்கூட்டத்தில் அரிவாளைப் பலர் ஏந்திக் கொண்டிருந்தனர். சிலர் ஈட்டி வைத்திருந் தார்கள். இன்னும் சிலர் மண்வெட்டி கடப் பாரை முதலிய விவசாய உபகரணங் களையே கொண்டுவந்துவிட்டார்கள். ஒரு சிலர் தாம்புக் கயிறு கொண்டுவந்திருந்தார்கள். (போலீஸாரைப் பிடித்துக் கட்டுவதற்காக இருக்கலாம்) இன்னும் சிலர் கம்பு கோடாரி, இப்படிக் கைக்கு அகப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு வந்திருந்தார்கள். எல்லோரும் தங்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களைத் தூக்கிப்பிடித்து "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷமிட்டபோது ஊரே அதிர்ந்தது. அதைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு சிரிப் பாய் வந்தது. ஆயுத பலத்தை நம்பாத மகாத் மாவின் பெயரால், அத்தனைவித ஆயுதங்கள் கொண்டுவந்திருந்தது வேடிக்கைதானே? அதற்கு 'ஜே!' வேறு போட்டார்கள்.

ஓடிவந்த ஜனங்கள் நான்இருந்த "லாக்-அப்" அறைக்கு முன்வந்து நின்றார்கள். முனியய்யா கம்பீரமாக எனக்கு வணக்கம் செய்தான். நானும் பதிலுக்கு வணங்கினேன். அந்த வெற்றி வீரனைக்கண்டதும் என்னுள்ளத்தில் உணர்ச்

சிப்புயல் வீச ஆரம்பித்தது. முனியய்யா தன் கையாலேயே 'லாக்-அப்' பூட்டை உடைத்து என்னை விடுதலை செய்தான்.

என்னைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டு "விடுதலை! விடுதலை!!" என்று வெற்றிச்சங்கம் முழக்கினான். அங்கு கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் இதயம் பூரிப்படைந்தது. ஜே கோஷம் வானைப்பிளந்தது. ஒவ்வொருவரும் தங்களைமறந்து ஆவேசத்துடன் ஆடினார்கள்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் அதுவரை நடை பெறாத ஒரு மகத்தான அதிசயச் சம்பவத்தை நடத்தியிருக்கிறார்கள் அல்லவா? பட்டப்பகல் பன்னிரெண்டுமணி சமயத்தில் சட்டங்களைத் தகர்த்து பிரிட்டிஷ் ராஜ்யத்தின் கைதி ஒருவனை விடுதலை செய்த பெருமை அவர்களுக்கே உரித் தானதல்லவா? ஒரு மனிதருக்கும் தொந்திர வின்றி, ஒரு உயிருக்கும் ஆபத்தின்றி விடுதலைப் புரட்சியை நடத்திய வீர மக்களல்லவா அவர்கள்!

இந்தப் புரட்சிக்கு அடியேன் ஒரு முக்யஸ்தன் என்பதால் என்னுடைய தோள்களும் பூரித்தன.

முனியய்யாவின் கொண்டாட்டத்தைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? ஒரே கோலாகலத்துடன் ஸப் ஜெயிலை விட்டு கூட்டமாகக் கிளம்பினேம். சுமார் மூன்று மைல் தூரம் நடந்திருப்போம். ஜனங்களோ சந்தோஷ ஆரவாரம் செய்துகொண்டு கலகலவென்று பேசிக் கொண்டு வந்தார்கள்.

ஒருவன் சொன்னன் "ஜவஹர்லால் நேருவை ராஜாவாக்கவேண்டும்" என்று. அதற்கு மற்ருெருவன் "போடா போ! ஜவஹர்லால் நேருவைவிட சுபாஷ் சந்திரபோஸ்தான் ரொம்பப் படித்தவர், அவர்தாண்டா ஆள வேண்டும்" என்று சொன்னன்.

"ராஜ்யம் ஆள்வதிலே ராஜகோபாலாச்சாரி யாருக்கு நிகர் யாருமில்லையடா" என்று வேருெருவன் சொன்னன்.

இப்படிப் பேசிக்கொண்டு வரும்போது ஒருவன் நான்கைந்து துப்பாக்கிகளையும், துப்பாக்கி ரவைகளையும் அள்ளிக்கொண்டு வந்தான். அங்கு போலீஸ் ஸ்டேஷனில் இவைகள் கிடந்ததாகவும், எடுத்துக் கொண்டு வந்ததாகவும் சொன்னன்.

உடனே அங்கிருந்த ஒருவன் "தனக்குத் துப் பாக்கி சுடத்தெரியுமென்றும், தான் ஒரு மகாராஜாவுடன் வேட்டைக்குப் போய் சுட்டுப் பழகியிருப்பதாகவும் அதனால் தானே துப் பாக்கிகளை வைத்துக் கொள்ள வேண்டும்" என்றும் சொன்னான்.

உடனே மற்றவர்களும், சுடத்தெரிந்தவனே துப்பாக்கியை வைத்துக்கொள்ளட்டும் என்று சொல்லி, அவனிடம் துப்பாக்கிகளைக் கொடுத் தார்கள். ரவைகளையெல்லாம் வேறொருவன் மடியில்கட்டிக்கொண்டான். இப்படியாக நாங்கள் நடந்து கொண்டிருக்கும்போது வெகு தூரத்தில் ரிஸர்வ் போலீஸ் லாரி வேகமாக வருவது தெரிந்தது.

ரிஸர்வ் போலீஸ் லாரியைக்கண்டதும் நானும் முனியய்யாவும் ஜனங்களைக் கலைந்து போகும்படி வேண்டிக் கொண்டோம். ஆனால் பலர் கலைந்து போக மறுத்தனர். ரிஸர்வ் போலீஸாரை வளைத்துப் பிடித்துவிட வேண்டுமென்று ஆளுக்கு ஒரு பக்கம் 'கூ கூ' வென்று கூச்சல் போட்டு ஆவேசமாகக் குதித்தார்கள். துப் பாக்கி வைத்திருந்தவன் தான் ஒருவனே எல்

லோரையும் சுட்டுப் பொசுக்கி விடுவதாக மார் தட்டினன். ஆவேசம் கொண்ட ஜனங்களிடம் நாம் இப்பொழுது எது சொன்னலும் ஏருது எனத்தெரிந்து, மெதுவாகப் பக்கத்திலுள்ள புதர் ஒன்றில் நானும் முனியய்யாவும் மறைந்து கொண்டோம். ஜனங்கள் இரண்டாகப் பிரிந்து ரோட்டின் இரண்டு பக்கங்களிலும் நின்று கொண்டு ரிஸர்வ் போலீஸ் லாரியை வளைத்துப் பிடிப்பதற்குத் தயாராயிருந்தார்கள்.

போலீஸ்லாரி கிட்டவந்துவிட்டது. ஆள் அரவம் கேட்டுப் போலீஸார் சுட ஆரம்பித்தனர். நம்முடைய துப்பாக்கிவீரனும் சுடுவதற்காகத் துப்பாக்கியை எடுத்தான். ஆனல் துரதிர்ஷ்ட வசமாகத் துப்பாக்கி வைத்திருந்தவன் சாலையின் இந்தப்பக்கத்திலும், ரவை வைத்திருந்தவன் அந்தப்பக்கத்திலும் பிரிந்து விட்டார்கள்! ஆகை யால் மேற்படி துப்பாக்கிவீரன் ரவையில்லாமல் தவித்து, ரவை வைத்திருந்தவனை வாயில் வந்தபடி திட்ட ஆரம்பித்தான். தோட்டா வைத்திருந்தவனே பெரிய மோட்டா பேர்வழி. அவன் கையிலிருந்த தோட்டாக்களை எடுத்து லாரிமீது வீச ஆரம்பித்தான். பாவம் அவன் நினைத்தமாதிரி அந்தக் குண்டுகள் வெடிக்க

வில்லை. அதற்குள் போலீஸார் சுழல் துப்பாக்கி களைக் கொண்டு, சுட்டுப் பொசுக்கிவிட்டார்கள். சுமார் அறுபத்தைந்து பேர் இறந்துவிட்டார்கள். லாரிமீது ஜனங்கள் கல்மாரி பொழிய ஆரம் பித்தார்கள். பதிலுக்கு போலீஸார் குண்டு மாரி பொழிந்தார்கள்.

ஜனங்கள் உயிருக்குப்பயப்படாமல் முன்னுக்கு வந்துகொண்டே யிருந்தார்கள். கல் வீச்சு அதிகமாகவே போலீஸார் லாரியை வேகமாக விட்டுக்கொண்டு ஓடிவிட்டார்கள்.

போலீஸார் போன சிறிது நேரத்திற்குப்பிறகு ஜனங்களுடைய உள்ளத்தில் பீதி உண்டாகி விட்டது. பிணங்களைப் பார்த்தவுடன் ஜனங்க ளுடைய மனம் மருண்டுபோய்விட்டது. வீர கர்ஜனை புரிந்தவர்கள் கோழையைப்போல் ஓட ஆரம்பித்தார்கள். தங்களுக்கும் இயக்கத் துக்கும் சம்பந்தமில்லாதவர்களைப் போல் நடந்துகொண்டார்கள். நானும் முனியய்யாவும் வெகுநேரம் யோசனை செய்தோம். நாங்கள் நினைத்ததுபோல, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செத்துவிடவில்லை என்பதற்குப் போலீஸார்

ஜனங்களைச் சுட்டு வீழ்த்திவிட்டுப் போனதே சாட்சியாகும்.

ஆகையால் எங்கள் இருவருக்கும் ஏகாதிபத்ய அரசாங்கம் என்ன தண்டனை கொடுப்பார்கள் என்பதை நாங்கள் இருவரும் அறிவோம். அகப் பட்டால் எங்களிருவரையும் போலீஸார் சட்னி யாக்கிவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. நிச்சயம் தூக்குத் தண்டனைதான். எனவே போலீஸாரிடம் அகப்படாமல் தலை மறை வாகவே இருப்பதுதான் சிறந்த வழியெனத் தீர்மானித்தோம். அங்குநின்றால் இனிமேல் ஆபத்தென்று, உடனே பக்கத்து கிராமத்தி லிருக்கும் முனியய்யாவின் வீட்டிற்கு வேகமாகச் சென்றோம்.

அங்கு கவலை தோய்ந்த முகத்தோடு, வாசற்படியில் ஒரு இள நங்கை நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தவுடன் அவள் முனியய்யாவின் தங்கைதான் என்பதைத் தெரிந்துகொண்டேன். முனியய்யா தன் தங்கையிடம் அவசரம் அவசரமாக நடைபெற்ற முழு விவரத்தையும் கூறினான். அவளும் அவன் சொன்னவற்றை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்

டாள். இத்தனை அமர்க்களத்தின் மத்தியில் என்னுடை வாலிப முறுக்கு பொன்னழகியை— அவள்தான் முனியய்யாவின் தங்கையை— பார்த்துக்கொண்டே யிருக்கச் செய்தது. அவளை நான் 'குர்' என்று பார்ப்பதை அவள் கவனித்து விட்டு "தலைமறைவாக எங்கேயிருப்பதாக உத்தேசம்?" என்று என்னைக் கேட்டாள்.

திடீரென்று முன்பின் பழக்கமில்லாத ஒரு வாலிபப் பெண், ஒரு கேள்வியை நாம் எதிர் பாராத விதமாகக் கேட்டுவிட்டால் எப்பேர்ப் பட்ட சூரனும், கொஞ்சம் திகைத்துவிடுவான் என்பதில் சந்தேகமில்லை. எனக்கு முதலில் அந்தத் திகைப்பு இருந்தது. ஆயினும் சமாளித் துக்கொண்டு ஏற்கனவே நானும் முனியய்யாவும் முடிவுகட்டியிருந்தபடி "தற்சமயம் நான்கைந்து நாட்களுக்கு சங்கரப்பதிக் கோட்டைக்குள் தலை மறைவாக இருப்பதாக உத்தேசம்" என்று கூறினேன். என்னுடைய யோசனையை அவள் ஆமோதித்தாள்.

பொன்னழகி கறுப்பு நிறந்தான். ஆனால் அந்த கறுப்புக்குத்தான் என்ன மினு மினுப்பு! கறுப்பு நிறத்தோடு முக வசீகரமுள்ளவர்கள்,

உடல் வசீகரமுள்ளவர்கள் மூன்னிலையில் எந்த சிகப்பு, வெள்ளை, மஞ்சள், மாநிற அழகிகளைக் கொண்டுவந்து நிறுத்தினாலும் ஈடாகாது என்பதில் ஐயமில்லை. அதிலும் கறுப்பு நிறத் தவள் கிராமத்துப் பெண்ணாக யிருந்துவிட் டாலோ இயற்கை யழகுடன் எந்தப் பட்டணத்து அழகிகளும் போட்டி போட முடியாது.

பொன்னழகியின் முகம் தேஜஸ் பொருந்திய தாக இருந்தது ; கிராமத்து எழில் அதில் குடி கொண்டிருந்தது; உழைப்பின் உறுதி அவள் உடலில் அமைந்திருந்தது ; களங்க மற்ற உள்ளம் அவள் கண்ணில் தெரிந்தது ; பழையது சாப்பிட்டுச் சாப்பிட்டு அதனால் வெண்மை ஏறிய பற்கள் பளபள வென்றிருந்தன. மொத்தத்தில் சொன்னால் அவளை ஒரு மயக்கும் உருவமென்று சொல்லலாம். மோகினிதான் ! ஆனால் இப்போது இந்தத் தலைபோகிற சந்தர்ப் பத்தில் 'காதலாவது கத்திரிக்காயாவது' ! காடோ, மேடோ சுற்ற வேண்டியவன், கான்ஸ்டேபிள் கண்ணில் அகப்படாமல் தப்ப வேண்டியவன், காதலைப்பற்றிச் சிந்திக்க நேர மெங்கே?

ஆகவே சங்கரப்பதிக் கோட்டைக்குச் சோறு கொண்டுவரும்படி சொல்லிவிட்டு நானும் முனியய்யாவும் வேண்டிய சாமான் சிலவற்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றேம்.

* * *

சங்கரப்பதிக் கோட்டை என்பது காரைக் குடிக்கும், தேவ கோட்டைக்கும் இடையே செல்லும் சாலையில் தேவகோட்டையை அடுத் திருக்கிறது. சங்கரப்பதிக் கோட்டையைச் சுற்றி ஐம்பது மைல்களுக்குள் அநேகம் கோட் டைகள் இருக்கின்றன. புதுக்கோட்டையி லிருந்தே இம்மாதிரிக் கோட்டைகள் ஏராள மாக இருக்கின்றன. இவைகள் மருத பாண்டியன் காலத்தில் உண்டாகியிருக்கலாம் என்று பலர் ஊகிக்கிறுர்கள். இப்பொழுது சங்கரப்பதிக் கோட்டை நாதியற்றுக் கிடக்கிறது.

சாலையிலிருந்து நூறுஅடி உள்ளே சென்றுல், கோட்டையின் வாசலை அடையலாம். பிர மாண்டமான ஆலமரங்கள் கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தன. ஆலத்தின் விழுதுகள் கோட்டைச் சுவர்களை



சின்ன

வளைத்து, அதிகாரம் செய்து கொண்டிருந்தன. பாழடைந்தும், பயங்கரமாகவும், நெருங்கிப் பார்ப்பதற்கு அச்சப்படும்படியாகவும், இராக் காலத்தில் திருடர்கள் மறைந்திருந்து போவோர் வருவோரை கொள்ளையடிப்பதற்கும் வசதியான இடமாயிருப்பதால் ஜனங்கள் யாரும் அந்தப் பக்கம் தன்னந் தனியாகச்செல்லுவதற்கு அஞ்சு வார்கள்.

நானும் முனியய்யாவும் அந்தப் பாழடைந்த கோட்டைவாசலை அடைந்தோம். வாசல்சுவர் உடைந்து அலங்கோலமாகக் கிடந்தது. சுவர்கள் 'இதோ விழப்போகிறேன் அதோ விழப்போகிறேன்' என்று சொல்வதுபோல ஆடிக்கொண்டிருந்தன. 'யாராவது தலை யெழுத்துச் சரியில்லாதவன் அந்தப்பக்கம் வரு வானா' என்று கவனித்துக் கொண்டிருந்தது போல, நிலைக்கதவு பெயர்ந்திருந்தது. ஆலம் விழுதுகள் சிறைக்கம்பிபோல வாசலுக்குள் நுழைய முடியாமல் பின்னிக்கிடந்தன. கையில் வைத்திருந்த அரிவாளினால் விழுதுகளை வெட்டிக் கொண்டு முனியய்யா உள்ளே பிரவேசித்தான். உடனே தங்கள் குடியைக்கெடுக்க யாரோ

வந்துவிட்டார்கள் என்று அபாயச் சங்கு ஊது வதுபோல அங்கு ஏகபோகமாகக் குடியிருந்து வந்த பட்சிஜாலங்கள் 'கிரீச்...முரீச்...ஆ...கூ...' என்று அதனதன் பாஷையில் திட்டிக்கொண்டு ஓடியதுபோல் தெரிந்தது. சிறு சிறு மிருகங்கள் 'கர்புர்' என்று சப்தமிட்டு ஒரு பார்வை பார்த்து உருமி 'ஏண்டா எங்களுக்குத் தொல்லே கொடுக் கிறீர்கள்? காட்டிலும் வந்து எங்கள் அமை தியைக் கெடுக்கிறீர்களே!' என்று சொல்வது போல கண்ணே விழித்துப் பார்த்துவிட்டு அங்கு மிங்கும் ஓடின.

எல்லாம் ஏககாலத்தில் ஒன்று சேர்ந்து போட்ட அலறல் எங்களைத் தூக்கி வாரிப்போட்டது. பின்னர் அடர்ந்த புதர்களுக்கிடையே புகுந்து தட்டுத் தடுமாறி நாங்கள் அங்கிருந்த ஒரு விசாலமான மண்டபத்திற்கு வந்து சேர்வதற் குள் 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண் டாலும் மீண்டும் வராத இட'த்திற்கு போய் விடுவோமோ என்றநிலை ஏற்பட்டது. வெகு தூரம் நடந்த களைப்பும், புரட்சிச் சம்பவத்தின் எதிரொலியும் சேர்ந்து மனதில் எனக்கு ஒரே களைப்பாக இருந்தது. உடலில் வலுவுமில்லை; பசி பிடுங்கித்தின்றது. கையில் வைத்திருந்த

பாட்டரி விளக்கின் உதவியைக்கொண்டும், அரிவாளை உபயோகித்தும் நாங்கள் இருவரும் அங்கு படுப்பதற்கு, வசதியாக ஒரு பாறையை முனியய்யா ஒழுங்கு செய்தான். இருவரும் புரண்டு புரண்டு படுத்துத் தூங்கிவிட்டோம். உலகத்தில் மனிதனுக்கு ஆண்டவன் அளித்த வரங்களில் தூக்கத்தைப் போல் சிறந்த வரம் கிடையாது. தூங்கிவிட்டால் அதைப்போல் நிம்மதி வேறொன்றும் இல்லை.

நாங்கள் முதல் நாள் சொல்லிவிட்டு வந்தபடி பொன்னழகி சாப்பாடுடன் மறுநாள் காலையில் வந்துவிட்டாள். அவள் கொண்டுவந்த உணவை வெகு ஆர்வத்துடன் புசித்தோம், நல்ல பசியாக இருந்ததால் மூக்குப்பிடிக்க இழுத்தோம். பின்னர் ஊர் சமாசாரங்களைப்பற்றி அவளிடம் விசாரித்தோம். பொன்னழகி சொன்ன சம்பவங்கள் எங்கள் இருவரையும் திடுக்கிடச் செய்தன. ஊருக்குள்ளே போலீஸார் நடத்தும் அட்டூழியங்களைப்பற்றி பொன்னழகி சொல்லிக்கொண்டு வந்தபோது மயிர்கூச் செரிந்தது. நானும் முனியய்யாவும், சொல்ல முடியாத வேதனையடைந்தோம். துக்கம் எங்கள் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

பொன்னழகி மறுபடியும் பேச ஆரம்பித்தாள். அவளுடைய பால் வடியும் முகத்தில் கண்ணீர் வடிந்துகொண்டிருந்தது.

"அண்ணு நீங்கள் இருவரும் போலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்டால், உங்களை முச்சந்தியில் கட்டி வைத்துச் சுட்டு விடுவார்களாம்" என்று சொல்லும்போதே பொன்னழகி தேம்பித் தேம்பி அழுதாள், 'உன் கண்ணில் நீர் வழிந்தால், என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்ற கவிதையை மெய்ப்பிப்பது போல பொன்னழகியின் கண்களில் நீர்வடியும்போது, முனியய்யாவின் நெஞ்சில் இரத்தம் கொட்டுவது போல் எனக்குத் தோன்றியது.

"எனக்குத் தாயும் தகப்பனும் நீதானே அண்ணு! உன்னையும் சுட்டுவிட்டார்களென்றுல் அப்புறம் நான் என்ன கதியாவது?" என்று கதறினுள்.

நான் அவளைச் சமாதானம் செய்ய முன்வந்தேன். அவள் அருகில் சென்று என்னுடைய மேல் துண்டினுல் அவள் கண்ணைத் துடைத்துவிட்டு "பொன்னழகி நீ ஒன்றுக்கும்

பயப்படாதே! நாங்கள் இருவரும் இன்னும் இரண்டொரு நாட்களில் வட இந்தியா போகலா மென்றிருக்கிறோம். அங்கு போய்விட்டால் நம் ஊர் போலீஸ்காரர்கள் என்ன ஜகஜால வித்தை செய்தாலும், தலைகீழே நின்றாலும் எங்களைக் கண்டுபிடிக்க முடியாது. இன்னும் இரண்டு மாதத்தில் நிச்சயம் சுயராஜ்யம் கிடைத்து விடும். ஆகையால் இரண்டு மாதம்வரை தலை மறைவாக இருந்துவிட்டு, சுதந்திர இந்தியாவில் நாங்கள் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வரும் போது, இப்பொழுது நமக்கு யமனாக இருக்கும் இந்தப் போலீஸ்காரர்களே ஏவல் செய் வோராக மாறி, எங்களை எதிர்கொண்டு வர வேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எந்தக் கையினால் குண்டாந் தடியைக் கொண்டடித்து, தேசபக்தர்களின் மண்டையை உடைத்து, சாக் கடையில் போட்டு இழுத்தார்களோ, அதே கையினால் இந்த தேசத்தின் சுதந்திரக் கொடிக்கும், தேசபக்தர்களுக்கும் 'நமஸ்காரம்' செய்யும் காலம், வெகு விரைவில் வர இருக்கிறது பொன்னழகி; "ஆகையால் இப்பொழுது நீ பயப் படாமல் இருக்கவேண்டும்" என்று அவளுக்குத் தைரியம் கூறினேன்.

"நிஜமாகவா?" என்று கேட்டாள் பொன்னழகி.

"ஆமாம்! நிஜமாகத்தான்!" என்று மறுபடியும் உறுதி கூறினேன்.

"அப்படியானல், உங்களைப் பிரிந்து தனியாக நான் இருந்தால், எமனைப் பலகாரம் செய்து இந்திரனைச் சட்னி வைக்கும் இந்தப் போலீஸ் காரர்கள் என்னை இலேசில் சும்மா விடுவார் களா" என்று பரிதாபமாகக் கேட்டாள்.

நானும், முனியய்யாவும் ஏக காலத்தில் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டோம்.

"ஆமாம் பொன்னழகியைத் தனியே விட்டுச் சென்றல் போலீஸ்காரர்கள் சும்மா விடமாட் டார்கள். ஏதாவது தொந்திரவு செய்து கொண்டே இருப்பார்கள். சிறுபெண், அழகி, ஆகையால் நிச்சயம் சும்மா விடமாட்டார்கள். துன்பத்தை அவள் தாங்கமாட்டாளே" என்று முனியய்யா துக்கம் கலந்த தொனியில் சொன்ஞன்.



சின்ன

"அதைப்பற்றியும் இரண்டொரு நாட்களில் யோசிப்போம்" என்று நான் சமாதானம் சொன்னேன்.

அதுவரையில் அவள் தலைமறைவாக இருக்கும், எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவரும்போதும் போகும்போதும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை விவரமாகச் சொல்லிக் கொடுத்தேன். அவளும் அதை ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டாள்.

அன்று மாலை 5-மணிக்கு அவள் சங்கரப்பதிக் கோட்டையை விட்டுக் கிளம்பினாள். முனி யய்யா கோட்டைக்குள் இரவு படுப்பதற்கு வேண்டிய வசதி செய்து கொண்டிருந்தான். நான் பொன்னழகியுடன் கூடவே கோட்டை வாசல் வரை கொண்டுபோய் விட்டேன். கோட்டை வாசலுக்கு வந்தவுடன் 'நான் போய் வரட்டுமா' என்றாள். "சரி, போய்விட்டு ஜாக்ரதையாக நாளை வந்துசேர்" என்று சொல்லி இலேசாக அவள் கன்னத்தில் ஒரு தட்டு தட்டினேன். குறும்பாக என்னை ஒரு பார்வை, பார்த்தாள். குறுகுறுத்த அவள் விழியின் கூர்அரிவாள் வீச்சினால் என் மனம் அப்பொழுதே அறுபட்டுத் துடித்து விட்டது!

அவள் மறையும்வரை பார்த்துக்கொண்டே நின்றுவிட்டு, கோட்டைக்குள் திரும்பிச் சென்றேன்.

இப்படியே மூன்று தினங்கள் இனிமேல் நடைபெற வேண்டியவைகளுக்குத் திட்டம் போடுவதிலும், யோசனை செய்வதிலும் கழிந்தது.

நான்காவதுதினம் பொன்னழகி ஒரு பயங்கரமான சேதி கொண்டுவந்தாள். இனி வீட்டுக்குப் போனல் போலீஸார் தன்னை நிச்சயம் பிடித்துக் கொள்வார்களென்றும், ஆகையால் திரும்பிப் போகமாட்டேனென்றும் சொல்லிவிட்டாள். போலீஸார் பெண்களை மானபங்கப் படுத்துவதாகவும் தகவல் கூறினுள்.

'சரி இனி இங்கு தங்கவும் கூடாது; பொன்னழகியையும் தனியாக விட்டுச்செல்லவும் கூடாது. அவளையும் நம்முடன் கூட்டிக் கொண்டு நாளை இந்த இடத்தைவிட்டுப் புறப்பட வேண்டியதுதான்' என்று முடிவு கட்டினேம்.

யோசனை செய்திருந்தபடி திருச்சியில் ஒரு நண்பர் வீட்டில் பொன்னழகியை விட்டுவிட்டு



சின்ன

நாங்கள் வடக்கே செல்வதென்று தீர்மானித்தோம். இதற்கெல்லாம் முக்கியமாகப் பணம் வேண்டுமல்லவா? அதற்குத்தானே முதலில் ஏற்பாடு செய்யவேண்டும். ஆகையால் பொன்னழகியிடம் எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி, எனது நெருங்கிய நண்பர் ஒருவருக்கு பணங்கொடுத்தனுப்பும்படி ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தேன். நண்பர் வீட்டையும், அடையாளம் சொல்லி அனுப்பினேன்.

*   *   *

மேலே சொன்ன நான்கு நாளைய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருகப் பசியுடன் படுத்திருந்த என்னுள்ளத்தில் வேகமாக ஓடி மறைந்தன. சோம்பல் முறித்துக்கொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டும் புரண்டு படுத்தேன்.

முனியய்யா என் பசியைப் பார்த்துச் சகிக்க முடியாமல் எழுந்து நடந்தான். 'எங்கே போகிருய் முனியய்யா' என்று ஈன ஸ்வரத்தில் கேட்டேன்.

"எங்கும் போகவில்லை; அதோ தெரியும் மா மரத்தில் மாங்காய் கிடைக்கும் போலிருக்கிறது;

போய் பார்த்து வருகிறேன்'' என்று சொல்லி விட்டு தன்னுடைய வேல் கம்புடன் புறப்பட்டுச் சென்ருன்.

"சரி, ஜாக்ரதையாகப் போய்வா'' என்று சொன்னேன்.

அரைமணி நேரமாகியும், போன முனியய்யா திரும்பிவரக் காணேம். என்னல் எழுந்து நடக்கவும் சக்தியில்லை. தனியாகக் கிடந்து தவித்துக் கொண்டிருந்தேன். பொன்னழகியும் வருகிற வழியாகக் காணேம். மனம் எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணியது. எமதூதர்கள் என்னைச்சுற்றி நிற்பதுபோல் ஒரு பிரமை உண்டாயிற்று. ஆலம்விழுது காற்றில் அசைந்த போது, பாசக்கயிறு தொங்குவதுபோல் உள்ளம் நிலை தடுமாறியது. சிறிது நேரத்திற் கெல்லாம் ஆள் அரவம் கேட்டது.

சரி முனியய்யாதான் வந்து விட்டானென்று தலையைத் தூக்கிப் பார்த்தேன். பொன்னழகி பரபரப்புடன் உள்ளே வந்து கொண்டிருந்தாள். கலவரப்பட்டவளாகக் காணப்பட்டாள். கையும், காலும் வெட வெட வென்று ஆடிக்

கொண்டிருந்தது. நான் எழுந்து உட்கார்ந்தேன். "என்னசேதி பொன்னழகி...என்ன? என்ன?" என்று பரபரப்புடன் கேட்டேன்.

"அண்ணு எங்கே?" என்ருள். நான் விஷயத்தைச் சொன்னேன்.

"அய்யய்யோ இந்தப் பக்கத்துக்குப் போலீஸ் லாரி வரப்போவதாகவும், பொழுது சாய்வதற்குள் உங்கள் இருவரையும் தேடிப் பிடித்துவிடப் போவதாகவும் சொல்லிக் கொள்கிருர்கள். ஆகையால் இப்பொழுதே நாம் ஓடிவிடவேண்டும். இல்லையென்ருல் ஆபத்துதான்" என்று சொல்லித் துடித்தாள்.

நானும் உடனே "சரி வா, வெளியில் போய் முனியய்யாவைக் கூட்டிக் கொண்டு நாம் கிளம்பலாம்" என்று அவளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டேன். கோட்டை வாசலுக்கு வந்தவுடன் திடுக்கிட்டு நின்ருேம்.

பல ரிஸர்வ் போலீஸ்காரர்கள் கூப்பிடு தூரத்தில் வந்துகொண்டிருந்தார்கள். தலை கிறுகிறுவென்று சுற்ற ஆரம்பித்தது. உள்ளம் அதல, விதல, சுதல, பாதள, தராதலத்திற்குப் போய்

விட்டுத் திரும்பியது. அபிமன்யு சக்ரவியூகத்தில் அகப்பட்டுக்கொண்டு உயிர் துறந்த கதை, பளீர் என்று ஞாபகத்துக்கு வந்தது. "இனி ஆபத்துதான்; சரியானபடி அகப்பட்டுக் கொண்டோம்;" என்று நினைத்தேன்.

சட்டென்று எனக்கொரு யோசனை தோன்றியது. இந்த அலங்கோல ஆபத்தான நிலைமையில் அந்த யோசனை தோன்றியதே அது தான் ஈசன் ரகசியம் என்பதுவோ என்னவோ! பொன்னழகியின் கையைப்பிடித்து பரபரவென்று இழுத்துக்கொண்டு மறுபடியும் கோட்டைக்குள் திரும்பி ஓடினேன்.

நானும் முனியய்யாவும் ஒளிந்துகொள்வதற்காகத் தயார் செய்துவைத்திருந்த பாறையிடம் ஓடிவந்தோம். அந்தப் பாறையைப் புரட்டினேன். அங்கு தென்பட்ட குகைபோன்ற இருட்டறைக்குள் பதுங்கி மறுபடியும் குகை வாசலைக் கல்லைக்கொண்டு அடைத்துவிட்டோம். இப்பொழுது எங்கள் இருப்பிடத்தை முனியய்யாவையும், கடவுளையும் தவிர வேறு யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்று எண்ணிக் கொண்டோம்.

சலக்...சலக்...சலக் என்ற சப்தம் மெதுவாகக் கேட்டது. சப்தம் சமீபத்தில் வரவர, எங்கள் இதயம் படக், படக், படக் என்று அடித்துக் கொண்டது. போலீஸார் எங்களைத் தேடு கிறார்கள் என்பதை அறிந்துகொண்டோம். அவர்களுடைய பேச்சுக்கள் ஒன்றிரண்டு இலேசாக எனது காதில் விழுந்தது. மூச்சு விடும் சப்தம் கேட்டாலும் தொலைய வேண்டி யதுதான். உடம்பு வியர்த்துக் கொட்டிக் கொண்டே யிருந்தது. கால்கள் மரமரத்துப் போய்விட்டன. நாக்கு வறண்டு விட்டது. நெஞ்சு உறைந்துபோய்விட்டது.

நாங்கள் பதுங்கியிருந்த பாறைக்கே ஆட்கள் வந்து விட்டதுபோல் தெரிந்தது. ஆனால் எங்க ளுடைய ஆயுள் கெட்டியாக இருந்ததால் போலீ ஸார் எங்களைக் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பிவிட்டார்கள். கோட்டைக்குள் நிசப்த மாக இருந்தது. ஆயினும் நானும் பொன் னழகியும், வெளியில் வரவில்லை. மறுபடியும் போலீஸார் திரும்பி வந்தாலும் வரலாமல்லவா?

முனியய்யாவின் கதி என்ன ஆயிற்று என்பதும் தெரியவில்லை. "ஆண்டவனே அவனைத் தப்பிப்

பிழைக்கச் செய்துவிடு", என்று பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

சுமார் அரைமணி நேரத்துக்குப் பிறகு துப்பாக்கி சுடு சப்தம் 'டமீல்' என்று கேட்டது, அதைத் தொடர்ந்து 'ஹா' என்ற அலறல் சப்தம் காதைப்பிளந்தது. அந்த அலறல் என்னையும் பொன்னழகியையும் ஒரு உலுக்கு உலுக்கியது. அந்தக்குரல்........ஆம்........சந்தேகமில்லை....... முனியய்யாவின் குரல்தான்.

எங்களுக்கு வெளியில் வரவும் மனம் துணிய வில்லை. பொன்னழகியோ சுருண்டு விழுந்தாள். அதற்குள் மறுபடியும் ஆள் அரவம் கேட்டது. ஆங்காங்கே தேடிப்பார்ப்பது போலவும் தெரிந்தது.

அவர்களில் ஒருவன் சொன்னான்:—அந்தப் பயலுக்கு என்ன துணிச்சல்? எங்கே உன் சிநேகிதன் சொல்லிவிடு என்று கேட்டதற்கு ஒரேயடியாய் 'தெரியாது' என்று சாதித்து விட்டானே!

இன்னொருவன் 'அவன் பெரிய வீரந்தாண்டா நம்மையெல்லாம் கொஞ்ச நேரத்தில் கலங்க

வைத்துவிட்டானே அவனைப் பிடிப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டதே' என்றான். "என்ன அதிசயமடா! மரத்தில் கட்டி வைத்து 'உன் சிநேகிதன் இருக்குமிடத்தைச் சொல்லி விடு. இல்லாவிடில் சுட்டுவிடுவேன்' என்று இன்ஸ்பெக்டர் எஜமான் சொன்னபோது, அவன் எப்படிப் பதில் சொன்னான் பார்த்தாயா? 'தேசத் துரோகம் செய்து என் நண்பனைக் காட்டிக் கொடுக்கமாட்டேன், தாராளமாய் சுடுங்கள்,' என்று சொன்னானே பெரிய சூராதி சூரண்டா, என்றான் வேறொருவன்.

"அய்யோ பாவம்! செத்துப்போனான். இன்ஸ்பெக்டர் எஜமான் அவனை லாரியில் போட்டு ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய்விட்டார்" என்று அவர்கள் பேசிக்கொண்டதைக் கேட்டபோது என் தலை சுக்கு நூறாக நொறுங்கியது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. வாய்விட்டு கதறி அழமுடியாமல் தவித்தேன். அடாடா... கடைசியில் முனியய்யாவும் எனக்காகவே உயிர் விட்டுவிட்டானா? சுதந்திர தேவியே உனக்கு இதுவரையில் இந்திய மக்கள் கொடுத்தபலி போதாதா? முனியய்யாவின் உயிரையும் எடுத்

துக்கொண்டாயே'' என்று என்வாய் முணு முணுத்தது.

ஆயினும் என் துக்கத்தை அதிகமாகக் காட்டிக் கொள்ளக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டேன். ஏனெனில் பொன்னழகியைப் பின்னர் தேற்றுவது மிகவும் கஷ்டமாகிவிடும் அல்லவா?

'சரி இங்கே ஒருவரையும் காணேம் போகலாம் வாருங்கள், என்று சொல்லிவிட்டு எமகிங் கிரர்கள் போன்றிருந்த போலீஸ்காரர்கள் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் விட்டார்கள்.

பின்னர் நானும் பொன்னழகியும் பாறையைத் தள்ளிக்கொண்டு வெளியில் வந்தோம். உடம் பெல்லாம் 'வெடவெட' வென்று ஆடியது. உள்ளத்தில் புயல் கூத்தாடியது.

பொன்னழகி அழுதாள்; தவித்தாள் சோர்ந்து சோர்ந்து மயக்க மடைந்தாள்; ஆனுல் இனி என்ன அழுது என்ன செய்வது?

இனிமேல் அந்த இடத்தைவிட்டே இருவரும் தப்பிவிட வேண்டியதுதான். ஆனால் கலியாண மாகாத இளம் பெண் ஒருத்தியுடன் நான் எப்படிப் போவது? ஊரில் உள்ளவர்கள் என்ன நினைக்கமாட்டார்கள்? என்று யோசித் தேன். பொன்னழகியை விட்டு விட்டுப் போனால் அவளுக்கு ஆதரவு ஏது?

அவள்தான் என்ன செய்வாள்? அவளுடைய அண்ணன் எனக்காகத் தன்னுடைய உயிரையும் கூடத் தியாகம் செய்து விட்டானே. ஆகை யால் என்ன கஷ்ட நஷ்டம் வந்தாலும், பொன் னழகியைக் கூட்டிக்கொண்டு போக வேண்டி யதுதான் என்று முடிவு செய்து கொண்டேன். சோகமே உருவெடுத்தது போல் இருந்த பொன் னழகியை அழைத்துக்கொண்டு கோட்டைக்கு வெளியில் வந்தேன்.

இலேசாக வெளிச்சம் இருந்தது. முனியய்யா சுடப்பட்ட இடத்தைத் தேடிக்கொண்டு வந்தோம். அந்த வீரனுடைய இரத்தம் பல இடங்களில் சிந்திக்கிடந்தது. அதைப் பார்த்த பொன்னழகி கதறிப் பதறினாள். நானும் விம்மி விம்மிப் பொருமினேன். இப்படி ஐந்து நிமிஷம்

கழிந்தது. பின்னர் பொன்னழகி அழுவதை நிறுத்தி ஒரு ஆவேசக்குரலில் "என் அண்ணு சாமியாகப் போய்விட்டார்!" என்ருள்.

நம் முன்னோர்கள் புகட்டிவைத்த தெய்வீக ஞானம், சோகத்தின் எல்லையில் எந்த நாஸ்திகனுக்கும் நிச்சயம் தோன்றும் என்பதில் சந்தேகமில்லை.

"ஆம் முனியய்யா தெய்வந்தான். தேசத்துக்காகத் தியாகம் செய்த எவனும் தெய்வமே!" என்று நான் ஆமோதித்தேன்.

எங்கள் துக்கம் கொஞ்சம் அடங்கியது. ஒரு அரைமணி நேரம் நானும், பொன்னழகியும் மௌனமாகவே அந்த இடத்தில் உட்கார்ந்திருந்தோம். பின்னர் பொன்னழகி என்னைப் பார்த்து. "இனி நீங்கள்தான் எனக்கு ஆதரவு" என்ருள்.

"ஆம் நான்தான் இனி உனக்கு ஆதரவு" என்று ஆமோதித்தேன்.

"என் அண்ணு சாமியாகப்போன இந்த இடத்திலேயே நாம் இரண்டுபேரும் கலியாணம்

செய்து கொண்டுவிடுவோமே” என்று சொன்னாள்.

உடனே நான் “எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் எந்த நிமிடமும் போலீஸார் என்னைச் சுட்டுக்கொன்று விடலாம்; சாவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் என்னைக் கலியாணம் செய்து கொண்டு என்னபிரயோசனம்?” என்று அவளைக் கேட்டேன். அவளுடைய முகத்தில் ஒரு புதிய பிரகாசம் தோன்றியது.

“அதனால் பாதகமில்லை; அதற்காக நான் கவலைப் படவுமில்லை. யாரோ ஊர் பேர் தெரியாத ஒருவரைக் கட்டிக்கொண்டு நூறு வருஷம் சாரமில்லாத வாழ்க்கை வாழ்வதைக் காட்டிலும், தங்களுக்கு ஒரு நாள் மனைவியாக இருந்தாலும் போதும். நாளையே தங்களைப் போலீஸார் சுட்டுவிட்டாலும் என் வாழ் நாள் முழுவதும் என்னை, இன்ன தேச பக்தருடைய மனைவி என்று ஊரார் சொல்லிக் கொண்டிருப்பார்கள் அல்லவா? அதுவே போதும்” என்று உணர்ச்சியுடன் கூறினாள்.

இவ் வார்த்தைகள் என்னை ஒரு கலக்கு கலக்கியது. அறிவு தெளிந்தது. ஆகா! எப்பேர்ப்பட்ட

அற்புதமான உண்மையைப் படிக்காத ஒரு கிராமத்துப்பெண் சொல்லிவிட்டாள். தேச பக்தியும் வீரமும் ஒன்ருக உருவெடுத்த பெண் தெய்வம்தான் பொன்னழகி!

உடனே சட்டென்று கீழே குனிந்து அங்கு சிந்திக்கிடந்த முனியய்யாவின் இரத்தத்தை எடுத்து பொன்னழகியின் நெற்றியில் திலக மிட்டேன். எங்களுக்காக முனியய்யா சிந்திய இரத்தத்தின் சாட்சியாக எங்கள் திருமணம் நடந்தது! பின்னர் இருவரும், முனியய்யா எப் பொழுதும் கையில் வைத்திருக்கும் வேல் கம்பை எடுத்து, அவன் சுடப்பட்ட இடத்தில் நட்டு வைத்து வீர வணக்கம் செய்தோம்.

கடைசியாக, அந்த இடத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் கண்கள் கலங்கப் பிரிந்து சென்ருேம்.

பொன்னழகி நான் சீட்டுக் கொடுத்தனுப்பிய நண்பரிடம் வாங்கிக்கொண்டு வந்த ஆயிரம் ரூபாயையும் என்னிடம் கொடுத்தாள். பக்கத்தி லிருந்த ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று 'போட்மெயிலில்' ஏறிச் சென்னேக்குச் சென்று,

அங்கிருந்து காசிக்குப் பிரயாணமானேம். காசியிலிருந்த என்னுடைய நண்பர் ஒருவரின் உதவியால் நான்கு வருஷம் நானும் பொன்னழகியும் சௌக்கியமாக வாழ்ந்து வந்தோம். பொன்னழகி அந்த நான்கு ஆண்டுகளில் உலக விஷயங்களைக் கற்றறிந்தாள். தமிழும், ஆங்கிலமும் பயின்ருள்.

தேசத்திற்கு நல்லகாலம்பிறக்க, நான்கு ஆண்டுகளாயிற்று. தலைவர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டார்கள். வாரண்டுகள் ரத்து செய்யப்பட்டன. இந்த விவரங்கள் தெரிந்ததும், நானும் பொன்னழகியும் சொந்த ஊருக்குப் புறப்பட்டு வந்தோம். ரயிலிலிருந்து இறங்கி பஸ்ஸில் ஏறினேம். பஸ், சங்கரப்பதிக்கோட்டைக்கு வந்ததும், பஸ் கண்டக்டர் 'ஹோல்டன்' என்ருர். பஸ் நின்றவுடன், கண்டக்டர் கீழே இறங்கினுர். உடனே பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் அனைவரும் ஆளுக்கொரு தேங்காய் எடுத்து கண்டக்டரிடம் கொடுத்தார்கள். தேங்காய் கொடுக்காதவர்கள் நானும் பொன்னழகியும் தான்!

கண்டக்டர் அத்தனை தேங்காயையும் உடைத்து விட்டுக் கும்பிட்டான். பிரயாணிகள் எல்லோரும் கும்பிட்டார்கள். எனக்கு ஒன்றும் விளங்க வில்லை. பொன்னழகிக்கும் ஒன்றும் புரிய வில்லை. ஏனெனில், நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த மாதிரி வழக்கம் அங்கே கிடை யாது. ஆகையால் விவரம் தெரிந்து கொள்ளும் பொருட்டு "இங்கென்ன விசேஷம்?" என்று ஒரு பிரயாணியைக் கேட்டேன். "சங்கரப் பதிக்கோட்டை முனியய்யாவுக்குத் தேங்காய் உடைப்பது பிரயாணிகள் வழக்கம்" என்று சொன்னார் மேற்படி பிரயாணி.

"அது ஏன்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன். உடனே பக்கத்திலிருந்த ஒருவர் "முனியய்யா என்று ஒரு தேசபக்தர் இருந்தார். அவரைப் போலீஸார் இந்த இடத்தில் தான் சுட்டுக் கொன்று விட்டார்கள். அவர் இறந்து கீழே விழுந்த அந்த இடத்தில் மறுநாள் ஒரு வேல்கம்பு முளைத்துவிட்டது. ஆகையால் அன்று முதல் ஜனங்கள் பயபக்தியுடன் இந்த இடத்துக்கும் பூஜை செய்வது வழக்கமாகி விட்டது" என்று சொல்லி நிறுத்தினார்.

வேல் கம்பு தானாக முளைக்கவில்லை என்பதும் அதை நானும் பொன்னழகியும் தான் நட்டு வைத்தோம் என்பதும் ஜனங்களுக்கு எங்கே தெரிந்திருக்கப் போகிறது? எனினும் ஜனங்கள் முனியய்யாவை எவ்வளவு கொண்டாடினாலும் தகும். தெய்வமாகக் கொண்டாடினாலும் தவறு ஒன்றுமில்லை.

ஆம், தேசத்திற்காகத் தியாகம் செய்த முனி யய்யா தெய்வம் தான்!

# குண்டலகேசி

குகுகுகுகுகுகுண்ண்ண்டடடடலலலலகேகேகேகேசிசிசிசி

அன்புள்ள ஸரஸாவுக்கு,

சூரியோதயம் வந்தேதீரும் என்ற முழு நம்பிக்கையோடு இருண்டிருக்கும் இரவு போல, "உன்னுடைய கடிதம் இன்று எப்படியும் வந்தே தீரும்" என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

"தபால் ஸார்!" என்ற குரல் கேட்டது.

பணியாள் தபால் குவியலை என் முன் கொண்டு வந்து வைத்தான். பரபரப்புடன் உன் கடிதத்தைத் தேடினேன். உன்னுடைய நீலநிறக் கவர் கிடைத்தது.

'ஆனந்தத்தினால் மனிதன் இளைஞனாகிறான்' என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே நான் இளைஞனானபடியால், உன் கடிதத்தைப் படித்த ஆனந்தத்தில், நான் பாப்பாவாகி விட்டேன்!

"அந்தப் பூவயினுடைய கதையை எழுதமாட்டீர்களா?" என்று இத்துடன் நூறு தடவை கேட்டுவிட்டாய். நீ நேரில் கேட்டபோதெல்லாம் கூட அந்தத் துயரக் கதையை உன்னிடம் சொல்லவேண்டாம் என்று மழுப்பியே வந்தேன். ஆனால் நீயோ 'விடேன் தொடேன்' என்று கடிதத்திற்குக் கடிதம் "பூவாயியின் கதையை எழுதமாட்டீர்களா?" "எழுதமாட்டீர்களா?" என்று எழுதிக்கொண்டேயிருக்கிறாய்.

டாக்டரிடம் வெட்கப் பட்டால் முடியுமா? அதேபோல் உன்னிடம் இன்றைக்கோ நாளைக்கோ எல்லா விஷயத்தையும் சொல்லத் தானே வேண்டும்?

* * * *

பூவாயியின் தகப்பன் முருகன், தாய் நாச்சம்மை இருவரும் நமது வீட்டில் நான் பிறக்கு முன்பே குடியிருந்து வந்தவர்கள். முருகன் தோட்ட வேலை, வண்டி ஓட்டுகிற வேலை முதலியவற்றைச் செய்து வந்தான். நாச்சம்மை வீட்டு வேலைகளுக்கு என் தாயுடன் ஒத்தாசையாக இருந்து வந்தாள். என்னைத் தூக்கிக்கொண்டு விளையாடுவதில் முருகனுக்கு

ஒரு தனி ஆனந்தம். பார்க்கப்போனுல் என்னை வளர்த்தவர்களே முருகனும் நாச்சம்மை யும்தான் !

எனக்கு வயது ஐந்தானபோது நாச்சம்மைக்கும் முருகனுக்கும் பூவாயி பிறந்தாள். "கொஞ்ச நேரம் முந்திப் பிறந்திருந்தால் ராஜா வீட்டில் பிறந்திருப்பாள் இந்தக் குட்டி" என்று பூவாயி யைப் பார்த்தவர்கள் சொல்லிக் கொண்டார் களாம். அவளுக்கு ஒரு வருஷம் பூர்த்தியா யிற்று. மஞ்சு விரட்டில் மாடு பிடிக்கப் போன முருகனை ஒரு மாடு குத்தியதால், அவன் படுத்த படுக்கையாகச் சில நாட்கள் கிடந்து இறந்து விட்டான். நாச்சம்மையும், பூவாயியும் எங்கள் ஆதரவில் வசித்து வந்தனர்.

யுத்தத்தின் போது சிங்கப்பூர் சென்ற என் தகப் பனுர் திரும்பி வரமுடியாமல் அங்கேயே தங்கி விட்ட விவரம் உனக்கு ஏற்கெனவே தெரியும். எங்கள் சொத்தெல்லாம் சிங்கப்பூரில் தான் இருக்கிறது.

நான் சிறுவயது முதல் ஒவ்வொரு நிமிஷத் தையும் பூவாயியுடனேயே கழித்திருக்கிறேன்.

பொழுது போவதே தெரியாமல் நாங்கள் தோட்டத்தில் எத்தனையோ முறை விளையாடி யிருக்கிறோம். அவள் வளர்ச்சியை நிமிஷத்திற்கு நிமிஷம் நான் அறிவேன். வயது ஆக ஆக அவளுடைய வளர்ச்சி வளர் பிறைச் சந்திரன் போல ரம்யமாக இருந்தது.

காற்று உள்ளே புகக் கூடாதென்று நாம் ஜன்னல்கள், கதவுகள் முதலியவற்றை இறுக்கி மூடி விட்டாலும் எப்படியோ காற்று நம் அறைக்குள் புகுந்து விடுகிறது. அதைப் போலவே எவ்வளவு உறுதியுள்ள நெஞ்சமாக இருந்தாலும் பலஹீனமான எண்ணங்கள் நம் உள்ளத்துக்குள்ளே புகுந்துவிடுகின்றன.

நான் இதற்கு விலக்கானவன் அல்ல. என் மனதிலும் பூவாயியைப் பற்றிப் பலஹீனமான எண்ணங்கள் புகுந்து விட்டன. நாச்சம்மைக்கு வயதாகி விட்டதால் அவள் என் வயதான தாயாருடன் எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பாள். வயதான இருவர் கூடினால் என்ன பேச்சு நடக்கும்? கேட்பானேன்? மோட்ச லோக சாம்ராஜ்யத்தைப் பற்றிய தொண தொணப்புத்தான்!

பூவாயிதான் எங்கள் வீட்டு வேலைகளைச் செய்வாள். நான் குளிப்பதற்கு வேண்டிய வசதி செய்வது, காப்பி தருவது, சாதம் போடுவது, படுக்கை விரிப்பது முதலிய சகல வேலைகளையும் அவள் தான் செய்வது வழக்கம்.

"அண்ணா, அண்ணா!" என்று அவள் என்னை அன்புடன் அழைக்கும்போது, எனக்கு என்னமோ மாதிரி யிருக்கும். ஏனெனில், நான் அவளை என் தங்கையாகப் பாவிக்கத் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக, நான் அவளை என் விஷமக் கண்களால், ஆசை இதயத்தால் பார்ப்பேன்!

ஒருநாள் பூவாயியிடம் என் இலக்கிய மேதையைக் காட்டும் பொருட்டு, "பூவாயி, ஒரு மலரை மலர்விக்க சூரியனின் கிரணங்கள் அவசியமல்லவா? அந்த மாதிரியே ஒரு பெண்ணின் இருதயம் பூரண மலர்ச்சியுடன் பொலிவுற்றுத் திகழ வேண்டுமானால் அதற்கு ஒரு ஆதரவு வேண்டாமா?" என்றேன்.

அவள் தன் கண்களை அகல விழித்து, "என்ன அண்ணா! நீ சொல்லுவது எனக்கு ஒண்ணும்

தெரியலையே!” என்று சொல்லிக் கொண்டே ஓடிவிட்டாள்.

‘ஏழைக்கு அழகும், நோயாளிக்கு நெய்யும் விஷம்’ என்று சொல்லுவது எவ்வளவு உண்மை!

என் இதயம் பூவாயியைப் பார்ப்பதில் பூரிப் படைந்திருந்தாலும், ‘கௌரவமாகக் குடும் பத்தை நடத்துவதற்குப் பணம் வேண்டுமே’ என்ற கவலையிலும் ஆழ்ந்திருந்தது.

* * * *

ஒரு நாள் நான் கடற்கரைக்குச் சென்றிருந் தேன். “பணமே! உன்னால் என்ன குணமே” என்று வானொலியில் யாரோ ஒருவர் அட்டகாச மாகப்பாடிக் கொண்டிருந்தார். அவர் பாடு வதும் அந்தப் பணத்திற்காகத்தானே? விளக் கைச் சுற்றி வட்டமிடும் விட்டில் பூச்சியைப் போல, என் மனதில் “பணத்திற்கு என்ன செய்வது?’ என்ற கேள்வி வட்டமிடலாயிற்று.

பரீட்சையில் விழிக்கும் பையனைப் போல் மேற் படி கேள்விக்குப் பதில் ஒன்றும் தோன்றாமல்

மணலைக் கிளறிக் கொண்டேயிருந்தேன். மணலைக் கிளறக் கிளற உள்ளேயிருந்து பல விதமான கிளிஞ்சல்கள், சிப்பிகள் வெளியே வந்தன. வளைந்தவை வட்டமானவை, நீண்டவை, அகலமானவை இன்னும் எத்தனையோ விதக் கோணல்கள். அவைகளில் அழகான சில வற்றைப் பொறுக்கிச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு சூன்ய மனதுடன் வீடு வந்து சேர்ந்தேன். பூவாயி சமைத்து வைத் திருந்தாள்.

என் தாயார், "ஏண்டாப்பா! இவ்வளவு நேரம் கழித்து வந்தால் உடம்பு என்னத்திற்கு ஆகும்? இந்த வயதில் உனக்குப் பெருங் கவலையைக் கொடுத்து விட்டு உன் அப்பா சிங்கப்பூரில் சிக்கிக் கொண்டு விட்டார். எல்லாம் இந்தப் பாழாய்ப் போன யுத்தத்தால் வந்தது!" என்றெல்லாம் யுத்தத்திற்குச் சரம கவி பாடினாள்.

சாப்பிட்டு விட்டு நான் மாடியில் போய்ப் படுத் தேன். வழக்கப்படி பூவாயி மாடிக்குப் பால் கொண்டு வந்து கொடுத்தாள்.

"பூவாயி, உனக்காகச் சில சாமான்கள் கொண்டு வந்திருக்கிறேன், இங்கே வா!" என்றேன்.

அவள் "எனக்கா!" என்று நெஞ்சில் கையை வைத்துக் கொண்டே என் அருகில் வந்தாள்.

அவளுடைய கையில் நான் பொறுக்கி வந்த கிளிஞ்சல்—சிப்பிகளை வைத்து மூடினேன். அவள் 'கலீர்' என்று சிரித்துக் கொண்டே சிட்டாகப் பறந்து விட்டாள். அந்தக் கையின் ஸ்பரிசத்தை நினைத்து நினைத்து இன்புறுவதற்காக, நான் அன்று இரவு முழுவதும் நித்திரா தேவியுடன் 'டூ' விட்டு விட்டேன்.

* * * *

மறுநாள் காலையில் எதிர் வீட்டிலிருந்த ரேடியோ 'மாலைப் பொழுதினிலே' என்று பாட ஆரம்பித்து விட்டது. அந்த நாத வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தேன்.

"அண்ணு!" என்று கூப்பிட்டுக் கொண்டே பூவாயி ஓடிவந்தாள்.

"என்ன பூவாயி?" என்றேன்.

"என் காதைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிக் கொண்டே அருகில் வந்தாள்.

அவளுடைய காதில் குண்டலம் தொங்கிக் கொண்டிருந்தது. நான் அதற்கு முதல் நாள் இரவு கொண்டுவந்த கிளிஞ்சல் சிப்பிகளில் ஒரு ஜோடியை எடுத்து நன்ருகத் தேய்த்து அதில் துவாரம் போட்டுக் கயிற்றைக் கட்டிக் காதில் மாட்டிக் கொண்டிருந்தாள். அப்படி யிப்படி அசையாமல் அவள் என் அதிசயப் பார்வையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று தேள் கொட்டினுல் மனிதன் எப்படித் தன் காலை உதறிக் கொண்டு குதிப் பானே, அப்படியே நானும் திடீரென்று "பூவாயி!" என்று சொல்லிக் குதித்தேன். அவள் மிரண்டு போனுள்.

'விறு விறு' என்று என் மூளை வேலை செய்ய ஆரம்பித்தது.

என் முகத்தையும், மௌனத்தையும் பார்த்துப் பயந்த பூவாயி, "என்ன, அண்ணு! உடம்பு சரி யில்லையா?" என்று கேட்டாள்.

"பூவாயி, நீ தெய்வம்தான்!" என்றேன். எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ

என்று நினைப்பது போல அவள் என்னைப் பார்த்தாள்.

"பூவாயி, நிஜமாச் சொல்றேன்; எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீ காதிலே போட்டிருக்கிறாயே, அந்த மாதிரி எத்தனை ஆயிரம் கிளிஞ்சல் சிப்பி வேணுமானாலும் சமுத்திரக் கரையிலே கிடைக்கும். அதையெல்லாம் பொறுக்கி வந்து, நன்றாகத் தேய்த்து, குண்டலமாகச் செய்து விற்றால் என்ன? இது ஒரு நல்ல வியாபாரமில்லையா?" என்றேன்.

அவள் ஆச்சரியத்தால் புருவத்தை உயர்த்தி இரத்தினக் குவியல் கிடைத்த ஏழை போல பேச வாயில்லாமல் கல்லாய்ச் சமைந்து விட்டாள்.

இந்தச் சமயத்தில், "பூவாயி!" என்று என் தாயார் கூப்பிட்ட குரல், எங்கள் சிந்தனையைக் கலைத்தது. அவள் கீழே போய் விட்டாள்.

என் மனம் திட்டம் போட ஆரம்பித்து விட்டது. புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள இரண்டு விதிகள் அவசியம். ஒன்று

செயலில் இறங்கு முன் 'சிந்தனை.' மற்றது, செயலில் இறங்கிய பின் 'அடக்கம்.'

குண்டலம் செய்து விற்பது நல்ல வியாபாரம் தான். எதுதான் நல்ல வியாபாரமில்லை? செய்கிறவன் ஒழுங்காகச் செய்தால் எல்லாம் நன்றாக நடக்கும். இப்பொழுது குண்டலத்திற்கு நல்ல கிராக்கி, அதிலும் தினுசு தினுசாக, அழகாகச் செய்து விட்டால்—விலையும் மலிவாக இருந்து விட்டால்—அப்புறம் கேட்பானேன்? என்று எண்ண ஆரம்பித்தேன்.

சிந்தனை முடிந்து விட்டது. செயலில் இறங்க வேண்டியது தானே?

சென்னையில் மௌண்ட்ரோட்டில் ஒரு கடை கிடைப்பது பகீரதப் பிரயத்தன மாகப்போய் விட்டது. இக் காலத்தில் அறம், பொருள், இன்பம் வேண்டுமானாலும் கிடைக்கும்; வீடு கிடைப்பதுதான் கஷ்டம். ஆனாலும் சிபார்சினால் ஆகாத காரியம் உலகில் ஒன்றுமில்லை யல்லவா? எனக்கு ஒரு நண்பரின் சிபார்சினால் இடம் கிடைத்துவிட்டது.

ஒரு நல்ல நாள் பார்த்து 'குண்டலகேசி அண்டு கோ' என்ற பெயருடன் கடையைத் திறந்தேன். கிளிஞ்சல் சிப்பிகளைப் பொறுக்கி வர நான்கு வேலையாட்களை நியமித்தேன். என் தாயாரிடம் அனைத்தையும் கூறி, அவள் சம்மதமும் பெற்றுக் கிளிஞ்சல் சிப்பிகளை அழகாகத் தேய்ப்பதற்காகப் பூவாயியையும் கூட்டிக் கொண்டேன்.

தேய்த்த கிளிஞ்சல்களில் புதுப் புது மாதிரியான வர்ணச் சித்திரம் தீட்ட இரு சித்திரக்காரர்களையும் நியமித்தேன்.

வேலை 'விறு விறு' வென்று நடக்க ஆரம்பித்தது. ஆயிரக் கணக்கான குண்டலங்கள் 'ஷோ ரூ' மிற்கு வந்து விட்டன.

எல்லாப் பத்திரிகைகளிலும் 'குண்டலகேசி அண்டு கோ' விளம்பரம் பூவாயியின் படத்துடன் தொடர்ச்சியாக வெளிவர ஆரம்பித்தது. "மண்டலமெங்கும் மங்கையர் விரும்புவது குண்டலமே" என்ற விளம்பர வாசகங்கள் பத்திரிகைகளை அலங்கரித்தன.

ஒரு ஜோடி குண்டலத்தின் விலை அணா எட்டுத்தான். "எவ்வளவு மலிவு!" என்று

உலகத்தின் பல பாகங்களிலிருந்து ‘ஆடர்கள்’ வந்து மலை மலையாகக் குவிந்தன.

சில தினங்களுக்குப் பிறகு பூவாயி கடைக்குப் போவதை நானே தடுத்துவிட்டேன். அவளால் தானே இவ்வளவு லாபமும், இனி அவள் ஏன் கடையில் வேலை செய்ய வேண்டும்.

ஆனல் அவள் மட்டும் எப்பொழுதும் எனக்குப் பணிப் பெண்ணுகவே இருந்தாள் !

பணம் பெருகியதால் என் தாயார் எனக்குக் கல்யாணம் செய்ய வேண்டுமென்று துடித்தாள். நான், “அப்பா வரட்டும், பார்த்துக் கொள்ளலாம்” என்று தட்டிக் கழித்து வந்தேன்.

* * * *

ஒரு நாள் இரவு பூவாயி எனக்கு வழக்கம்போல் சாதம் பறிமாறினுள். என் தாயாரும் அவள் தாயாரும் ஹாலில் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள். நான் சாப்பிடாமல் பூவாயியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"என்ன, அண்ணு! என்னே விழுங்கிவிடற மாதிரி பார்க்கிருயே!" என்று கூறிச்சிரித்தாள்.
"ஆமாம் பூவாயி! உன்னே விழுங்கி விட வேண்டுமென்றுதான் பார்க்கிறேன்!"

"சோத்தை விழுங்கிஞலும் பிரயோஜனம் உண்டு; என்னே விழுங்கிஞ என்ன பிர யோஜனம்?"

"இத்தனே நாளும் சோற்றை விழுங்கி விழுங்கி என்ன சுகத்தைக் கண்டேன்? ஊன் தான் பெருத்தது; உள்ளம் பெருக்கவில்லே......"

"பின்னே என்னே விழுங்குவது தானே அண்ணு?" என்று அவள் என் அருகில் வந்து உட்கார்ந்தாள். என்னுடைய ஆசை வெள்ளம் கரை புரண்டது.

அருகிலிருந்த அவளேச் சாதம் பிசைந்து கொண் டிருந்த கையுடன் அணேக்கச் சென்றேன். அவள், "ஐயோ! அண்ணு! இதென்ன?" என்று விலகி நின்ருள்.

நான் அருகில் சென்று, கோபமா?" என்று கேட்டேன். அவள் கண்ணீர் விட்டுக்கொண்டே

"அண்ணு! என்னை வளர்த்த நீங்க, எனக்குப் புருசனுவதைவிட அண்ணுவாகவே இருந்தால் அவ்வளவு நல்லாயிருக்கும்?" என்ருள். இந்தச் சமயத்தில் எங்களுக்குப் பின்னுல் யாரோ வரும் சத்தம் கேட்டது. இருவரும் பிரிந்து விட்டோம். இரவு முழுவதும் எனக்குத் தூக்கமில்லை. மறு நாள் வழக்கம்போல் "அண்ணு!" என்று கூப்பிட்டுக் கொண்டே மாடிக்கு வரும் பூவாயி அன்று வரவில்லை. நான் அவள் குடிசைக்குச் சென்றேன். அவளுக்கு நல்ல ஜுரம் அடித்துக் கொண்டிருந்தது.

"பூவாயி!"

அவள் என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

"உடம்பை என்ன செய்கிறது, பூவாயி?"

"ஏதோ தெரியலே, அண்ணு!" என்று அவள் நடுங்கிக் கொண்டே பதில் சொன்னுள்.

அதற்குமேல் நான் அவளை ஒன்றும் கேட்க வில்லை. பரபரப்புடன் சென்று டாக்டரை அழைத்து வந்தேன்.

"ஏதோ மன அதிர்ச்சியால் உண்டான கோளாறு!" என்று சொல்லி டாக்டர் மருந்து கொடுத்தார்.

அன்று முழுவதும் நான் பூவாயிக்குத் தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு, "இப்பொழுது எப்படி இருக்கிறது, பூவாயி?" என்று நான் அவளை விசாரித்தேன்.

"நான் சாகப் போகிறேன், அண்ணு!" என்ருள் அவள்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது "பேசாமலிரு பூவாயி!" என்றேன்.

"நான் பிழைத்து விட்டால் என்னை நீங்கள் கலியாணம் செய்து கொண்டு விடுவீர்கள் அல்லவா? அதனுல்தான் செத்துப் போகலாம்னு பார்க்கிறேன்.

நானே ஏழை; கீழ் ஜாதி; என்னைக் கல்யாணம் செய்து கொண்டால் உங்களுக்கு எப்பவும் கஷ்டம்தான். அதைவிட நீங்கள் எப்போதும்

என் அண்ணுவாகவே இருப்பதுதான் நல்லது. இன்னும் கொஞ்ச நாளைக்கு நான் ஜீவித் திருக்கணும்னு நீங்க எனக்கு அண்ணுவா யிருந் தால்தான் முடியும்?'' என்று சொல்லி அவள் கண்ணீர் பெருக்கினுள்.

என் மனம் இளகி விட்டது. "அதற்கென்ன, பூவாயி! நான் உனக்கு அண்ணுவாகவே இருக் கிறேன்!'' என்றேன்.

*   *   *   *

நான் தங்கையாகப் பாவிக்க ஆரம்பித்தவுடன் அவள் உடல் நிலை தேற ஆரம்பித்து விட்டது.

இந்நிலையில் அவள் என் கல்யாணத்தைப்பற்றி விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டாள். நீ அப்பொழுது கலைமகள் வித்தியாசாலையில் படித்துக் கொண்டிருந்தாய். எங்கள் வீட்டின் வழியாகத்தானே நீ பள்ளிக்கூடத்திற்குப் போவது வழக்கம்? அப்பொழுதெல்லாம் பூவாயி உன்னைக் கவனித்திருக்கிறுள். அவள் மனதிற்கு நீ பிடித்து விட்டாய். உடனே உன்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படி



சின்ன

என்னை வற்புறுத்த ஆரபித்து விட்டாள். உன்னுடைய அருமை பெருமைகளை அவள் என்னிடம் அடிக்கடி எடுத்துச் சொல்லுவாள். ஒரு நாள் நீ பள்ளிக்கூடம் போகும் போது பூவாயி ஓடோடியும் வந்து என்னைக் கூப்பிட்டு உன்னைப் பார்க்கும்படிச் சொன்னாள். நானும் பார்த்தேன். எனக்கு உன்னைப் பிடித்திருப்பதாக அவளிடம் சொன்னேன்.

கலியாணம் நிச்சயமாகிவிட்டது. பலஹீனமான உடல் நிலையுடன் பூவாயி ஓடி ஆடித் திரிந்தாள். மறு நாள் விடிந்தால் முகூர்த்தம். முதல் நாள் இரவு திடீரென்று பூவாயிக்கு மயக்கம் வந்தது. அவளை வற்புறுத்திப் படுக்க வைப்பதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. என் தாயாரையும் அவள் தாயாரையும் பூவாயிக்கு துணையாகப் படுக்கச் சொல்லிவிட்டு நான் மாடிக்குப் படுக்கப் போனேன்.

நடு ஜமாத்தில் "அண்ணா!" என்ற பூவாயியின் அலறல் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன்.

எங்கும் இருட்டு; ஒன்றும் தெரியவில்லை. என் மாடி அறையை ஒட்டினாற்போல் படிகள்

இருந்தன. நான் ஓடிவந்த வேகத்தில் பூவாயி யைக் கவனிக்கவில்லை. அவள் மீது மோதிக் கொண்டுவிட்டேன். அவ்வளவுதான்; அவள் அடுத்த க்ஷணம் மாடிப்படியில் உருண்டு சென்று கொண்டிருந்தாள்! வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் 'திருடன்தான் வந்துவிட்டானுக்கும்' என்று நினைத்துக் கூக்குரல் போட்டனர். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வேலைக்காரர்கள் மின்சார விளக்குகளைத் தட்டி விட்டனர்.

பூவாயி இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

டாக்டருக்கு ஆள் ஓடிற்று; அவரும் வந்தார்.

"என்ன, டாக்டர்! விடிந்தால் கலியாணம்; எப்படி இருக்கிறது, நிலைமை?" என்று நான் தழ தழத்த குரலுடன் கேட்டேன்.

"எல்லாம் சௌகரியமாய்ப் போய்விடும், ஸார்! ஆனல் கொஞ்ச நாளாகும்! என்றுர் அவர்.

கெட்டிக்கார டாக்டர்களே இப்படித்தான் நோயாளியையும் சாகவிட மாட்டார்கள் நோயையும் சாகவிடமாட்டார்கள்.

பின்னர், டாக்டர் சொல்லியபடி பூவாயியை வேறு வீட்டிற்குத் தூக்கிக் கொண்டு போய்ப் படுக்க வைத்தோம்.

விடிந்தது. சூரியனின் உதயம் என் நிலைமையைக்கண்டு பரிகசிப்பது போலிருந்தது! கடைசியில் என்ன? கொட்டு மேளத்துடன் எனக்கும் உனக்கும் திருமணம் நடந்தேறியது.

மாலையில் பூவாயிக்கு 'அதிக' மாக இருப்பதாகச் சொன்னார்கள். அவள் இருந்த இடத்திற்கு நான் மணக்கோலத்துடன் ஓடினேன். அவளுடைய கடைசி மூச்சு என்னிடம் விடை பெற்றுக் கொண்டது.

இதுதான் பூவாயியின் கதை. இதை நீ அறியாமல் இருந்தால் நலமென்று இத்தனை நாளும் கருதினேன். ஆனால், பந்தை என்னதான் தண்ணீரில் அமுக்கினாலும் அது எப்படியும் மேலே மேலே வந்துதான் ஆகவேண்டுமல்லவா? அதைப் போல இந்தச் சம்பவமும் உனக்கு ஒரு நாள் தெரிய வேண்டியதுதானே!

கடிதம் அனுமார் வால்போல் ரொம்ப ரொம்ப நீண்டு விட்டது. இதோ, அதைச் சுருட்டிக் கொண்டு விடுகிறேன்.

என்றும் உன்னுடைய

.............................

# பாம்புக் கோவில்

பாபாபாம்ம்ம்புபுபுக்க்க்கோகோகோயியியில்ல்ல்பாபாபாம்ம்

“ நமஸ்காரம், சுவாமிகளே ! சௌக்கியமா ? எப்பொழுது வந்தீர்கள் ? கப்பல் பிரயாணம் எல்லாம் சௌகரியமாக இருந்ததா ? ” என்று என் இல்லத்திற்கு வந்த சுவாமி நிர்மலானந்தாவை வரவேற்றேன்.

“ எல்லாம் குருமகராஜின் அனுக்கிரகத்தால் சௌகரியம்தான். தாங்கள் சௌக்கியந்தானே ? ” என்றார் சுவாமிஜி.

“ எனக்கென்ன சுவாமிஜி ? நான் தான் யுத்தத்தில் சிக்காமல் சௌகரியமாக இங்கு வந்து விட்டேனே! தாங்கள் தானே யுத்தத்தின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு விட்டீர்கள் ? தாங்கள் பிழைத்து வந்ததே என் பாக்கியம் தான் ! ” என்றேன்.

உடனே சுவாமிஜி ஒரு கடிதத்தை என் கையில் கொடுத்தார். அதை அவசரம் அவசரமாக வாங்கிப் படித்தேன். மேற்படி கடிதம் அழகான தமிழில் மணி மணியாக எழுதப் பட்டிருந்தது. ஒவ்வொரு வரியாகப் படிக்கும் போது என் அடி வயிற்றிலிருந்து துக்கம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக்கொண்டே வந்தது, கடைசியில் "வான் மியாங்" என்ற கையெழுத்தைப் படித்ததும் கண்களுக்கு வந்து கண்ணீராகப் "பொல பொல" வென்று வெளியே உதிர்ந்தது.

*　　*　　*　　*

சுவாமி நிர்மலானந்தா, மலாய் தேசத்திலுள்ள பினுங்கு நகரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மடத்தின் தலைவர். தமிழ் நாட்டுக் காரர்தான். அவருடைய சொந்த ஊர் கவந்தப் பாடி என்னும் கிராமம். சுவாமிக்குப் பூர்வா சிரமத்தில் முத்துசாமி என்பது நாமதேயம். சென்னையில் பீ. ஏ. படித்து விட்டுச் சேவா உணர்ச்சியின் காரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தவர். நல்ல அறிவாளி; குணசாலி; இங்கிதமான பாஷையில் நளினமாகப்

பேசக் கூடியவர். வயது நாற்பது இருக்கலாம். படிப் படியாக தம் உயர்ந்த ஒழுக்கத்தால் மேலான பதவிக்கு வந்தவர்.

சுவாமிஜிக்கு ஆங்கிலம், சீனம், மலாய், ஹிந் துஸ்தானி, தமிழ், சமஸ்கிருதம் முதலிய பாஷை களில் அபார பாண்டித்தியம் உண்டு.

சீனர்கள் சுவாமிஜியை அடிக்கடி புத்தர் கோவில்களுக்கு வந்து உபதேசம் செய்யும்படி வேண்டிக் கொள்ளுவார்கள். இப்படி அவர் அடிக்கடி விஜயம் செய்யும் இடங்களில் "பாம்புக் கோவில்" என்னும் பிரசித்தி பெற்ற புத்த ஸ்தலமும் ஒன்று.

அப்பொழுது தொழிலின் நிமித்தம் நான் பினுங்கில் வசித்து வந்தேன். பொது வேலைகளில் உள்ள ஆர்வத்தினுல் தொழிலில் ஈடுபடுவதைக் காட்டிலும் என் மனம் சேவை செய்வதிலேயே நாட்டம் கொண்டது. ஆகவே சுவாமிஜி எனக்கு நெருங்கிய நண்பரானுர்.

ஒரு நாள், "இன்று பாம்புக் கோவிலில் பிரசங்கம், போய் வருவோம், வருகிறீர்களா?"

என்று சுவாமிஜி என்னைக் கேட்டார். நானும் சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டேன்.

பாம்புக் கோவில் மிகவும் அதிசயம் நிறைந்தது என்று நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன். ஆசையால் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தை விடாமல் சுவாமிஜியுடன் மிக்க ஆர்வத்துடன் சென்றேன். வழி நெடுக ரஸ்தாவைத் தவிர மற்ற இடங்களெல்லாம் ஒரே பச்சைப் பசே லென்ற தோற்றமாக பூத்துக் குலுங்கும் மரங்கள், காய்த்துத் தொங்கும் கனிகள் எல்லாம் எந்த மனிதனின் துன்பத்தையும் போக்கிவிடக் கூடியவையாயிருந்தன. மலாயா பூராவிலுமே இத்தகைய இன்பக் காட்சிகளைச் காணலாம். மேற்படி காட்சிகளை ரஸித்துக் கொண்டே நானும் சுவாமிஜியும் பாம்பு கோவிலை அடைந்தோம்.

கோவில் ஒரு பெரிய திட்டின்மீது அமைந் திருந்தது. ரஸ்தாவிலிருந்து சுமார் முப்பத் திரண்டு படிகள் ஏறியவுடன் பரந்த புல் வெளி தென்பட்டது. அதன் ஓரத்தில் கோவில் அமைக்கப்பட்டிருந்தது. புல் வெளிக்கு வந்த வுடன், " கொஞ்சம் வேடிக்கை பார்த்துக்

கொண்டிருங்கள்; இதோ வந்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே சுவாமிஜி தூரத்தில் தெரிந்த ஒரு வீட்டை நோக்கி நடந்தார். நானும் கோவிலை நோக்கி மெதுவாக நடந்தேன். அச்சமயம் ஏதோ "சரசர" வென்று என் வேஷ்டியில் உராய்ந்தது. சட்டென்று திகிலுடன் பார்த்தேன். அம்மாடி! ஒரு பெரிய பாம்பு என்மீது ஏற முயன்று கொண்டிருந்தது. உடனே ஒரு குதி குதித்துக் காலை உதிறினேன். பாம்பு கீழே விழுந்ததும் தன் தலையைத் தூக்கிச் சீறி எழுந்தது. நான் என் காலைத் தூக்கினேன். அதே சமயத்தில் எனக்குச் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு சீனப் பெண் சத்தம் போட்டுக் கொண்டு ஓடி வந்தாள். நானே பயத்தினால் என்னை அறியாமல் என் பாதரட்சையினால் அச் சர்ப்பத்தின் தலையை மிதித்து நசுக்கி விட்டேன். பாம்பு ரத்தத்தைக் கக்கிக் கொண்டு இறந்துவிட்டது. பாம்பு அடிபட்டு இறந்து கிடைப்பதைக் கண்டதும் அந்தச் சீனப் பெண் ஸ்தம்பித்து விட்டாள். இறந்த சர்ப்பமே மறுபடியும் உயிர்பெற்றுக் கோபத்துடன் சீறுகிறதோ என்னும்படி அவள் தோன்றினாள். திடீரென்று நான் சற்றும்

எதிர்பாராத விதமாய்ப் 'படீ' ரென்று ஓங்கி என் கன்னத்தில் அறைந்து விட்டு, என்னைப் பிடித்து அப்பால் தள்ளினுள். நான் தூரப் போய் விழுந்தேன். எனக்கோ ஒன்றும் புரிய வில்லை. என் கன்னத்தில் அவளுடைய நான்கு விரல்களும் பதிந்து விட்டன. எரிச்சல் எடுக்க ஆரம்பித்துவிட்டது. ஆனுல் அவளோ நசுங்கிய பாம்பைக் கையில் எடுத்துத் தடவிக் கொடுத்துக் கொண்டே விம்மி விம்மி அழுதாள். பின்னர் சீன பாஷையில் கூவிக் கூவித் தன் தகப்பனை அழைத்தாள். எங்கிருந்தோ அவளுடைய தகப்பன் பரபரப்புடன் ஓடி வந்தான், அவன் பின்னுல் சுவாமிஜியும் ஓடி வந்தார். அந்தச் சீனப் பெண்ணின் தகப்பன் நசுங்கிய பாம்பைப் பார்த்து விட்டுச் சற்றுத் திகைப்படைந்து நின்ருன். பிறகு, "யார் இதைக் கொன்றது?" என்று பயங்கரத்வனியில் அதிகாரமாகக் கேட்டான். அந்த இளம் பெண் அழுது கொண்டே என்னைச் சுட்டிக் காண்பித்தாள். ஐயோ! அவனுடைய நெருப்பைக் கக்கும் கண்களைப் பார்க்க எனக்கு மிகவும் பயமா யிருந்தது. தகப்பனையும் மகளையும் சுவாமிஜி தேற்றினுர். பின்னர் அவர்களை கோவிலுக்கு

அழைத்துச் சென்றார். அந்தப் பெண் இறந்து போன பாம்பைக் கையில் எடுத்துக்கொண்டு போனாள்; நானும் அவர்கள் பின்னால் நடந்து சென்றேன்.

ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் என்னையும் அறியாமல் மேலே நோக்கினேன். ஒரு பெரிய பாம்பு தொங்கிக் கொண்டிருந்தது. கீழே பல பாம்புகள் அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருந்தன. தூண்களில், கதவுகளில், புத்தர் சிலையில், விளக்குகளில் எங்கே பார்த்தாலும் பாம்பு மயமாகவே இருந்தது. அவைகளில் சில அப் பெண் மீதும் அவள் தகப்பன் மீதும் ஊர்ந்து விளையாடின. எனக்கு ஒரு பக்கம் பயமும், இன்னொரு பக்கம் ஆச்சரியமாகவும் இருந்தது. கடைசியாகப் புத்தர் சிலையை அடைந்தோம். இறந்த சர்ப்பத்தை அந்தச் சிலையின் முன்னால் வைக்கும்படி சுவாமிஜி அப் பெண்ணுக்குக் கட்டளை யிட்டார். அவளும் அப்படியே வைத்தாள். பின்னர் மூவரும் சீன முறைப்படி கும்பிட்டார்கள். என்னை அறி யாமல் நானும் கும்பிட்டுக் கொண்டிருந்தேன். பின்னர் சுவாமிஜி என்னைக் கோவிலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு வீட்டுக்கு அழைத்துச்

சென்ருர். அங்கு போய் எல்லோரும் மௌன மாக ஓர் இடத்தில் உட்கார்ந்தோம்.

"ஏன், அந்தப் பாம்பைக் கொன்றீர்கள்?" என்று சுவாமிஜி திடீரென்று மௌனத்தைக் கலைத்து ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

"கொத்த வரும் பாம்பைக் கொல்லுவது குற்றமா, சுவாமிஜி?" என்று இரக்கத்துடன் கேட்டேன்.

"வாஸ்தவம்தான்; ஆனல் இங்குள்ள பாம்புகள் கொத்தாது என்பது உங்களுக்குத் தெரியாதா?"
"தெரியாதே, சுவாமிஜி! கொத்தாத பாம்பும் உலகத்தில் உண்டோ?"

"தங்களுக்கு இக் கோவிலைப் பற்றிய அதிசய விஷயங்கள் தெரியாது போலிருக்கிறது. சொல்லுகிறேன் கேளுங்கள்:—

"இந்தப் பெண்ணின் பெயர் வான்மியாங் கியூ. இவர் இவளுடைய தகப்பனர். பெயர் ஹோக் ஹின் கியான். இந்தக் கோவில் உண்டாகும் காலத்தில் இவர்கள் வம்சத்தின் முதல்வரும் ஒரு பாம்பும் உண்டானதாக ஐதீகம். அந்தப்

பரம்பரைதான் இவர்களும், இங்குள்ள பாம்புகளும். பாம்புக் குலத்தில் தோன்றிய இந்த வம்சம் பரம்பரையாகப் பாம்பையே குல தெய்வமாக வழிபட்டு வருகிறது. பாம்பு களுக்கு ஏதேனும் கெடுதல் நேர்ந்தால் இவர்கள் வம்சத்துக்கும், நாட்டுக்கும் தீங்கு நேரிடும் என்பதாக இவர்களிடையே ஓர் ஐதீகம் இருந்து வருகிறது. ஆகையால்தான் இங்குள்ள பாம்புகளை மிக ஜாக்கிரதையாகக் கவனித்துப் பரிபாலித்து வருகின்றனர். இவர்களுடைய வம்சத்தில் இதுவரை நடைபெருத துர்ச் சம்பவம் இன்று நடைபெற்றதைக் கண்டதும் இந்த மலாய் நாட்டுக்கே ஒரு பெரிய அனர்த்தம் உண்டாகப் போவதின் அறிகுறிதான் இது என்றும், கடவுள் எந்த விதமாகத் தங்களைத் தண்டிப்பாரோ என்றும் அவர்கள் பயந்து கவலைப்படுகிருர்கள்!'' என்று சொல்லி முடித்தார்.

என் நெஞ்சம் வருத்தத்தால் துடித்தது. ''சுவாமிஜி, இதற்கு நீங்கள் தான் ஒரு வழி செய்ய வேண்டும். நாஞக மனமறிந்து ஒரு குற்றமும் செய்யவில்லை'' என்று துக்கத்துடன் கூறினேன்.

சுவாமிஜி ஹோக்கின் கியானேயும், வான்மியாங் கியூவையும் நோக்கினர். அவர்களுக்குப் பல விதமான நீதிகளைப் போதித்தார். உயர்ந்த உபதேசங்களைச் செய்தார். "ஏதாவது பரிகாரம் செய்து விட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்று சமாதானம் கூறினர்.

"வாரத்துக் கொரு தடவை பாம்புக் கோவிலுக்கு வந்து அங்குள்ள பாம்புகளுக் கெல்லாம் பால் ஊற்றி விட்டுக் கடவுளிடம் மன்னிப்புக் கோரவேண்டும்" என்று வான்மியாங் கியூ சொன்ன பரிகார யோசனையை நாங்கள் எல்லோரும் அங்கீகரித்தோம். எதிர்பாராத துர்ச் சம்பவம் காரணமாக சுவாமிஜியின் அன்றையப் பிரசங்கம் தடைபட்டுப் போயிற்று. எனவே சுவாமிஜியும் நானும் பிரசங்கத்தை ஒத்தி வைத்து விட்டு புறப்பட்டோம்.

* * * *

வாரா வாரம் பால் ஊற்றுவதன் மூலம் கடவுளிடம் மன்னிப்புப் பெற்று விடலாம் என்பதை நான் நம்பவில்லையென்றாலும், இனி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பால் வார்க்கும்

சாக்கில் அந்த அழகி வான்மியாங் கியூவையும் பார்த்துவிட்டு வரலாமல்லவா? ஆகையால் அவளிடம் ஒப்புக் கொண்டபடி பாலுடன் மறு வெள்ளிக்கிழமையே பாம்புக் கோவிலுக்குப் புறப்பட்டேன். கோவிலை அடைந்தவுடன் வெகு ஜாக்கிரதையாகக் காலைக் கீழே ஊன்றிக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டே நடந்தேன்.

எனக்கு எதிரே வந்த வான்மியாங் கியூ, "என்ன சங்கதி? என்ன பார்க்கிறாய்? என்று மலாய் பாஷையில் கேட்டாள்.

"ஒன்றுமில்லை; போன வாரம் நடந்தது போல் ஏதாவது நடந்துவிட்டால் என்னுடைய கன்னத்தின் கதி என்ன ஆவது என்று அஞ்சுகிறேன்!" என்றேன்.

அவள் உடனே 'கல கல' வென்று சிரித்து விட்டு, "லூ மாஞ்ஞா பூசோ" (நீ ரொம்பப் போக்கிரி) என்றாள்.

பிறகு, புத்த விஹாரத்திற்கு எதிரில் போய் மண்டியிட்டு உட்கார்த்தேன். அவளும் என் அருகில் உட்கார்ந்தாள். கையில் ஊதுவத்


சின்ன

தியை எடுத்துக்கொண்டு இருவரும் கையை ஆட்டி ஆட்டிக் கும்பிட்டோம். அப்போது புத்த பகவானுடைய சாந்தம் தவழும் முகத்தின் மீது ஒரு பெரிய மலைப் பாம்பு ஊர்ந்து கொண்டிருந்தது. நான் அதை அதிசயத்துடன் பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் அதைத் தடுத்து என் கைகளைப் பிடித்து மறுபடியும் கும்பிடும்படி செய்தாள். என் கைகளை அவள் பிடித்தவுடன் எனக்கு ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. ஆகையால் மற்றுமொரு தடவை அவள் என் கைகளைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக நான் மறுபடியும் வேடிக்கை பார்ப்பதுபோல் பாசாங்கு செய்தேன். ஆனால் "சரி, நீ கும்பிட்டதுபோதும், வா!" என்று அவள் என் கையைப் பிடித்துப் 'பரபர' வென்று இழுத்துக் கொண்டு வெளியே வந்து விட்டாள்!

* * *

ஒரு வெள்ளிக்கிழமை வந்துவிட்டுப் போய் விட்டால், மறு வெள்ளிக்கிழமை வரை அவளைச் சந்திக்காமலிருப்பது எனக்குப் பெரிய வேதனையாகப் போய்விட்டது. ஆகவே,

அவளைத் தினமும் சந்திப்பதற்காக நானாகவே வான்மியாங் கியூவுக்கு வலுவில் தமிழ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டேன். அதற்கு அவளும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டாள். மறுதினமே பாடம் தொடங்கினேன்.

இப்படியாகத் தினமும் அவளைச் சந்திப்பதும், அவளும் நானும் பக்கத்திலுள்ள அருவிகளுக்கு மாலை வேளைகளில் சென்று குதூகலமாகப் பொழுதைப் போக்குவதும், விளையாட்டு மூலம் தமிழ் மொழியின் இனிமையை அவளுக்குக் கற்றுக்கொடுப்பதுமாக நாட்கள் சந்தோஷமாக ஓடிக்கொண்டிருந்தன.

ஒரு நாள், "நாளைக்குச் சிங்கப்பூர் போக வேண்டிய வேலை ஒன்றிருக்கிறது; போய்விட்டு வருகிறேன்; உனக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு வரட்டுமா?" என்று நான் வான்மியாங் கியூவைக் கேட்டேன்.

"சாமான் வாங்குவது இருக்கட்டும், எப்பொழுது திரும்பி வருவீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.

"ஒரு வாரத்தில் திரும்பி விடுவேன்."

"அப்படியானால் ஒரு வாரம் வரையில் என் ஞாபகமே உங்களுக்கு இருக்காதல்லவா?" என்றாள் அவள் கண்களைச் சிமிட்டிக் கொண்டே.

"இனி நான் எப்படி உன்னை மறக்க முடியும்?" என்றேன்.

"நான் தினந்தோறும் உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருப்பேன்!" என்று கூறிவிட்டு, "சந்தோஷமாகப் போய் வாருங்கள்" என்று அவள் என் தலை மறையும் வரை நின்று பார்த்துக்கொண்டே இருந்தாள்.

* * *

துரதிர்ஷ்ட வசமாக, நான் சிங்கப்பூர் வந்து சேர்ந்த இரண்டாவது நாளே திடீரென்று ஜப்பான் தாக்குதல் ஆரம்பமாகி விட்டது. இதனால் சிங்கப்பூருக்கும் மற்ற பிரதேசங்களில் உள்ளவர்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் போய்விட்டது. இந்தியாவைச் சேர்ந்தவர்களில் பலர் அகப்பட்ட கப்பல்களில் ஏறிக்

கொண்டு 'குய்யோ முறையோ' என்ற ஓலத்துடன் பயணப்பட்டார்கள். என்னைச் சேர்ந்தவர்களிலும் பலர் புறப்பட்டு விட்டனர். நான் மட்டும் வான்மியாங் கியூவை விட்டுப் பிரிய மனமின்றித் தவித்துக்கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் அன்று மாலை ஒரு கப்பல் இந்தியாவுக்குப் புறப்படத் தயாராக இருந்தது. நண்பர் ஒருவர் தன்னை வழியனுப்பும் பொருட்டு என்னைக் கப்பல் வரை வரும்படி பலவந்தப் படுத்தினார். நானும் தட்ட முடியாமல் அவருடன் கப்பலுக்குச் சென்றேன். இருவரும் அவருடைய அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். திடீரென்று கப்பல் சங்கு ஊதும் சத்தம் கேட்டது. பின்னோடு திடீர் திடீர் என்று குண்டு விழும் சத்தமும் கேட்டது. மேலே 'விர் விர்' என்று ஆகாய விமானங்கள் வட்டமிட்டன. நான் பரபரப்புடன் கப்பலை விட்டுக் கரைக்கு இறங்கப் படிக்கட்டுக்குச் சென்றேன். ஆனால் என்னைப் போக விடாமல் கப்பல் அதிகாரிகள் தடுத்து விட்டனர். கப்பலும் புறப்பட்டுவிட்டது.

ஐயோ! எத்தனையோ குண்டுகளை ஜப்பானியர்கள் சமுத்திரத்திலே வீணாகப் போடு

கிருர்களே! என் தலையிலே ஒரு குண்டை யாவது போடக்கூடாதா?

அந்தத் தலை போகிற சந்தர்ப்பத்தில் கப்பல் அதிகாரிகளிடம் நான் என்ன சொன்னுலும் பயனில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். எனவே, நானும் எல்லோருடனும் மணல் மூட்டைகளுக்கு அடியில் படுத்துக் கொண்டேன்.

* * *

கப்பல் ஊரை அடைந்ததும், "அப்பா, மகனே! இந்த மட்டிலும் வந்து சேர்ந்தாயே!" என்று என் தாய் தந்தையர் என்னை ஆனந்தத் துடன் வரவேற்ருர்கள். என் மனதிலுள்ள துக்கத்தை அவர்கள் எப்படி அறியமுடியும்?

ஒரு நாள், "பினங்குக்கு அடுத்த பாம்புக் கோவிலில் குண்டு விழுந்து கோவில் கொஞ்சம் சேதப்பட்டது. உயிர்ச் சேதமும் சொற்பம் என்று தெரிகிறது" என்ற செய்தியை ரேடியோ மூலம் கேட்டேன்.

"ஐயோ பாவம்! வான்மியாங் என்ன கதி ஆனுளோ? பாம்புக் கோவிலில் வேறு யார்

இருக்கப் போகிறுர்கள்? அவளும் அவளுடைய தகப்பனும்தானே? ஆகவே, அங்கே உயிர்ச்சேதம் என்றுல் அவர்கள் இருவரும் தான் இறந்து போயிருப்பார்கள்!" என்று எண்ணிக் கொண்டேன்.

எப்படியோ வருஷம் ஆறு ஓடிவிட்டது. அணு குண்டின் தயவினுல் உலக மகா யுத்தத்துக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. யுத்தம் முடிந்த ஒரு மாதத்துக்குப் பிறகு, சுவாமி நிர்மலானந்தா என் இல்லத்திற்கு வந்து மேலே குறிப்பிட்ட கடிதத்தை என்னிடம் கொடுத்தார். என் உள்ளத்தை உருக்கிய அந்தக் கடிதம் வருமாறு:-

அன்பு மிக்க பாபுஜி!

தங்கள் பாத தூளியை வணங்குகிறேன். தாங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதை இன்றுவரை அறியேன். சிங்கப்பூர் சென்ற தாங்கள் என்ன கதியானீர்கள் என்று எனக்கு இன்னும் தெரியவில்லே. இவ்வளவு வருஷமாகத் தங்களேப்பற்றி எங்கெல்லாமோ விசாரித்தாகிவிட்டது. ஆனுல் என்னுடைய துரதிர்ஷ்டம் இதுவரை ஒரு தகவலும் கிடைக்கவில்லே. இக்கடிதம்கூட உங்கள் கையில் கிடைக்குமோ என்னவோ? தங்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று என் நெஞ்சம் துடித்துக் கொண்டே இருக்கிறது. நிச்சயம் தாங்கள் உயிருடன் சௌக்கிய

மாக இருப்பீர்கள் என்று திடமான நம்பிக்கை மாத்திரம் எனக்கு இருந்தது வருகிறது. தாங்கள் என்னை விட்டுப் பிரிந்த இரண்டாம் நாள் சிங்கப்பூரில் குண்டு விழுந்ததைஅறிந்து துடிதுடித்துப் போனேன். தாங்கள் சௌகரியமாக என்னிடம் வந்து சேரவேண்டுமே!' என்று புத்த பகவானைப் பிரார்த்தனை செய்யாத நாளே கிடையாது. என் தகப்பனுர் இங்கிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் விழுந்த குண்டு ஒன்றின் அதிர்ச்சியின் காரணமாக இறந்து விட்டார். நான் தன்னந் தனியளாகி விட்டேன். திடீரென்று இப்படி அனுதையாகி விடுவேன் என்று நான் கனவிலும் நினைத்ததில்லை. அதன் பின்னர் சுவாமிஜியைத் தேடிச் சென்றேன். அதிர்ஷ்டவசமாக அவர் பினங்கு மடத்தில் அகப்பட்டார். அவர் என்னை மிகவும் பரிவோடு உபசரித்து ஆறுதல் சொன்னுர். எனக்காக அவர் பெரும் பிரயத்தனம் எடுத்துத் தங்களை மலாயா பூராவும் விசாரித்தார். தங்களைப் பற்றி ஒரு தகவலும் அவருக்குக் கிடைக்கவில்லை. நான் அவருடைய மடத்திலேயே வாழ்ந்து வருகிறேன். தாங்கள் பாம்பைக் கொன்றதினுலே யுத்தம் வந்ததாக இருந்தாலும், அதனுல் என் தந்தை இறந்ததாக இருந்தாலும் நானும் அதே காரணத்தினுலே செத்துப் போவதாக இருந்தாலும்கூட எனக்குக் கவலை யில்லை. தங்களை மறுபடியும் இந்த ஜன்மத்தில் ஒரு முறையாவது பார்த்து விட்டால் அதுவே போதுமானது.

தங்களைக் காண என் கண்கள் துடிக்கின்றன. இதயம் பொங்கி நிற்கிறது.

தங்கள் அடியாள்,

**வான்மியாங் கியூ.**

ஆகா! எத்தகைய அன்பு! எவ்வளவு தூய்மையான உள்ளம்! அவளுடைய தமிழ்க் கடிதத்தைக் கண்டதும் என் உள்ளம் குதூகலம் அடைந்தது. எங்கள் அன்புக்கு மத்தியில் பாஷை, மதம், நிறம் ஒன்றும் தடை செய்யவில்லை.

அடுத்த கப்பலிலேயே சுவாமிஜியும் நானும் மலாயாவுக்குப் புறப்பட ஆயத்தமானோம்.

# காதலும் கருப்பையாவும்

காகாகாதததலுலுலும்ம்ம்ககருருப்ப்பைபையாயாவுவும்ம்

புதிதாக எழுத ஆசைகொண்ட ஒரு வாலிபர், பரம உற்சாகத்தோடு, லார்டு நார்த்கிளிப் என்ற கீர்த்தி வாய்ந்த பத்திரிகை முதலாளியிடம் வந்தார். "ஆரம்ப எழுத்தாளனுக்கு வேண்டிய முக்கியமான யோக்கியதை என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"கொஞ்சம் பசி வேண்டும்" என்றார் நார்த்கிளிப்.

மைக்கேல் ஆர்லன் என்பவரிடம் ஒரு பெண் வந்து, தான் எழுத்தாளியாகப் போவதாகவும், எழுதத் தொடங்குவது எப்படி என்றும் கேட்டாள்.

"இடது பக்கத்திலிருந்து ஆரம்பித்து வலது பக்கமாக எழுதிக்கொண்டு போகவேண்டும்" என்றார் மைக்கேல் ஆர்லன்.

நார்த்கிளிப், மைக்கேல் ஆர்லன் போன்ற பிரசித்தி பெற்றவர்களின் வரிசையில் என்னையும் சேர்த்து வைத்துவிடவேண்டு மென்பதற்காக எனது நண்பர் ஒருவர் ஒருநாள் திடீரென்று, "எழுத்தாளர் ஆவது எப்படி? நீங்கள் எப்படி எழுத்தாளரானீர்கள்?" என்று ஒரு பிரபலமான கேள்வியை என்னிடம் போட்டார். நானும் பிரசித்தி பெற்றவர்கள் 'பளிச் பளிச்' சென்று சொல்லும் 'பட்டாஸ் வெடி' பதில் போல சொல்ல வேண்டுமென்று எண்ணி, 'அதற்குக் காதலும் வேண்டும் அதை உண்டாக்க ஒரு கருப்பையாவும் வேண்டும் என்றேன்.

"அதென்ன 'காதலும் கருப்பையாவும்' சொல்லுங்கள் கேட்கலாம்" என்றார்.

"சரி" என்று நானும் சொல்ல ஆரம்பித்தேன்.

* * * *

கருப்பையா என்ற ஒரு இளைஞன் என் வீட்டுப் பசுக்களைப் பால் கறப்பதற்குத் தினமும்

வருவான். அவனுக்கு மாதச்சம்பளம் கொடுத்து வைத்திருந்தோம். இப்படி அனேக வீடுகளில் பால் கறந்து கொடுப்பதே அவனது தொழில். 'கல கல' வென்றிருப்பான். ரொம்பவும் சுரு சுருப்பான பையன். நல்ல கருப்பு நிறம். வயது 15 இருக்கும். எழுதப் படிக்கத் தெரியாது. ஆயினும் கதர் கட்டிக்கொண்டு காங்கிரஸ் காரர்களுடன்தான் எப்பொழுதும் இருப்பான். பொதுக்கூட்டங்கள் என்றால் கருப்பையா இல்லாமல் நடக்காது. வெகு உற்சாகமாகப் பொது வேலைகளில் ஈடுபடுவான். போலீஸ் காரர்களைக் கண்டால் கொஞ்சம்கூடப் பயப்பட மாட்டான். "என்ன அண்ணாச்சி" என்று அவர்களுடன் நட்புக் கொண்டாடிவிடுவான். நல்ல தைரியசாலி.

என்னுடைய சொற்பொழிவு என்றால் அவனுக்கு கற்கண்டுதான். அதனால் என்னுடன் அதிக மாகப் பழகுவான்.

ஒரு சமயம் நான் ஆங்கில அரசாங்கத்தின்மீது துவேஷம் உண்டாகும்படி பேசினேன் என்று என்னைக் கைதிசெய்து போலீஸ் ஸ்டேஷன் 'லாக்-அப்'பிலே பத்து தினங்கள் வைத்திருந்

தார்கள். சாப்பாடு மட்டும் வீட்டிலிருந்து கொண்டுவர அனுமதி கொடுத்தார்கள்.

கருப்பையா தைரியசாலியாகையால் வீட்டிலிருந்தவர்கள் அவனையே எனக்கு சாப்பாடு கொண்டுவந்து கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். அவனும் மிக்க மகிழ்ச்சியுடன் தினமும் எனக்குச் சாப்பாடு கொண்டுவந்து போட்டான். ஒரு நாள் கொஞ்சம் நேரம் கழித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தான்.

"ஏண்டா, இவ்வளவு நேரம் சாப்பாடு கொண்டு வர?" என்று கேட்டேன்.

"வழியில் தங்களுக்கு ஒரு கடிதம்..............."
"அதென்னடா கடிதம்?"

"ஸார்! கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?"
"ஏன் கோபித்துக்கொள்ளுகிறேன், கடிதத்தைக் கொடு பார்க்கலாம்!" என்றேன். கருப்பையா சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான். யாராவது போலீஸ்காரர்கள் பார்க்கிருர்களோ என்ற சந்தேகம் அவனுக்கு. ஆனல் அங்கு காவலிருந்த '437' விழித்த கண் விழித்தபடி தூங்குவது எப்படி என்ற ஆராய்ச்சி செய்து

கொண்டிருந்தார். ஆகையால் தைரியத்துடன் கருப்பையா தன் மடியில் சுருட்டி வைத்திருந்த கடிதத்தை மெதுவாக எடுத்து என்னிடம் கொடுத்தான்.

தேசபக்தியின் காரணமாகச் சிறைப்பட்டிருக்கும் வீர இளைஞர் அவர்களுக்கு நமஸ்காரம்.

முன்பின் தெரியாத ஒரு இளம்பெண் தங்களுக்கு கடிதம் எழுதுவதுபற்றித் தாங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் தங்களுக்குத்தான் என்னைத் தெரியாதே ஒழிய எனக்குத் தங்களை வெகு நன்றாகத் தெரியும்.

தங்களுடைய சொற்பொழிவு நடைபெறும் இடங்களுக்கு நான் வரத் தவறுவதேயில்லை. தங்களுடைய ஹாஸ்ய மொழிகளும், வீர உரைகளும் என் மனதில் நன்றாகப் பதிந்து போயிருக்கின்றன. என்ன அழகாகப் பேசுகிறீர்கள்! தங்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

தாங்கள் சில தினங்களுக்கு முன் ஜவாஹர் மைதானத்தில் செய்த பிரசங்கத்தை அடியாள் கேட்கும்படியான பாக்கியம் கிடைத்தது. தங்களுடைய அற்புதமான உரைகளுக்கு மத்தியில் தாங்கள், "வீரப் பெண்களே, வெளியில் வாருங்கள்; வீழ்ந்த நாட்டை மீட்க வாருங்கள்" என்று, அன்று பாரத நாட்டுப் பெண்கள் அனைவரையும் கூவி அழைத்தீர்கள். அன்றே என் மனதில் பெரும் கிளர்ச்சி உண்டாயிற்று. அன்றிலிருந்து

"நாமும் ஏன் தேசசேவை செய்யக் கூடாது?" என்ற எண்ணம் எனது உள்ளத்தில் சுற்றிச் சுற்றி வட்ட மிட்டு வருகிறது. ஆனால் தங்களுக்குத் தெரியும், நமது சமூகத்தில் ஒரு பெண் தன் இச்சைப்படி ஒன்றும் செய்ய முடியாதென்று! ஆனாலும் என் உள்ளத்தில் ஒரு வித ஆர்வத்தைக் கிளப்பிவிட்டிருக்கும் தாங்கள் என்ன சொல்லுகிறீர்களோ அதன்படி நடக்க நான் சித்தமாக யிருக்கிறேன். தயவு செய்து அடியாளிடம் கருணை கூர்ந்து பதில் எழுத வேண்டுகிறேன்.

என்றுமுங்கள்,
சுந்தரி.

குறிப்பு:--- பதில் எழுதுவதற்கு இத்துடன் வெள்ளைத் தாள் ஒன்றும் இணைத்திருக்கிறேன். பேனா கருப்பையா விடமிருக்கிறது.

* * * *

கடிதத்தைப் படித்து முடித்ததும், நானும் ஒரு முறை சுற்று முற்றும் பார்த்துக் கொண்டேன். கருப்பையா என் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பாவம், படிப்பில்லாதவன்! 'ஏதாவது கோபித்துக் கொள்ளப் போகி றேனோ!' என்ற கவலைவேறு அவனுக்கு.

மறு முறையும் அக்கடிதத்தைத் திருப்பிப் படித் தேன். பின்னர் அதை மடித்துப் பத்திரப்

படுத்திக்கொண்டு, புன்சிரிப்புடன் கருப்பையாவைப் பார்த்தேன். எனக்கு கோபமில்லை என்று கண்டு கொண்ட அவன் குதூகலம் அடைந்தான்.

"சுந்தரி என்ன ஸார், எழுதியிருக்குது?" என்று கேட்டான்.

"உனக்குச் சுந்தரியை நன்ருகத் தெரியுமோ? என்று நான் அவனைக் கேட்டேன்.

"அவங்க வீட்டிலேயும் நான் தானே பால் கறக்கிறேன்!" என்ருன்.

அவனிடம் சுந்தரி தன் கடிதத்தில் எழுதியிருந்ததைக் கூறினேன். அவன் முகத்தில் ஏமாற்றத்தின் சாயல் தோன்றியது. ஒருவேளை அவன் காதல், கீதலை எதிர்பார்த்தாஞே, என்னவோ?

நான் அதைக் கவனிக்காதவன்போல், "பதில் எழுதித் தருகிறேன், கொடுக்கிருயா?" என்று கேட்டேன்.

"ஓ, அதைவிட வேறு எனக்கு என்ன வேலை? ஜோராக எழுதுங்கள்!" என்று எனக்கு

உற்சாக மூட்டி, மடியில் வைத்திருந்த பேனு வையும் கொடுத்தான்.

நான் நீண்ட கடிதம் எழுத விரும்பவில்லை. ஏனெனில் எனக்கு அப்பொழுது அதிகம் எழுதத் தெரியாது, ஆகவே வெகு சுருக்கமாக ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தேன்.

அன்புள்ள சுந்தரிக்கு, கடிதம் கிடைத்தது; மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். உன்னுடைய தேசபக்தியைக் கண்டு மிகவும் பெருமை அடைகிறேன். என்னுடைய யோசனைப்படி நீ நடப்பதற்கு எவ்வளவோ தைரியம் வேண்டும்; பெரிய தியாகம் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே இன்னும் நன்ருக யோசித்து எழுதவும்.

அன்பன்

....................

* * * *

மறு நாள் சுந்தரியிடமிருந்து பதில் வரவில்லை. யோசித்துப் பதில் அனுப்புவதாக கருப்பையா விடம் சொல்லி அனுப்பியிருந்தாள்.

"ஒருவேளை என் யோசனைப்படி சுந்தரியும் தைரிய மாக வெளியில் தேச சேவை செய்யக் கிளம்பி

விட்டால் அவளுடைய பிற்கால வாழ்வு எப்படி யாகுமோ என்னவோ" என்று என் நெஞ்சம் கொதிக்கத் தொடங்கியது. 'நான் கொடுக்கும் ஊக்கத்தின் காரணமாக, ஒரு இளம் பெண்ணின் வாழ்வே அஸ்தமித்து விடுமோ?' என்று சிந்திக்கத் தொடங்கினேன். வானத்தில் மேகங்கள் வந்து குவிவதுபோல என்மனம் எண்ணங்களினால் நிரம்பியது.

ஆனால் அடிமை நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு வீராங்கனையாக வரும் சுந்தரியை "வேண்டாம்" என்று சொல்லவும் மனமில்லை. "நாம் நல்ல எண்ணத்துடன்தான் காரியம் செய்கிறோம். நீரில் கழுவி எடுத்த அரிசி போன்று நமது இதயம் சுத்தமாகத்தான் இருக்கிறது. ஆகையால் அவளால் வருகின்ற எந்தத் துன்பத்தையும் எதிர்த்து நின்று, அவளுக்கு வேண்டிய உதவி செய்து, சமூகத்தின் கோணல் கண்களுக்குப் பயப்படாமல் வேலை செய்ய வேண்டியதுதான் என்று முடிவு கட்டினேன்.

*   *   *   *

அன்று இரவு எட்டுமணி இருக்கும். "நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம்" என்று கூறி

'லாக்-அப்'பைத் திறந்து விட்டார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்.

நான் ஒரே ஆச்சரியக் கடலில் மூழ்கிவிட்டேன். "என்ன வேடிக்கை ஸார், இது!" என்ற வார்த்தைகள் என்னை அறியாமலே வெளியே வந்தன. "ஒன்றும் வேடிக்கையில்லை; பின்னால் மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து 'சம்மன்' வரும்போது வரலாம். தற்சமயம் வீட்டிற்குப் போங்கள்!"

அவ்வளவுதான்; ஒரே ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடினேன். விடுதலை பெற்றவனின் உணர்ச்சியை, விடுதலை பெற்றவன் தானே அனுபவிக்க முடியும்?

*　　*　　*　　*

மறு தினம் கருப்பையா என் வீட்டிற்கு வந்தான். சுந்தரியின் பதில் கடிதமும் கொண்டு வந்து கொடுத்தான். அதில் எடுத்தவுடன் "அன்பே!" என்று ஆரம்பித்திருந்ததைக் கண்டதும் எனக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. வியப்புடன் கடிதத்தை மேலே படித்தேன்.

தங்களுடைய அருமைக் கடிதம் கிடைத்தது. தாங்கள் எந்த யோசனை சொன்னாலும், அதனால் என்ன ஆபத்து வந்தாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனக்கு மட்டும் தங்கள் இதயத்தில் என்றும் ஓர் இடம் இருக்கவேண்டும். உங்களுடைய பதிலை எதிர் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

சுந்தரி.

* * * *

மேற்படி கடிதத்தைப் படித்து முடிக்கும் வரையில் எனக்கு ஒரே மயக்கமாக இருந்தது. உள்ளத்தில் ஒருவிதமான குளு குளுப்பு உண்டாயிற்று. ஏதோ பெரிய சம்பத்துக் கிடைத்து விட்டதுபோல் பெருமிதம் கொண்டேன். புதிய வேகம் உண்டாயிற்று. சுந்தரிக்கு தேசத்தின்மீது ஏற்பட்ட காதல் திடீரென்று என்மீது ஏற்பட்டுவிடும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு என்மீது உண்டான 'அளவற்ற காதலை' கொஞ்சமும் குறைந்து விடாமல் வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் அதிகப்பட்டது. ஆகவே என் ஆசைகளையும், அன்பையும், காதலையும் எழுத்தின் மூலம் கடிதத்தில் கொட்டி, அவளை உற்சாகப் படுத்த எண்ணங் கொண்டேன். அதற்காக

'காதற் கடிதங்கள்' என்ற ஒரு புத்தகத்தைக் கூடப்படித்து முடித்தேன். நாவல்களில் காதலன் காதலிகள் எப்படிக் கடிதம் எழுதிக் கொள்ளு கிறார்கள் என்பதையும் ஆராய்ந்தேன். சுந்தரிக்கு எழுதும் ஒவ்வொரு கடிதமும் 'சொற் சித்திரங்களாக' அமைய வேண்டுமென்று வெகு பாடுபட்டேன். காதல் வேகம் சாமான்ய மானதா? 'காற்றிலேறியே விண்ணையும் சாடு வோம், காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' என்று மகா கவி பாரதியார் தெரியாமலா சொல்லியிருக்கிறார்? சுந்தரியின் காதல் என்னைப் பம்பரமாகச் சுற்ற வைத்துவிட்டது. எல்லாம் கடிதம் மூலம்தான். 'விரைவில் நேரில் சந்திப்ப தாகவும்' எழுதியிருந்தாள். அவளுக்கு கடிதம் எழுத ஆரம்பித்தால் என் பேனு தமிழில் உள்ள அத்தனை அமுத வாசகங்களையும் அள்ளி வீச ஆரம்பித்தது. எனக்கே என் கடிதங்களைப் படிக்கும் போது ஆச்சரிய முண்டாயிற்று! "நாமா இப்படித் தமிழ் எழுதுகிறோம்" என்று வியப்படைந்தேன். கடிதம் என்றால் ஒன்று இரண்டு பக்கம் அல்ல. சுமார் இருபது பக்கத் திற்குக் குறைந்தால் எனக்கும் திருப்தி இருக் காது, சுந்தரிக்கும் திருப்தி உண்டாகாது.



சின்ன

அவளும் எனக்குச் சளைத்தவளாக இல்லை. ஆகா, அவள் எழுத்துக்கள் என் ஒவ்வொரு அங்கத்தையும் புளகாங்கித மடையச் செய்தது. ஒரு கடிதத்தில் "என் ஆருயிரே!" என்று ஆரம்பித்து உயிரை விட்டிருப்பாள். மற்ெருரு கடிதத்தில் "என் செல்வமே!" என்று கொஞ்சி யிருப்பாள். வேறொரு கடிதத்தில் "என் கட்டிக் கரும்பே!" என்று இனிக்க இனிக்க எழுதி யிருப்பாள். இப்படி யெல்லாம் அவள் எழுத எழுத, நானும் அதற்குத் தகுந்தாற் போல இலக்கியங்களிலிருக்கும் உவமைகளையும், வானத்திலிருக்கும் சந்திரனையும், பூமியிலிருக்கும் மலர் வகைகளையும், நீரிலிருக்கும் தாமரையையும் கடிதத்தில் கொண்டு வந்து சேர்த்து, சுந்தரியை அழகுவசனங்களால் ஆராதனை செய்து, கற்பனையின் எல்லை யெல்லாம் கடந்து கவிதை மழையே பெய்து சுந்தரியின் இதயத்தைக் குளிர்வித்தேன். இப்படி எங்கள் காதல் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. எல்லாம் கருப்பையாவின் மூலம் அடிக்கடி கைமாறிக் கொண்டிருந்த கடிதங்களின் வாயிலாகத்தான்!

ஒரு நாள் பகல் மூன்று மணி இருக்கும். வழக்கம் போல் கருப்பையா சுந்தரியிடமிருந்து ஒரு

கடிதம் கொண்டு வந்தான். கடிதமும் வழக்கத்திற்கு விரோதமாக வெகு சுருக்கமாக இருந்தது. அதில்,

என் அன்பிற்குரிய செல்வமே!

எனக்கு ஒரு அவசரத் தேவையை முன்னிட்டு ரூ 250 வேண்டியிருக்கிறது. தங்கள் பொற்கரத்தால் கருப்பையாவிடம் கொடுத்தனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். கருப்பையா ரொம்பவும் நம்பிக்கையானவன்; ஒன்றும் யோசிக்க வேண்டாம், விபரம் பின்னர் எழுதுகிறேன். தங்கள் அன்பிற்கு அடிமையான,

சுந்தரி.

என்று எழுதியிருந்தது. உடனே என்னுள்ளத்தில் மகிழ்ச்சி இறகு கட்டிக்கொண்டு பறந்து, உல்லாசக் குதி குதித்தது. நம்முடைய காதலிக்கு நாம் உதவி செய்யக்கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் அதைவிட உலகில் வேறு என்ன மகிழ்ச்சி யிருக்கிறது? ஆகவே உடனே ரூ 250 எடுத்துக் கருப்பையாவிடம் கொடுத்து, 'ஓடு, ஓடு! ரொம்ப அவசரம் போலிருக்கிறது!" என்று சொல்லி விரட்டி விட்டேன்.

மறுபடியும் ஒரு வாரம் நானும் சுந்தரியும் காதல் கடிதங்கள் எழுதிக் குவித்தோம். இப்பொழு

தெல்லாம் தமிழ் எனக்குத் தண்ணீர்பட்ட பாடாகப் போய்விட்டது. பேனுவை எடுத்து விட்டால் "பிரமாதம், பிரமாதம்" என்று சொல்லும்படி கற்பனைகளும் கதைகளும் கற்கண்டுத் தமிழாகவே உதிர்ந்தன? பிறகு ஒரு நாள் மறுபடியும் அவசரத் தேவையை முன் னிட்டு ரூ. 100 கேட்டு சுந்தரி எழுதி யிருந்தாள். அதைப் பார்த்தவுடன் காதல் மயக்கத்தில் 'கிர்' என்று சுற்றிக்கொண்டிருந்த என் தலையில், ஒரு கல் 'நச்'சென்று விழுந்தது. "சுந்தரி நல்ல பணக் காரக் குடும்பத்தில் பிறந்த பெண் ; இவளுக்குப் பணம் தேவையாக இருந்தால் வீட்டில் கொடுப் பார்களே! அடிக்கடி ஏன் நம்மைக் கேட்க வேண்டும்? அவளிடம் ரூபாய் இல்லாமலா இருக்கும், இதைச் சோதனை செய்துவிட வேண்டும்" என்று எண்ணி, என்னிடம் தற் சமயம் ரூபாய் இல்லை யென்றும், அதற்காக வருந்துவ தாகவும் எழுதிவிட்டேன்.

அந்தக் கடிதம் எழுதிய மறு தினம் சென்னைக்கு ஒரு அவசர வேலையாகப் புறப்பட்டு வந்துவிட் டேன். வந்த இரண்டு தினங்களில் சுந்தரிக்கு ஞாபகமாக ஒரு கடிதம் எழுதி, கருப்பையா விலாசத்திற்கு அனுப்பி வைத்தேன்.

என்ன ஆச்சரியம்! அந்தக் கடிதத்திற்கு பதில் சுந்தரி அளவிலாத கோபத்துடன், அவளை நான் ரொம்பவும் ஏமாற்றி, மனதைக் கலைத்து, வஞ்சனை செய்து விட்டதாகவும், அவள் வாழ்க்கையைக் கெடுத்துவிட்ட சண்டாளன் என்றும் ஏக வசனமாக எழுதி யிருந்தாள்.

அடடா! அன்பையே பிழிந்து எழுதிய அந்தக் கடிதங்கள் எங்கே, இப்படி வசவுகளைப் பொழிந்திருக்கிற இந்தக் கடிதமெங்கே?

*　　*　　*　　*

சில நாட்களுக்குப் பிறகு, சென்னையில் வேலை முடிந்ததும் ஊருக்குப்போய் சேர்ந்தேன். என்னுடைய நண்பர் ஒருவர் என்னைக் கூப்பிட்டனுப்பினூர்; அவரைப் பார்க்கப்போனேன். "இதெல்லாம் தங்கள் கடிதங்கள் தானே?" என்று ஒரு கடிதக் கட்டைத் தூக்கி என் முன்னே போட்டார்.

என் உடம்பெல்லாம் வியர்க்க ஆரம்பித்து விட்டது. கால்கள் 'தட தட' வென்று ஆட ஆரம்பித்தது.

ஆம்; அதே கடிதங்கள்! அத்தனையும் நான் சுந்தரிக்கு எழுதிய கடிதங்கள் தான்!

‘நம்முடைய குட்டு இப்படி சந்தி சிரிக்க வெளிப் பட்டு விட்டதே’ என்று அவமானத்தினால் உள்ளம் நிலை தடுமாறியது, ‘இதனால் என்ன நேருமோ?’ என்ற பயம் வேறு உண்டாயிற்று. ஆனால் சமாளித்துக் கொண்டு “இதெல்லாம் எப்படி உங்களிடம் வந்தது?” என்று உளரிக் கொண்டே கேட்டேன்.

நண்பர் பலமாகச் சிரித்தார். என்னுடைய நிலைமை அவருக்குச் சிரிப்பை உண்டாக்கியது போலும்! என்ன கேவலம்! நண்பர் முதுகில் ஒரு தட்டுத் தட்டிக் கொடுத்தார். “ஒன்றும் பயப்படாதீர்கள். ஆபத்து ஒன்றுமில்லை, ஏமார்ந்துதான் போய் விட்டீர்கள்” என்றார்.

எனக்குக் கொஞ்சம் உயிர் வந்தது. “என்ன ஏமார்ந்து போய்விட்டேன்?” என்று ஆச்சரியத் துடன் கேட்டேன்.

“வேறு ஒன்றுமில்லை, தங்கள் சுவை ததும்பும் காதல் கடிதங்களுக்கு அன்பு சொட்டச் சொட்ட

பதில் எழுதியது ஸ்ரீமதி சுந்தரி அல்ல" என்றார் "என்ன என்ன!" என்று வியப்பினால் கூவினேன். "நண்பரே, அவைகளை எழுதியது என் தம்பிதான்" என்று சொல்லிவிட்டு மேலும் கூறினார்:— "கருப்பையா என்னுடைய வீட்டிலும் பால் கறக்கிறான். அவனுடைய பெட்டி, படுக்கை முதலியவைகள் இங்கே தான் இருந்தன. அவனும், என் தம்பியும் அதோ அந்த அறையில் உட்கார்ந்து கொண்டு அடிக்கடி ஏதோ எழுதிக் கொண்டிருப்பார்கள். என்னமோ எழுதுகிறார்கள் என்று நான் அவர்களைக் கவனிப்பதில்லை. ஒரு நாள் கருப்பையா நிறையப் பணம் வைத்திருப்பதைப் பார்த்தேன். அப்பொழுதும் 'நமக்கென்ன?' என்று சும்மா இருந்துவிட்டேன் மற்றொரு நாள் இந்தக் கடிதக் கட்டு கருப்பையாவின் பெட்டிக் கருகில் கிடந்தது. பிரித்துச் சில கடிதங்களைப் படித்துப் பார்த்ததும், கருப்பையாவைக் கூப்பிட்டு "இந்தக் கடிதங்களெல்லாம் ஏது?" என்று அதட்டிக் கேட்டேன். அவன் பயந்து போய், இந்தக் கடிதங்களெல்லாம் நீங்கள் தான் எழுதினீர்களென்றும், அவன் என் தம்பியைக் கொண்டு தங்களுக்குப் பதில் கடிதங்கள்

எழுதியதாகவும் சொன்னான். அந்தக்ஷணமே அவனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டோம்!'' என்றார்.

“ஹா! சுந்தரி, நீ வெறும் கற்பனைச் சுந்தரி தானா?'' என்று என் வாய் முணுமுணுத்தது.

என் நண்பர், “உங்களுக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம்?'' என்றார்.

“எனக்கு ஒன்றும் நஷ்டமேயில்லை'' என்றேன் “ஏன் ஸார் பொய் சொல்லுகிறீர்கள், நீங்கள் தான் ரூ. 250 கொடுத்தது கடிதத்தில் இருக்கிறதே'' என்றார்.

உடனே நான் பளிச் சென்று, “ஆமாம் ரூ. 250 கொடுத்தது வாஸ்தவம் தான். ஆனால் எனக்கு அது ஒன்றும் நஷ்டமில்லை. அதற்குப் பதில் நான் பெரிய லாபம் அடைந்திருக்கிறேன்'' என்றேன்.

‘அது எப்படி என்றார்?’ அவர்.

“எப்படியா? இப்பொழுது நான் ஒரு பெரிய எழுத்தாளனாகிவிட்டேன் அல்லவா? அது ஒரு

பெரிய லாபம் இல்லையா? கருப்பையாவும் அவன் சிருஷ்டித்த காதலும் இல்லாவிட்டால், நான் எழுத்தாளனாகியிருக்க முடியுமா? இப்பொழுது சொல்லுங்கள் லாபமா நஷ்டமா? என்றேன்.

"லாபம்தான்" என்று அவரும் ஆமோதித்தார்

*　*　*　*

நார்த்கிளிப், மைக்கேல் ஆர்லன் போன்றவர்களைவிட "எழுத்தாளராவது எப்படி?" என்ற கேள்விக்குப் பதில் சொல்லுவதற்கு நீங்கள் ரொம்ப ரொம்பத் தகுதியுடையவர்தான்" என்று என்னை மெச்சிக் கொண்டார் இதுவரை கதை கேட்டுக் கொண்டிருந்த எனது இனிய நண்பர்.



# ர சூ லா

ரரரரரரரரரரரரரசூசூசூசூசூசூசூசூசூசூசூலாலாலாலாலாலா

"ரசூலா" எவ்வளவு அழகிய பெயர்! உச்சரிக்கையிலே உள்ளத்தில் இன்பம் ஊறுகிறதல்லவா? ஆனால் நல்ல வேளையாக "ரசூலா" என்பது ஒரு பெண்ணின் பெயரல்ல! அது ஒரு கப்பலின் பெயர். ஆகவே சத்தியமாக இது காதல் கதை அல்ல என்பதை நேயர்களுக்கு முன்னதாக உறுதி கூறுகிறேன். எனவே கூசாமல் படிக்கலாம்.

* * *

'ரசூலா' என்பது சிங்கப்பூரிலிருந்து நாகபட்டினம் வழியாகச் சென்னைவரும் பிரயாணிகள் கப்பல். அழகிய அந்தச் சிறுகப்பல் கடலில் மிதந்து வருவது வெகு கம்பீரமாக இருக்கும். சிங்கப்பூரிலிருந்தும் பினாங்கிலிருந்தும் தாய் நாடாகிய இந்தியாவுக்குத் திரும்பும்

பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு அது கடலில் மிதந்து வரும்போது பிரயாணிகளின் மனதி லுள்ள உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் போட்டி போட்டுக்கொண்டு வெகு வேகமாக ஓடிவருவது போலிருக்கும். அந்த அழகிய கப் பலில் நானும் எனது அருமை நண்பர் லெட்சு மணனும் பினாங்கிலிருந்து நாகபட்டினத்திற்குப் புறப்பட்டோம். மூன்று ஆண்டுகள் தாய் நாட்டைப் பார்க்காமல் பினாங்கிலே இருந்து விட்டு ஊர் திரும்பும்போது உண்டாகும் நாட்டுப்பற்று பாசம் இவைகளை அளவிட்டுக் கூறமுடியாது.

பினாங்கிலிருந்து கப்பலில் ஐந்து நாட்கள் பிர யாணம் செய்தால் நாகபட்டினம் வந்து சேர லாம். இந்த ஐந்து நாட்கள் கழிவது ஐந்துயுகம் கழிவதுபோல் தோன்றும். எங்கும் ஒரே கடல் மயமாக இருக்கும். "எங்காவது பூமியைப் பார்ப்போமா" என்ற ஆவல் கட்டுக்கடங்காது. நாகபட்டினம் நெருங்குகிறது என்று தெரிந்தால் கப்பலில் உள்ளவர்களின் கும்மாளத்தைச் சொல்லி முடியாது. வேகமாகப்போகும் கப்பல் ஊர்ந்து செல்வதுபோல் தோன்றும். அது

சகிக்க முடியாமலும் இருக்கும். கடலில் குதித்துக் கப்பலுக்குமுன் நீந்திக் கரைக்கு சென்று விடுவோமா என்ற தைரியம்கூட உண்டாகும். ஆனால் பிரயாணிகள் எல்லோரும் உயிரின்மீதும் கொஞ்சம் ஆசை உள்ளவர்களாதலால் அப்படிச் செய்யவும் மாட்டார்கள், அதற்குப்பதில் குட்டிபோட்ட பூனைபோல அங்கு மிங்கும் அலைவார்கள். திடீரென்று ஒருவர் ஆனந்தத் தாண்டவம் ஆடுவார் உடனே அவரைச்சுற்றி பலர் "என்ன என்ன" என்பார்கள். "அதோ பாருங்கள் பனைமரம்" என்று கத்துவார். "ஆமா பனைமரம், பனை மரம்" என்று எல்லோரும் குதூகலிப்பார்கள். ஒரு பனைமரத்தைக் கண்டாலும் அவ்வளவு ஆனந்தம் உண்டாகும். "அதோ நாகூர் ஆண்டவரின் கோபுரம் தெரிகிறது" என்று மற்றொருவர் சொல்லுவார். எல்லோரும் "ஆமா, ஆமா" என்று சொல்லிக் கொண்டு "சாமி ஆண்டவனே" என்று கையெடுத்துக் கும்பிடுவார்கள்.

'கடல் மயக்கம்' என்பதாகச் சிலருக்குக் கப்பலில் உண்டாகும். அவர்கள் ஐந்து நாட்களும் கப்பலில் படுத்த படுக்கையாகவே இருப்பார்கள்.

ஆகாரம் ஒன்றும் சாப்பிடப் பிடிக்காது. அவர்களும் "பனைமரம், நாகூர் ஆண்டவர்" என்ற சொற்களைக் காதில் கேட்டவுடன் துள்ளி எழுந்து திடீரென்று திடசாலிகளாக எகிறி முன்வந்து பார்த்து "இடி இடி" என்று சிரித்து மகிழ்வார்கள். இவை எல்லாம் மனிதர் களுடைய இயற்கை உணர்ச்சிகளை உணர்த்துகிறது. ஆனால் இந்த இயற்கை உணர்ச்சி முதலியவைகள் அந்த நாகபட்டினம் சுங்க அதிகாரிகளுக்குத் தெரியுமா? தெரிந்தால் காலை எட்டு மணிக்குக் கப்பலை விட்டிறங்கிய பிரயாணிகளைச் சோதனை செய்ய வேண்டுமென்பதற்காக இரவு பத்துமணி வரையில், சப் ஜெயிலில் அடைத்து வைப்பதுபோல் அடைத்து வைப்பார்களா?

"கஸ்டம் ஆபீஸ்" என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் இந்தச் சுங்கத்தீர்வைக் காரியாலயத்தின் பெயரைச் சரியாக உச்சரிக்கத் தெரியாததால் தான், சில நண்பர்கள் அதைக் 'கஷ்டம் ஆபீஸ்' என்று கூறுவதாக, வெகு நாள் வரை நான் நினைத்திருந்தேன். நேரே கண்ட போதுதான் ரகசியம் விளங்கிற்று, உண்மையிலே அது ரொம்பவும் கஷ்டமான ஆபீஸ்தான்!

அன்று நாங்கள் சுமார் இருநூறு பேர் இந்த 'கஷ்டம் ஆபீஸில்' பரிசோதனைக்காகவும், பின்பு அவர்கள் நோக்கபடி போடும் தீர்வைக்குப் பணம் கழற்றுவதற்காகவும் காத்திருந்தோம்.

'கஷ்டம் ஆபீஸ்' உத்தியோகஸ்தர் ஒருவர் எதையோ பறி கொடுத்தவர் போல் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார். அவருடைய ஓட்டத்துக்கு இடையூருகப் பாதையில் கிடந்த ஒரு குரிச்சியை ஆத்திரத்துடன் தூக்கி எறிந்தார். குரிச்சியின் கால் முறிந்தது. முறிந்த சத்தம் கேட்ட திக்கை எல்லோரும் நோக்கினேம். என்ன ஆச்சர்யம்! முறிந்த குரிச்சியின் ஓட்டைக் காலுக்குள்ளே யிருந்து சல சல என்று பவுன்கள் கொட்டின. எல்லோரும் ஸ்தம்பித்து விட்டோம் குரிச்சிக்கு சொந்தக்காரர், 'கஷ்டம் ஆபீஸை' ஏமாற்ற வேண்டுமென்று குரிச்சிக் காலைக் குடைந்து அதற்குள் பவுன்களைத் திணித்து மூடிக் கொண்டு வந்திருக்கிருர். அவருடைய துர் அதிர்ஷ்டம் இப்படி நேர்ந்து விட்டது. என்ன செய்வது! அதிகாரியைப் பின் தொடர்ந்தார், பூசாரியைப் பின்

தொடரும் ஆடுமாதிரி. பலன் இல்லை; பவுன்கள் பறிமுதலாயின.

இனி என்ன ஆகுமோ என்று நாங்கள் பயந்தோம். காரணமில்லாமல் எங்கள் குரிச்சிகளின் கால்களையும் அந்தக் 'கஷ்டம்' அதிகாரி ஒடித்துப் பரிசோதிக்க வேண்டுமென்றால் என்ன செய்வது? இதை நினைக்க நினைக்க எங்கள் எல்லாருக்குமே உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. எனக்குக் கொஞ்ச தூரத்தில் இருந்த ஒரு பிரமுகர் ஒரு பெரிய கல்யாணத் துணி விசிறியால் ஓயாமல் விசிறிக் கொண்டிருந்தார். அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். இதற்குள் பல 'கஷ்டம்' அதிகாரிகள் படை எடுத்து வந்து, திருடர்களை வளைத்துக் கொள்ளும் போலீஸ்காரர்களைப் போல் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

எனக்குப் பக்கத்தில் விசிறிக் கொண்டிருந்த செட்டியாரின் அருகில் ஒரு 'கஷ்டம்' அதிகாரி வந்து, மேலும் கீழும் உற்றுச் சந்தேகக் கண்ணோடு பார்த்தார். பிறகு, செட்டியாரிடமிருந்த பெரிய விசிறியைக் கேட்டு வாங்கிக் கொண்டு, " ஏன் ஐயா, பல சிறு ஓலை விசிறிகள்

உங்களுக்குப் பக்கத்தில் கீழே கிடக்க இவ்வளவு பெரிய விசிறியினுல் ஏன் சிரமப்பட்டு விசிறிக் கொள்கிறீர்கள்? என்று கேட்டார். அவர் கேட்டு முடிக்கு முன்பே, செட்டியார் பரபரப்புடன், "அதில் ஒன்றுமே யில்லே ஸார்; ஒன்றுமே யில்லே" என்று பதட்டப்பட்டார் "ஓ! அப்படியானுல் இதில் ஏதோ சூதிருக்கிறது" என்று கூறிய 'கஷ்டம்' அதிகாரி விசிறியின் துணியைப் 'பர்' என்று கிழித்தார். 'கிர்' என்று சில சிறு பொட்டணங்கள் கீழே வந்து விழுந்தன. பொட்டணங்களேப் பிரித்தால், அத்தனேயும் வைரங்கள்! அதிகாரியின் முகம் மலர்ந்தது; செட்டியாரின் தலே குனிந்தது. "என்னயா சங்கதி" என்ருர் 'கஷ்டம்' அதிகாரி. பரீட்சையில் முழிக்கும் பையன் மாதிரி, செட்டியார் திறுதிறு என்று விழித்தார். என்ன செய்துமென்ன? வைரம் பறி போயிற்று.

இந்த இரண்டு சம்பவங்களுக்குப் பிறகு, ஆங்கிலத் துரைமார்கள் அனேவரும் 'இந்தியத் துரைமார்கள்' புடை சூழ எழுந்தருளி, சாமான்கள் சோதிப்புப் படலத்தைத் தொடங்கினுர்கள். புதுப் புதுச் சந்தேகங்கள் அவதார

மாயின. எங்கள் சாமான்களுக்குப் பிடித்தது சனியன். நாற்காலிகள் ஒடிக்கப்பட்டன; பெட்டிகள் பிய்க்கப்பட்டன; மெத்தைகள், தலையணைகள் கிழிக்கப்பட்டு, உள்ளிருந்த பஞ்சுக்கு விடுதலை அளிக்கப்பட்டது.

ஓர் ஆங்கிலத் துரை, எனது நண்பர் லெட்சுமணன் பெட்டியைப் பரிசோதித்தார். பெட்டியில் மேலாக வைர நகை அடங்கிய கைப்பெட்டி ஒன்று வைக்கப்பட் டிருந்தது.

துரை எல்லாச் சாமான்களுக்கும் தீர்வை போட்டார். அவர் எடுத்த வைர நகையை ஆறாயிர ரூபாய் மதிப்பு வைத்து இரண்டாயிரத்தைநூறு ரூபாய் தீர்வையும் விதித்தார். நண்பர், "அது அசல் வைரமல்ல. ரங்கூன் கெமிகல் வைரம். என் கணக்குப்பிள்ளைக்காக வாங்கியது. அது ஆறாயிரம் ரூபாய் விலையுள்ளதல்ல. ரூ. 200 தான் பெறும்" என்று வெகு நேரம் வாதாடினார். துரை ஒப்புக்கொள்ளவில்லை; "யாரை ஏமாற்றுகிறாய்?" என்று ஆவேசமாகப் பேசி, "பணம் கட்டுவதைத் தவிர, வேறு வழியில்லை" என்று சொல்லி விட்டார். பார்த்தார் நண்பர். கொஞ்ச நேரம்

யோசித்தபின், "சரி, இப்பொழுது என்னிடம் பணம் இல்லை; ஊருக்குத் தந்தி கொடுத்து நாளைக்கு வரவழைத்துத் தீர்வை கட்டுகிறேன். சாமானைப் பெற்றுக் கொண்டு ரசீது கொடுங்கள்" என்று கேட்டார். துரையும் அதற்குச்சம்மதித்து, உடனே "ஆறுயிரம் ரூபாய் மதிப்புள்ள அசல் வைரம் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்குத் தீர்வை ரூபாய் இரண்டாயிரத்தைநூறு கட்டிவிட்டு, இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்" என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்.

உண்மையில் அது அசல் வைரமல்ல. ரங்கூன் கெமிகல் வைரம்தான். ஆனால் துரையின் 'கஷ்டம் ஆபீஸ்' சந்தேகக் கண்ணுக்கு அது அசல் வைரமாகத் தோன்றி விட்டது. "என்ன செய்யலாம்! லட்சுமணன் துர் அதிர்ஷ்டம்!" என்று நாங்கள் பேசிக்கொண்டோம்.

மறுநாள், நண்பர் இரண்டாயிரத்தைநூறு ரூபாயைக் 'கஷ்டம் ஆபீ'ஸுக்குக் கொண்டு வந்தார். நாங்களும் இன்னும் 'கஷ்டம் ஆபீஸ்'ரால் விடுதலை செய்யப் படாததால், அங்கே அடைபட்டுக் கிடந்தோம். நண்பர் அந்த

ஆங்கிலத் துரையிடம் சென்று, தீர்வை கட்ட ரூபாய் கொண்டுவந் திருப்பதாகவும், வைரத்தை எடுக்கும்படியும் சொன்னூர். துரை வைரத்தை எடுத்துக் கொடுத்தார். நண்பர் நாலுதரம் பார்ப்பதுபோல் பாசாங்கு செய்து பிறகு கம்பீர மாகத் தலை நிமிர்ந்து, துரையை நோக்கி "இது என் வைரமல்ல, என்னுடையது அசல் வைரம், இது ரங்கூன் கெமிகல் வைரம், என்னுடையதைக் கொடுங்கள்" என்ருர். துரை குதித் தெழுந்தார்; கொம்பு கிடுகிட்டிச் சத்தம் கேட்ட மஞ்சு விரட்டு மாடு மாதிரி துள்ளினூர். சொல் மாரிகள், வசை புராணங்கள் எல்லாம் ஆங்கிலத் துரையின் வாயிலிருந்து 'குபு குபு' என்று கிளம்பின. ஆனுல் நண்பர் துளியும் மசியவில்லை. கடைசியில் வைர பரிசோதகர் வரவழைக்கப்பட்டார். அவரும் "இது அசல் வைரமல்ல. இருநூறு ரூபாய் தான் பெறும்" என்று சொல்லிவிட்டார். ஆளும் ஜாதியைச் சேர்ந்தவரானுலும் அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வது? துரை கெஞ்சினூர்; நண்பர் மிஞ்சினூர்; விஷயம் கோர்ட்டேறியது.

கோர்ட்டில் துரை சொல்லிய வாக்கு மூலம்: "நான் லட்சுமணனிடம் வாங்கி வைத்தது

அசல் வைரம்தான்; ஆருயிரம் ரூபாய் விலே யுள்ளதே; ஆனால், இரும்புப் பெட்டியிலிருந்து யாரோ அதைக் கையாடி விட்டார்கள்.''

நீதிபதியின் தீர்ப்பு: "லெட்சுமணனுக்கு, துரையின் ரசீதுப்படி, துரை ஆருயிரம் ரூபாய் கொடுக்க வேண்டியது. லெட்சுமணன், ரூபாய் இரண்டாயிரத்தை நூறு தீர்வை கட்ட வேண்டியது.''

துரை என்ன செய்வார், பாவம்! அப்படிச் சொல்லாவிட்டால், அவருக்கு வேலே போய் விடுமாம்.

நண்பர் ரூபாய் ஆருயிரத்தைப் பெற்றுக் கொண்டு தாராளமாக இரண்டாயிரத்தைநூறு ரூபாய் தீர்வையைக் கட்டினர்.

நண்பரிடம், "பேஷ்! நரி முகத்தில் விழித்தீர்கள் போல் இருக்கிறது; மூவாயிரத்து முந்நூறு ரூபாய் சுலபமாய்த் தட்டி விட்டீர்கள்'' என்று சொல்லி, நாங்கள் அவரைப் பாராட்டினேம்.

அவரோ "ஆமாம், ஆனல் அநியாயமாக அந்த அருமையான ரங்கூன் கெமிகல் வைரம் போய்

விட்டதே, எங்கள் கணக்குப் பிள்ளைக்கு என்ன சமாதானம் சொல்லுவது? அதுதான் வருத்தமாயிருக்கிறது” என்றார்.

“வேறொன்றும் சொல்ல வேண்டாம் ‘ரசூலா’ கப்பலின் அதிர்ஷ்டத்தால் கிடைத்த ரூபாயைக் கொண்டு எவ்வளவு கெமிகல் வைரங்கள் வேண்டுமானாலும் வாங்கலாம் என்று சொல்லுங்கள்’ என்று நாங்கள் அவரைச் சமாதானப் படுத்தினோம்.

மராசர் பல்கலைக்கழக
அவ்வை
சண்முகம் நூலகம்.
மிழியல் துறை.